விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 24 சனிக்கிழமை (07.05.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 139

ரா ம் கோ
MADRAS CEMENTS.LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

போர் முனையில் நடந்தது என்ன?

## ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை நிராகரித்தார் இராணுவத் தளபதி

(மட்டக்களப்பு)

ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கையை தவறானது என இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய நேற்று நிராகரித்துள்ளார். போர்முனையில் நடந்தது எனக்கு மட்டுமே தெரியும் எனவும் அவர் கூறியுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)



## ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான மேன் முறையீட்டுப் பரிசீலனை திங்களன்று

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக மேன்முறையீடு செய்தவர்களின் விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை கச்சேரியடியில் அமைந்துள்ள வட மாகாண ஆளுநரின் உப அலுவலகத்தில் இடமாற்ற சபையினால் பரிசீலிக்கப்படும் என வட மாகாண கல்வி அமைச்சின் பதில் செயலாளர் ஆர்.ரவீந்திரன் அறிவித்துள்ளார்.

இம் மேன்முறையீட்டுப் பரிசீலனை நாளை 8ஆம் திகதி நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மேன்முறையீட்டுப் பரிசீலனைக்கு சமுகமளிப்பவர்கள் தங்களின் மேன்முறையீட்டு (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் கைதிகள் இணைந்து அடிப்படை உரிமை மீறல் மனு!

(கொழும்பு)

இலங்கையில் உள்ள அனைத்து அரசியல் கைதிகளும் இணைந்து அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை தாக்கல் செய்யவுள்ளனர். இந்த மனு இன்னும் இரண்டு மாதங்களுக்குள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில்அரசியல்கைதிகள்கொழும்பு, கண்டி, பதுளை, அநுராதபுரம், வவுனியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, காலி, நீர்கொழும்பு, திருகோணமலை என்ற பல்வேறு சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பலருக்கு 18 வருடங்கள் வரை குற்றச்சாட்டுக்கள் எவையும் சுமத்தப்படவில்லை.

பலர் வழக்கு தொடரும் நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந் நிலையில் இவர்கள் தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்பார்த்தே இந்த அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்படவுள்ளதாக அரசியல் கைதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. அறிக்கையை மாலைதீவு நிராகரிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுக்களை கடுமையாக எதிர்ப்பதாக மாலைதீவு தெரிவித்துள்ளது.

கொழும்புக்கு விஜயம் செய்துள்ள மாலைதீவின் வெளிவிவகார அமைச்சர் அகமட் நஸீம் நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு எதிராக இவ்வாறு கூறியுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவின் அறிக்கை குறித்து அரசுக்கு ரணில் ஆலோசனை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள்நிபுணர்குழு அறிக்கையை தருஸ்மன் அறிக்கையென அடையாளப் படுத்தும்படி அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கியவர் ரணில் விக்கிரமசிங்க என்று தெரியவந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையை இலங்கை அரசு தருஸ்மன் அறிக்கை என்றே அழைக்க வேண்டுமென்ற ஆலோசனையை அரசாங்கத்துக்கு வழங்கியது யாராக இருக்கலாம் என்ற கேள்வியே கடந்த நாட்களில் அனைத்து ஊடகங்களில் பணிபுரிபவர்கள் மத்தியிலும் மேலோங்கியிருந்தது.

அவ்வாறான நிலையில்தான் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான நிபுணர் (20ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 10 மில்லியன் யூரோவை இலங்கைக்கு வழங்கியது ஐரோ. ஒன்றியம்

(கொழும்பு)

ஐரோப்பிய ஆணைக்குழு இலங்கைக்கான தனது மனிதாபிமான உதவித் தொகையை மேலும் 10 மில்லியன் யூரோவினால் அதிகரித்துள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் தமது வீடுகளுக்கு திரும்பிச் செல்லவும் அவர்களுக்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்காகவும் மேலதிக இந்நிதி அளிக்கப்படுவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இம் மேலதிக நிதியானது இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகள் மற்றும் இவ்வருட ஆரம்பத்தில் கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் மனிதாபிமான உதவிகளை வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றில் கனிமொழி ஆஜர்

(சென்னை)



ஸ்பெக்ரம் அலைக்கற்றை ஊழலில் கனிமொழிக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்றும் ஊழல் சதித் திட்டத்திற்கு அப்போதைய தொலைத்தொடர்பு துறை அமைச்சர் ராசா தான் முழுக் காரணம் என்றும் கனிமொழியின் தரப்பில் நீதிமன்றில் வாதாடிய பிரபல மூத்த வழக்கறிஞர் (20ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி மன்றங்களை கண்காணிக்க இராணுவ அதிகாரிகள் நியமனம்?

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாக நடவடிக்கைகளில் இராணுவ அதிகாரிகளை ஈடுபடுத்த பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தீர்மானமொன்றை மேற்கொண்டுள்ளார்.

அதன் முதற்கட்டமாக தற்போதைக்கு காலி மற்றும் மாத்தறை நகர சபைகளின் நிர்வாக கண்காணிப்பு அதிகாரிகளாக இரண்டு பிரிகேடியர் தர இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். நகர சபைகளின் நிர்வாக நடவடிக்கை தொடக்கம் நகர ஆணையாளரின் அதிகாரங்கள் வரை அனைத்தையும் அவர்கள் கையில் எடுத்துள்ளனர்.

அத்துடன் நகர சபையின் நகர ஆணையாளர் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளை அழைத்து கூட்டமொன்றையும் நடத்தியுள்ளடன், பாதுகாப்பு அமைச்சின் நேரடி உத்தரவின் பேரிலேயே தாம் நிர்வாக கண்காணிப்பு அதிகாரிகளாக கடமையாற்றவுள்ளதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகளைக் கூட தமது (20ஆம் பக்கம் பார்க்க)

**Study & Work in UK Canada and India**



Intake Get Register Now Collecting
the Application Until June 30th 2011
Start the academic on September
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
(Free Financial Sponsor for UK Visa) இதுவரை உத்தரவாதப்
படுத்திய வீஸாக்கள் 40க்கு மேல் கிடைத்துள்ளன.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777


# ஆசிரியர் சங்கத்தின் அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலிருந்தும் வவுனியா மாவட்டத்திலிருந்தும் வன்னியிலிலுள்ள கல்வி வலயங்களுக்கு இட மாற்றம் பெற்றுச் செல்வதில் பல கஷ்ரத்தை எதிர்நோக்குகின்ற ஆசிரியர்கள் மேன்முறையீடு செய்த பிரதியுடன் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ்.மாவட்டச் செயலாளர் ந.நகுலநாதனை யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் நாளை 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00மணிக்கு சந்திக்கும்படி இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கோருகிறது.இக் கூட்டத்தில் இ.த.ஆ.சங்கத்தின் தாயகச்சங்க நிர்வாகிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந)


**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை அரசு உத்தரவாதப் படுத்திய நிறுவனங்களாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் நம்பிக்கையையும் இலகுவாகப் பதிவு செய்து அடைந்து கொள்ள

தொடர்புகளுக்கு:-0729994777


# தமிழர்களின் 'ஐயோ' ஓலமே ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை

## சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு



(கொழும்பு)

வன்னி இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் ஐயோ என தமிழர்கள் இட்ட ஓலமே ஐ.நா. அறிக்கையாக இன்று வெளிவந்துள்ளது. இவ்வாறான நிலையில் புதைகுழியில் இருக்கின்ற புலிகளின் சடலங்களை தோண்டியெடுத்து அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை நீடிக்க முயற்சிக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

புதைகுழியில் இருக்கின்ற புலிகளை தோண்டியெடுத்து அவசரகாலச் சட்டத்தை நீடித்துக் கொள்ள வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு இருக்கின்றது.நாட்டில் நிலவுகின்ற பொருட்களின் விலை அதிகரிப்பு, வேலை வாய்ப்பின்மை போன்ற காரணங்கள் நாட்டில் மக்கள் புரட்சி வெடிக்கும் காரணங்களாக இருக்கின்றன.புரட்சி வெடித்தால் அரசாங்கம் ஆறு மாதங்களுக்கு கூட ஆட்சியில் இருக்க முடியாத நிலைமை ஏற்படும்.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக கையெழுத்து வேட்டை நடத்துவதாலோ, ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதினாலோ எதுவித பயனும் கிட்டாது.முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் ஐயோ என்று போட்ட மரண ஓலமும் ஆயிரக்கண்க்கான மக்களின் கண்ணீரும் உயிர்த் தியாகமும் தான் ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கையாக வெளிவந்துள்ளது.

இந் நாட்டில் அறுபதாண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வரும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் இப்பொழுது தான் ஐ.நாவின் கதவை தட்டியுள்ளது எனவே அரசாங்கம் இனியும் காலம் தாழ்த்தாது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வினைக் காணவேண்டும் என்றார். (ச-5)

# அமெரிக்கா மீது தாக்குதல் நடத்த ஒசாமா திட்டமிட்டிருந்தார்!

## வாஷிங்டனிலிருந்து தகவல் கசிவு



(வாஷிங்டன்)

அமெரிக்காவில் நிலையங்கள் மீது தாக்குதல் நடத்த ஏகமனதாக திட்டமிட்டிருந்ததாக அமெரிக்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

பாகிஸ்தானின் அப்டாபாத்தில் இருக்கும் அந்த பெரும் வளாகத்தில் நடந்த விவகாரங்கள் தொடர்பில் அமெரிக்கா முதல் நாள் கூறிய தகவல்கள் கடந்த ஒரு வாரத்தில் படிப்படியாக கட்டவிழத் தொடங்கியிருக்கின்றன.

அங்கே உக்கிரமான துப்பாக்கிச் சண்டை நடந்ததாக முதலில் கூறப்பட்டது.ஆனால் அங்கே ஒரே ஒருவர் தான் அமெரிக்க படையினரை எதிர்த்து துப்பாக்கியால் சுட்டதாகவும் அதுவும் கூட இவர்கள் அங்கே போய் இறங்கிய உடன் அது நடந்ததாகவும் அமெரிக்க அதிகாரிகளே இப்போது ஒப்புக்கொள்கிறார்கள்.

ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டபோது அவரிடம் ஆயுதங்கள் எவையும் இருக்கவில்லை என்பதையும் இப்போது இவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ. அப்டாபாத்தில் இருந்த ஒரு இரகசிய வீட்டில் இருந்தபடி ஒசாமா பின்லேடன் தங்கியிருந்த வீட்டை பல நாட்களாக கண்காணித்து வந்தார்கள் என்று தற்போது அமெரிக்க ஊடக தகவல்கள் குறிப்புணர்த்துகின்றன.

இந்த தகவல் உறுதி செய்யப்பட்டால் இது அமெரிக்காவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பிளவை அது மேலும் அதிகரிக்கக்கூடும்.

ஒசாமா பின்லேடன் மீது தாங்கள் நடத்த இருக்கும் தாக்குதல் நடவடிக்கைகள் குறித்து பாகிஸ்தானுக்கு தாங்கள் முன்கூட்டி தகவல் தரவில்லை என்று கூறியிருந்த அமெரிக்க அதிகாரிகள் அப்படி தெரிவித்திருந்தால் அந்த தகவலை பாகிஸ்தானியர்கள் கசியவிட்டிருப்பார்கள் என்பதால் தான் அவர்களுக்கு முன் கூட்டி தகவல் தரவில்லை என்றும் காரணம் கூறியிருந்தார்கள்.

அமெரிக்கர்களின் இந்த கருத்தால் எரிச்சலடைந்த பாகிஸ்தான் இனிமேல் இப்படியானதொரு நடவடிக்கையை மேற்கொண்டால் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு குறித்து பாகிஸ்தான் மறுபரிசீலனை செய்யும் என்று எச்சரித்திருக்கிறது.

இந்த பிரச்சினையில் பாகிஸ்தானின் உளவுத்துறை கொஞ்சம் ஜாக்கிரதையுடனே பேசி வருகிறது.

ஒசாமா பின்லேடன் தங்கியிருந்த வீட்டு வளாகம் குறித்து தாங்கள் ஆரம்பத்தில் சந்தேகப்பட்டதாகவும் ஆனால் அங்கே ஒசாமா பின்லேடன் இருந்தது தங்களுக்கு தெரியாது என்றும் அந்த அமைப்பு கூறி வருகிறது.

ஆனால் இந்த கூற்று நம்பக் கூடியதா என்று விமர்சகர்கள் கேள்வி எழுப்பி வருகிறார்கள் மேலும் அங்கே ஒசாமா பின்லேடன் இருப்பது இவர்களுக்கு தெரியாமல் போனது ஏன் என்றும் அவர்கள் கேட்கின்றனர்.

யேமன் நாட்டில் பிறந்ததாகக் கூறப்படும் ஒசாமா பின்லேடனின் மனைவி தற்போது பாகிஸ்தான் அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டு வருகிறார்.அந்த வீட்டில் தான் ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்ததாகவும் இந்த கால கட்டத்தில் அந்த வீட்டின் மேல் மாடியை தாண்டித் தான் வேறு எங்கும் செல்லவில்லை என்று அவர் தெரிவித்திருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இதற்கிடையே இந்த வீட்டிலிருந்து அமெரிக்கர்களால் எடுத்துச் செல்லப்பட்ட தகவல்களின்படி அமெரிக்க ரயில் சேவைகள் மீது அல் கைதா தாக்குதல் நடத்த பரிசீலித்து வந்ததை குறிப்புணர்த்துவதாக அமெரிக்காவிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கான திட்டமிடல் எந்தளவுக்கு நடந்திருந்தது என்பது தெளிவாக தெரியவில்லை. (ச-5)


**விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் மாட்டின் லேனில் 2பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

சிறிது காலம் பாவித்த 6அடி நீளமான அதி குளிரூட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு: 0750407723

(4867)

**போட்டிப் பரீட்சைக்கான வகுப்புக்கள்**

**ஆரம்பம் நாளை ஞாயிறு பிற்பகல் ஒரு மணி**

**SLAS**

பொது உளச்சார்பு, பொது அறிவு, முகாமைத்துவ உளச்சார்பு, கட்டுரையும் சுருக்கமும் ஆகிய விடயங்கள்.

**SLEAS**

பொது உளச்சார்பு, கிரகித்தல், விடய ஆய்வு ஆகிய விடயங்கள்.

கடந்த கால வினாக்களை அடிப்படையாகக் கொண்ட மீட்டல் 8ஆம், 14ஆம், 15ஆம் திகதிகளில் பிற்பகல் ஒருமணிமுதல்5 மணிவரை,17, 18ஆம் திகதி காலை 9 மணி முதல் 4 மணி வரை நடைபெறும்.

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ்.போதனா வைத்தியசாலை எதிரே

(சி-3166)

**றோஸ் விற்பனைக்கு**

திருநெல்வேலி மேற்கு தலங்காவல் பிள்ளையார் வீதி கிருஷ்ணா றோஸாத் தோட்டத்தில் உண்டாக்கிய றோஸ் கன்றுகள் நம்பிக்கையானவை. 8வருடங்கள் நன்கு வளரக்கூடியவை.

விபரங்கள் நேரில்
போலிகளை வாங்கி
ஏமாறாதீர்கள்.

(4876)

**தவறிவிட்டது**

கண்டியில் இருந்து யாழ்.நோக்கி சென்று கொண்டிருந்த இ.போ. சபைக்கு சொந்தமான பேருந்தில் 05/05/2011 அன்று வவுனியாவில் இருந்து கொடிகாமம் வரை பிரயாணம் செய்யும் போது முருகண்டிக்கும் பளைக்கும் இடையில் தங்க நகைகள் அடங்கிய கைப்பை ஒன்று தவறிவிட்டது.கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க் கண்ட முகவரிக்கு தொடர்பு கொண்டு உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
கந்தசாமி– பத்மினி,
மதவுவைத்த குளம் வவுனியா.

T.P:0244922831,
0726215009,
0213207266

(சி-3163)

**31ஆம் நாள் நினைவஞ்சலி**

**தெய்வேந்திரம் சரஸ்வதி**



எமது நிறுவனத்தில் எழுதுவினைஞராக கடந்த பல வருடங்களாக பணி புரிகின்ற எம் அன்புக்குரிய செல்வி கோமளாவின் அன்புத் தாயார்

தெய்வேந்திரம் சரஸ்வதி

அவர்களின் 31ஆம் நாளில் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இவ்வண்ணம்
தரம் 06– 11 வரை
O/L பகல் நேர
வகுப்பு மாணவர்கள்,
நிர்வாகியும்,ஆசிரியர்களும்.

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(4868)

## இன்று ஒரு தகவல்

# அழைக்கும் குரல்

ஓர் அலுவலகத்தில் வேலைக்கு ஆள் தேவை. அதற்காக அங்கு நேர்முகத் தேர்வு நடந்து கொண்டிருக்கிறது. அது என்ன வேலை என்றால்... கம்பியில்லாத தந்திக் கருவியை இயக்கும் வேலை. நிறைய இளைஞர்கள் வாசலில் நேர்முகத் தேர்வுக்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

எல்லோரும் சும்மா உட்கார்ந்திருக்கவில்லை... அருகில் இருப்பவர்களிடம் எதை எதையோபேசி அரட்டை அடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால். அங்கு கடைசியில் உட்கார்ந்திருந்த ஓர் இளைஞன் மட்டும் யாரிடமும் பேசாமல் அமைதியாக உட்கார்ந்திருந்தான். தேர்வு அதிகாரிகள் இருந்த அறைக்குள்ளிருந்து கம்பியில்லாத தந்திக் கருவியின் சப்தம் மட்டும் இலோசாகக் கேட்டுக் கொண்டிருந்தது. அரட்டை அடித்துக் கொண்டிருந்த இளைஞர்கள் இந்தச் சப்தத்தை கவனிக்கவில்லை. அவர்கள் ஊர் விவகாரங்களை அலசுவதிலேயே குறியாக இருந்தார்கள்.

ஆனால், கடைசியில் தனியாக உட்கார்ந்திருந்த அந்த ஓர் இளைஞன் மட்டும் கம்பியில்லாத தந்திக் கருவியிலிருந்து வெளியான அந்த ஒலிக்குறிப்புக்களை கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். அதைக் கேட்டு முடிந்ததும் அவன் திடீரென்று எழுந்து அதிகாரிகள் இருந்த அறைக்குள் நுழைந்தான்.

'ஏன் இப்படி இவன்... யாரும் கூப்பிடாமல் திடீரென்று எழுந்து உள்ளே போகிறான்' என்ற விபரம் மற்றவர்களுக்குப் புரியவில்லை! உள்ளே சென்ற இந்த இளைஞன் சிறிது நேரம் கழித்து வெளியே வந்தான். அவன் வெளியே வரும் போது அங்கு வேலையில் நியமிக்கப்பட்டதற்குரிய உத்தரவுக் கடிதம் அவன் கையில் இருந்தது.

நியமனக் கடிதத்தை கையிலேயே வாங்கிக் கொண்டு வந்துவிட்டான்.

இதைப் பார்த்ததும் அங்கிருந்த மற்ற இளைஞர்கள் எல்லாம் கோபப்பட்டனர். ``இது என்ன நியாயம்!'' நாங்கள் இங்கு வந்து நீண்ட நேரமாகக் காத்துக் கொண்டிருக்கிறோம்... நீ கடைசியில் வந்தவன்...எங்களுக்கு முன்னால் நீ எப்படி உள்ளே போகலாம்... வரிசைப்படி எங்களை முதலில் சோதிக்காமல் திடீரென்று உனக்கு மட்டும் எப்படி உத்தரவுக் கடிதம் கொடுத்தனர்.? என்று கூச்சல் போட ஆரம்பித்தனர்.

அதற்கு அந்த இளைஞன் பின்வருமாறு பதில் கூறினான்.

`` உங்களையெல்லாம் சோதித்துவிட்டு அதற்குப் பிறகுதான் எனக்கு இந்த வேலையைக் கொடுத்தார்கள். அந்த அறைக்குள் இருந்த கம்பியில்லாத தந்திக்கருவி மூலமாக...ஒலிக்குறிப்புக்களினால் அந்த அதிகாரிகள் செய்தி அனுப்பினர். அதை நீங்கள் கவனிக்கவில்லை!'' என்றான்.

``என்ன செய்தி அனுப்பினார்கள்?'' என்று அதுவரையில் அரட்டையில் மூழ்கியிருந்த இளைஞர்கள் வினவினார்கள்.

`` அதிகாரிகள் ஒலிக்குறிப்பு மூலமாக அனுப்பிய செய்தி இதுதான். அதாவது, எங்களுக்கு எந்த நேரமும் அக்கறையும் கவனமும் உள்ள இளைஞனே தேவை. இந்தச் செய்தியைப் புரிந்து கொண்டு உள்ளே சென்றேன்... வேலை கிடைத்தது!'' என்று விளக்கினான் இளைஞன்.

அரட்டைக் கச்சேரியில்-வம்பளப்பதில்-கவனம் சிதறியதால் அங்கிருந்த மற்ற இளைஞர்களால் அதிகாரிகளின் அழைப்பை புரிந்து கொள்ள முடியவில்லை.

இந்தக் கதையை ஓர் ஆன்மீகப் பெரியவர் கூறியுள்ளார். இதன் மூலம் அவர் தெரிவிக்கும் கருத்து இதுதான்.

`` இறைவனும் இதுபோன்ற அழைப்புக்களை தொடர்ந்து நமக்கு அனுப்பிக் கொண்டே இருக்கிறார். இறைவனின் மொழியாக இயற்கை விளங்குகிறது. இயற்கையில் குறிப்புகள் வடிவத்தில் இருக்கும் அழைப்புகளை நாம் அமைதியாகவும் அக்கறையாகவும் இருந்து முயற்சி செய்தால் புரிந்து கொள்ள முடியும். கவனத்தைக் கண்டபடி சிதறவிடாமல் இருந்தால் இதைப் புரிந்து கொண்டு இறைவனை நெருங்கஷ முடியும்'' என்கிறார் அந்தப் பெரியவர்.

இது நமக்கெல்லாம் இறைவன் நடத்திக் கொண்டிருக்கும்-இயற்கை நடத்திக் கொண்டிருக்கும் நேர்முகப் பரீட்சை.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்.மாவட்ட செயலகத்தால் வீட்டுத் தோட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

2007ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் பயிர் *வளர்போம் தேசத்தைக்கட்டியெழுப்புவோம்* என்னும் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் மரக்கறி உற்பத்திக்கான துரித நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வருடம் இத்திட்டமானது கடந்த காலத்தில் நிலவிய எதிர்பாராத மோசமான காலநிலையில் விவசாயப்பயிர்களுக்கும் பாரிய சேதத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் மரக்கறி உற்பத்தி குறைவடைந்து அவற்றின் விலைகளும் அதிகரித்துள்ளமையால் அந்நிலைமையினைக் குறுகிய காலத்தில் நிவர்த்தி செய்யும் முகமாகவும் நுகர்வோருக்குத் தேவையான மரக்கறிகளை வழங்கும் முகமாகவும் மரக்கறி உற்பத்திக்கான துரித நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் அரச திணைக்களங்கள், பாடசாலைகள், அரச வதிப்பிடங்கள், பாடசாலை மாணவர்கள் என்போர் முழுமையான மரக்கறி உற்பத்தியில் ஈடுபடுவதற்றான அறிவுறுத்தல்கள் என்பன ஏற்கனவே சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் அனைத்துக்கும் வழங்கப்பட்டுவிட்டன.

மேலும் இத்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்கள். பாடசாலைகள், அரசாங்க உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் என்போரிடையான வீட்டுத் தோட்டப் போட்டிகளை எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் நடத்துவதற்கு மாவட்ட செயலகத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்போட்டிகள் தொடர்பான விண்ணப்பப் படிவங்களை அரச திணைக்களங்கள், பிரதேச செயலகங்கள், வலயக்கல்வி அலுவலகங்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாமென யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# தேசிய நாட்டிய நாடக விழாவிற்கு விண்ணப்பம்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் தேசிய நாட்டிய நாடக விழாவிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பாக சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியிலிருந்து விண்ணப்பிக்க விரும்புவோர் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப்பிரிவு, கலாசாரப்பிரிவில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு சண்டிலிப்பாய் பிரதேசசெயலர் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# இலங்கை இலக்கியப் பேரவையில் இலக்கிய நூல்களுக்கு விருது

இலங்கை இலக்கியப்பேரவை வருடாவருடம் சிறுகதை, கவிதை, நாவல், காவியம், சிறுவர் இலக்கியம், ஆய்வு ,சமயம், நாடகம், பல்துறைமொழிபெயர்ப்பு,(வேற்று மொழியிலிருந்து தமிழில்) ஆகிய துறைசார்ந்த இலக்கிய நூல்களுக்கு தெரிவின் மூலம் விருது வழங்கி வருகிறது.

கடந்த 2010ஆம் ஆண்டில் வெளிவந்த மேற்படி துறை சார்ந்த நூல்களுக்கு விருதுகள் வழங்கப்பட இருப்பதனால் குறிப்பிட்ட ஆண்டில் நூலினை வெளியிட நூலாசிரியர்கள் நூலின் பிரதிகளை விருதின் தேர்வுக்காக எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் சி.சிவதாசன்,செயலாளர்,இலங்கை இலக்கியப்பேரவை இல.58, கனகரத்தினம் வீதி,அரியாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்குமாறும் அல்லது சேர்ப்பிக்குமாறும் நூல்கள் இலங்கையில் பிரசுரமானதாக இருக்கவேண்டும் எனவும் செயலாளர் சி.சிவதாசன் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 100 | 70 |
| உருளைக்கிழங்கு | 65 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 60 |
| தக்காளி | 70 | 120 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 40 | 70 | 40 |
| கரட் | 70 | 100 | 70 |
| பூசணி | 25 | 40 | 30 |
| புடோல் | 30 | 30 | 30 |
| வாழைக்காய் | 30 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 120-140 | 130 | 110 |
| பெரிய வெங்காயம் | 55 | 60 | 60 |
| பாகற்காய் | 100 | 100 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 30 |
| கருணைக் கிழங்கு | -- | 80 | 90 |
| பயற்றங்காய் | 30 | 40 | 60 |
| லீக்ஸ் | 75 | 70 | 80 |
| பீற்றூட் | 40 | 60 | 50 |
| கறிமிளகாய் | 60 | 80 | 70 |
| முருங்கைக்காய் | 400-450 | 350 | 350 |
| போஞ்சி | -- | 80 | 100 |
| கத்தரிதம்புள்ள | -- | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 15-20 | 30 | 30 |
| தேசிக்காய் | 100-120 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 60 |

# இராசி பலன்

07.05.2011
(சித்திரை 24,சனிக்கிழமை)
சூரியஉதயம் காலை 5.57 மணிக்கு
சதுர்த்தி பிற்பகல் 2.50 மணிவரை
மிருகசீரிடம் முற்பகல் 7.59 மணிவரை
இராகுகாலம் 8.55-10.25 மணிவரை
சுபநேரம் 2.55-4.25 மணிவரை
சதுர்த்தி விரதம்

**மேடம்** வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், ஆதாயம் தரும் வேலை ஒன்றில் அக்கறை காட்டு வீர்கள், தொழில் நன்மை கருதி புதியவர்களை இணைக்கும் எண்ணம் உருவாகும்.

**இடபம்** ஆனந்தமான நாள், வருமானம் திருப்தி தரும், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**மிதுனம்** எப்படி நடக்குமோ என நினைத்த காரியமொன்று நல்லபடியாக நடைபெறும், நண்பர்களுடன் சேர்ந்து வெளியிடங்களுக்கு செல்லும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** அன்றாடப் பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனை பிரார்த்திப்பீர்கள், தொழிலில் சிறு மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், சயன சுகக்குறைவுண்டு.

**சிங்கம்** தொலைபேசி மூலம் சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம், எதிர்பார்த்த நன்மைகள் நடைபெறலாம், பயண வாய்ப்புகள் கைகூடுவதற்கான சந்தர்ப்பம் உருவாகும்.

**கன்னி** தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், நண்பர்களின் உதவிகள் கிடைக்கலாம், புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள்.

**துலாம்** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும் நாள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரும்.

**விருச்சிகம்** உடல் நலனில் கூடிய அக்கறை காட்ட வேண்டிய நாள், நல்லதைச் செய்தும் குறைகேட்க நேரிடும், எடுத்த காரியம் தாமதமாகும்.

**தனுசு** களஸ்திர சுகமுண்டு, உறவினர்கள் திடீரென வீடுதேடி வரலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், செய் தொழிலில் முன்னேற்றமுண்டு, எடுத்த கருமங்கள் கைகூடும்.

**மகரம்** தேவைகள் பூர்த்தியாகும், பழைய பிரச்சினைகள் தீர முழுமூச்சுடன் செயற்படுவீர்கள், தேகநலன் சீராகும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.

**கும்பம்** பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய முதலீடுகள் தொடர்பாக அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், பூமியால் இலாபமுண்டு.

**மீனம்** மனதில் இனம்புரியாத மகிழ்ச்சி குடிகொள்ளும், பேச்சில் கனிவு பிறக்கும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம்.

வளவன்





புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட மகாவித்தியாலய பவளவிழா நிகழ்வின் காலை அமர்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி சு.விஜயலட்சுமி தலைமையுரை நிகழ்த்துவதையும்,பிரமத விருந்தினராக கலந்துகொண்ட பாரம்பரிய கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் சிறு தொழில் விருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா உரை நிகழ்த்துவதையும் மேலுள்ள படங்களிலும் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் சுவிஸ் கிளையினால் மாணவர்களுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட சைக்கிளை அமைச்சர் மற்றும் அக்கிளையின் பிரதிநிதிகள் வழங்குவதையும், மாலைநேர நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் உரை நிகழ்த்துவதையும் பவளவிழா நிகழ்வில் கலந்துகொண்டவர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.


# UNIVERSITY OF JAFFNA

## BID NOTICE

The Chairman,University Procurement Committee, University of Jaffna will receive sealed Bids from the qualified contractors for the following services.

| Service Details | Refundable Deposit (Rs.) | Non-Refundable Deposit (Rs.) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|
| Providing Facilities Management Services for hostels at Siddha Medicine Unit, Kaithady, University of Jaffna. | 2,500.00 | 500.00 | M9/C10 (any field) or any organizations currently providing complete Facilities Management Services for any similar building. |
| Providing Facilities Management Services for Kanagasundram Male Hostel and Sivagnanasundram Female Hostel, University of Jaffna. | 15,000.00 | 500.00 | M7/C8 (any field) or any organizations currently providing complete Facilities Management Services for any similar building. |

Bids form may be obtained from the Deputy Registrar/Capital Works & Planning Unit, University of Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above fee at the shroff's Counter, University of Jaffna until 19.05.2011.

Perfected Bids should be sealed and marked with the job and the name of the service on the top left hand corner of the envelope and sent by registered post to reach the Registrar, University of Jaffna P.Box 57, Thirunelvely, Jaffna or deposited in the tender box kept at Registrar's Office, University of Jaffna.

Bids will be accepted till 2.00 p.m on 27.05.2011 and open immediately thereafter.

Bidders or their accredited representatives could be present at the time of opening of Bids.

Bid forms may be inspected by the Bidders free of charge at the Capital Works & Planning Unit of this University during office hours, if necessary.

P.O Box 57,
Thirunelvely,
Jaffna.
06.05.2011

Registrar
University of Jaffna.

(C-3164)


## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது

வடமராட்சி கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக உதவி அரசாங்க அதிபர் என். திருலிங்கநாதன் அறிவித்துள்ளார்.

பாரம்பரிய கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் சிறுதொழில் விருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தலைமையில் 10.05.2011ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மு.ப 9.30 மணிக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை மண்டபத்தில் நடைபெறவிருந்த கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (முன்னர் வெளிவந்த செய்தி 11 ஆம் பக்கத்தில்) (ச)

## அதிபர் பதவி வெற்றிடம்

தீவக கல்வி வலயத்தில் யா/யாழ்ற்ரன் கல்லூரி 1ஏபி பாடசாலையில் அதிபர் பதவி வெற்றிடம் ஏற்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ராதாகிருஸ்ணன் அறிவித்துள்ளார்.

தீவகக் கல்வி வலயத்தில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவை(I,2-I,2-II) ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதிபர் தரத்தினைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்காதவிடத்து வேறு வலயத்தில் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கிடைக்காதவிடத்து, கடமை நிறைவேற்று அதிபர் பதவிக்கு தீவக கல்வி வலயத்தில் கடமையாற்றும் இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்தவர்களின் (வகுப்பு I, வகுப்பு 2-I) விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

விண்ணப்பப் படிவங்களை தீவகக் கல்வி வலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத் திகதி 15.05.2011 ஆகும். (ச)

## வலி வடக்கில் மீள் குடியேற்றம்

தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஒன்பது கிராம அலுவலர் பிரிவுகள் மீள் குடியேற்றம் செய்யும் அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை மாவிட்டபுரம் கந்தசாமி ஆலய முன்றலில் நடைபெறவுள்ளதாக தெல்லிப்பளை பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் அறிவித்துள்ளார்.

இப்பகுதி மக்களை இந்நிகழ்வில் கலந்து கொள்ளும் பொருட்டு அன்றைய தினம் 12 மணிக்கு பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்குமாறும் பிரதேச செயலர் கேட்டுக் கொள்கிறார்.

மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ள கிராம அலுவலர் பிரிவுகள் வருமாறு,

கொல்லன்கட்டி-ஜே/225, நகுலேஸ்வரம்-ஜே/226, தெல்லிப்பளை-ஜே-/228, தந்தை செல்வாபுரம்-ஜே/230, மாவிட்டபுரம்-ஜே/231, மாவிட்டபுரம் தெற்கு-ஜே/232, பளைவீமன்காமம் வடக்கு-ஜே/236, பளைவீமன்காமம் தெற்கு-ஜே/237, வறுத்தலைவிளான்-ஜே/241 (ச)

## பணிப் பகிஷ்கரிப்பு

வவுனியா நகரசபை செயலாளர் அரசியல்வாதி ஒருவரால் அவமதிக்கப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து வவுனியா நகரசபை ஊழியர்களின் பணிப்புறக்கணிப்புக்கு ஆதரவு தெரிவித்து செட்டிகுளம், பம்பைமடு பிரதேச சபை ஊழியர்கள் வவுனியா சென்று நகர சபை ஊழியர்களுடன் இணைந்து எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, பளை, பூநகரி பிரதேச சபை ஊழியர்கள் இரண்டு மணி நேரம் அடையாள பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா நகர சபை ஊழியர்களின் போராட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபை ஊழியர்களும் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.



இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய சாரதி பயிற்சி பாடசாலை நேற்று கோண்டாவில் தலைமைக் காரியாலயத்தில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இணைந்து நாடாவை வெட்டி கட்டடத்தைத் திறந்து வைப்பதையும் பயிற்சிப் பாடசாலையை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# கலந்துரையாடலும் நூல் அறிமுக அரங்கும்

(யாழ்ப்பாணம்)

அவை -35 (போரும்) ஏற்பட்டில் கலந்துரையாடலும் நூல் அறிமுக அரங்கும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அல்வாய் கலையகத்தில் எழுத்தாளர் தெணியான் தலைமையில் நடைபெறும்.

சிறுவர் அரங்கின் சிறப்புக்கள் என்ற பொருளில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் கே. ஆர். கமலநாதன் உரை நிகழ்த்தவுள்ளார்.

புலோலியூர் ஆ. இரத்தினவேலோனின் புதிய பயணம் என்ற நூல் அறிமுக அரங்கும் இடம்பெறவுள்ளது.

இந்நூலின் அறிமுகவுரையை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் இ. இராஜேஸ்கண்ணன் ஆற்றுவார்.

நயப்புரையை பருத்தித்துறை பிரதேச செயலக முகாமைத்துவ அலுவலர் திருமதி த. கவிதா நிகழ்த்த ஏற்புரையை புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் ஆற்றுவார். (ஸ்ரீ-2)

## புனித யூதாதேயு ஆலய வருடாந்த திருவிழா

அரியாலை புனித யூதாதேயு ஆலய வருடாந்த திருவிழா கடந்த 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினந்தோறும் மாலை 5 மணிக்கு வழிபாடுகள் நடைபெற்று வருகிறது.

இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுமென பங்குத்தந்தை அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வாகரைப் பிரதேசத்தில் ஒருதொகை வெடி பொருட்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

வாகரைப் பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை வெடிபொருட்களை பாதுகாப்பு தரப்பினர் கண்டுபிடித்துள்ளனர்.

இதில் 10 கிலோகிராம் எடையுடைய குண்டு ஒன்றும் 30 கிலோகிராம் எடையுடைய மோட்டார் குண்டு ஒன்றும் ஐந்து கிலோகிராம் எடையுடைய குண்டு ஒன்றும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தவிர கைக்குண்டுகள் உட்பட மேலும் பல சிறிய ரக குண்டுகளும் 200 கிராம் எடையுடைய சீஃபோ ரக வெடி பொருட்களும் ஆயுதங்களும் கண்டு பிடிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

வாகரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி இராஜவீதியிலுள்ள ஸ்ரீ சக்திவேல் முருகன் தேவஸ்தான அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறும். இதில் 11ஆம் திருவிழா எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வைகாசி விசாகத்தன்று மாலை 5 மணிக்கு சுவாமி வீதியுலா வருவார். (ஸ்ரீ-2)

# சுழலும் சொல்லாடு களம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மத்திய கல்லூரி கலை மாணவர் மன்றம் நடத்தும் யாழ். முன்னணிப் பேச்சாளர்கள் பங்கு பற்றும் "சுழலும் சொல்லாடு களம்" எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறும்.

தொடக்கவுரையை யாழ். மத்திய கல்லூரி அதிபர் எல். ஓங்காரமூர்த்தி, அறிமுகவுரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

கம்பராமாயணத்தில் மந்தரை சூழ்ச்சியால் பெரிதும் பாதிப்புக்குள்ளான பாத்திரம் எது எனச் சொல்லாடு களம் இடம்பெறும் . இதில் பரதன் அல்ல கைகேயியே! என சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய ஆசிரியர் கு. பாலசண்முகன் கைகேயி அல்ல தசரதனே! என யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் நாகதமிழிந்திரன் தசரதன் அல்ல இராமனே! என யாழ். பல்கலைக்கழக கணக்கியற்றுறை தலைவர் பேராசிரியர் தி. வேல்நம்பி, இராமன் அல்ல இலக்குவனே என சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல், இலக்குவன் அல்ல பரதனே என கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் ஆகியோர் வாதங்களை முன் வைப்பர்.

இதன் போது கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிகள் பிரிவு சிரேஷ்ட விரிவுரையாளர் அ. குமாரவேல் ஆகியோர் நோக்குநர்களாகவும் பேராசிரியர் அ. சண்முகதாஸ் நடுவராகவும் பங்கேற்கவுள்ளார்.

அத்துடன் இளைய தலைமுறையின் இலக்கிய ஆர்வத்தை தூண்டும் வகையில் இந்நிகழ்வு ஆற்றுகை செய்யப்படுகிறது. (ஸ்ரீ-2)

# சிவப்பு நிறஷேர்ட் அணிந்து வந்த எம்.பி. வெளியேற்றப்பட்டார்

(கொழும்பு)

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் நாடாளுமன்ற விதிகளுக்கு முரணாக ஆடை அணிந்து வந்ததன் காரணமாக சபையிலிருந்து வெளியேறுமாறு கோரப்பட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் நேற்று முன்தினம் கடும்சிவப்பு நிறச்சேட் அணிந்து வந்தார். அதையடுத்து பிரதி படைக்கல சேவிதர் நரேந்திர பெர்ணாண்டோ அவரைச் சபையில் இருந்து வெளியேறுமாறு கோரினார்.

நான் அவரை வெளியேறுமாறும் முறையான ஆடை அணிந்து மீண்டும் வருமாறும் கோரினேன். அவர் அதன்படி செயற்பட்டார். என நரேந்திர பெர்ணாண்டோ தெரிவித்தார்.

சில வருடங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தங்கேஸ்வரி-சல்வார் அணிந்து வந்ததன் காரணமாக சபையிலிருந்து வெளியேறுமாறு கோரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)



## இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டி

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும் முதலாவது போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் கழகம் மோதவுள்ளது.

காலை 10.30 மணிக்கு நடைபெறும் இரண்டாவது போட்டியில் தும்பளை விவேகானந்தா கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை சென்தோமஸ் கழகம் மோதவுள்ளது.

பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் மூன்றாவது போட்டியில் வல்வெட்டித்துறை ஒற்றுமை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து குரும்பசிட்டி உதயசூரியன் கழகம் மோதவுள்ளது. (ஸ்ரீ-3-24)

## சமுர்த்தி உதவி பெறும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் விழா

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலகத்தின் சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றினால் கரவெட்டி பிரதேச சமுர்த்தி உதவி பெறும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நெல்லியடி தடங்கன் புளியடிமுருகன் ஆலய திருமண மண்டபத்தில் கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-3)

## கட்டடத்திறப்பு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பகுதிக்கு இன்று சனிக்கிழமை இரண்டு அமைச்சர்கள் விஜயம் செய்து 2 புதிய கட்டடங்களை திறந்து வைக்கவுள்ளனர்.

உள்ளூராட்சி திணைக்கள அமைச்சர் செனவிரட்னவும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவும் விஜயம் செய்கின்றனர்.

இவர்கள் பருத்தித்துறை பிரதேச செயலாளருக்காக புதிதாக கட்டப்பட்ட விடுதியையும் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சுகாதார உத்தியோகத்தர்களுக்காக கற்கோவளத்தில் அமைக்கப்பட்ட அலுவலகத்தையும் திறந்து வைக்கவுள்ளனர். (ஸ்ரீ-3-10)

## தரம்5 மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை

(அல்வாய்)

வடமாகாண கல்வி அமைச்சின் ஆரம்ப பிரிவு பகுதியினால் தரம் 5 மாணவர்களுக்கான மாதிரிப்பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதற்கான வினாப்பத்திரங்கள் சகல கோட்ட அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதிபர்கள் அவற்றைப் பெற்று இப்பரீட்சையை நடத்துமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## தமிழ்த் தினப் போட்டிகள்

(அல்வாய்)

அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டியில் கரவெட்டி. பருத்தித்துறைக்கோட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வெற்றியாளர்களும் மருதங்கேணி கோட்டத்தில் யா/குடத்தனை அ.த.க.பாடசாலையில் நடைபெற்ற போட்டியில் முதல் இரு இடங்களைப் பெற்றவர்களும் யா/மருதங்கேணி இ.த.க. பாடசாலையில் நடைபெற்ற போட்டியில் முதல் இரு இடங்களைப் பெற்றவர்களும் தெரிவுப் போட்டிகளின்றி நேரே வலய மட்ட போட்டிகளுக்கு உள்வாங்கப்பட்டோருக்குமான போட்டி அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது.

இதில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 9 மணிவரை யா/வடஇந்துமகளிர் கல்லூரியில் பிரிவு 2,3,4,5 இற்கான பேச்சு, பிரிவு 1,2,3,4,5 இற்கான பாவோதல், பிரிவு 1,2 இற்கான வாசிப்பு, பிரிவு 1 இற்கான ஆக்கத்திறன் கதைகூறல், விவாதம் திறந்த போட்டி, பிரிவு 2 இற்கான நடனம் தனி, பிரிவு 1 இற்கான இசையும் அசைவும், பிரிவு 2,3,4,5 இற்கான இசை தனி, இசை குழு 1,2, நாட்டார் பாடல், வில்லுப்பாட்டு ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரையும் வட இந்து மகளிர் கல்லூரியில் தமிழறிவு வினாவிடை திறந்த போட்டி, இலக்கிய நாடகம் திறந்த போட்டி, நடனம் தனி பிரிவு 3,4,5, நடனம் குழு 1, நாட்டிய நாடகம்( ஆடற்கதை) ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணிவரை யா/வடஇந்து மகளிர் கல்லூரியில் பிரிவு 1,3 ஆகியவற்றுக்கான பேச்சுப் போட்டி நடைபெறவுள்ளது.

(ஸ்ரீ-3-19)

## சங்காபிஷேகம்

(பருத்தித்துறை)

அல்வாய் பெருங்கலட்டி தில்லையம்பல பிள்ளையார் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை 1008 சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தில் கடந்த 29 ஆம் திகதி அலங்கார உற்சவம் ஆரம்பமாகியுள்ளது. இவ்வுற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை 1008 சங்காபிஷேகத்துடன் நிறைவடைகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-10)

## இணைந்த கணிதம் மாதிரிப் பரீட்சை

(அல்வாய்)

வடமாகாண கல்வி திணைக்களத்தினால் க.பொ.த உயர்தர பரீட்சை-2011 இற்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான இணைந்த கணிதம் மாதிரிப் பரீட்சை எதிர்வரும் 10,11 ஆம் திகதிகளில் முதலாம் கட்டம் நடத்தப்படவுள்ளதெனவும் வடமராட்சி வலய கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.ம.ஈஸ்வரதேவன் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-3-19)

## வெளிநாட்டிற்கு அனுப்புவதாக கூறி பணமோசடி செய்த நபர் கைது

(சாவகச்சேரி)

வெளிநாட்டிற்கு அனுப்புவதாகக் கூறி இரண்டு நபர்களிடம் தலா 50 ஆயிரம் ரூபா பெற்றதாக பி அறிக்கை மூலம் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபர் நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா இரு வெவ்வேறு வழக்குகளில் 5 ஆயிரம் ரூபா பிணையிலும் 50 ஆயிரம் ஆட்பிணையிலும் செல்ல அனுமதித்ததுடன் எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார். (ஸ்ரீ-3-29)




## சட்டவிரோதமாக பன்றி இறைச்சி கொண்டு வந்தவருக்கு அபராதம்

(கரவெட்டி)

பூநகரிப்பகுதியில் இருந்து பன்றி இறைச்சியை சட்டவிரோதமான முறையில் சாவகச்சேரி நகரப் பகுதிக்குக் கொண்டு வந்த இருவருக்கு 6 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 2 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கி சாவகச்சேரி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சம்பவதினம் சட்டவிரோதமான முறையில் பன்றி இறைச்சியை விற்பனை செய்யும் நோக்கத்துடன் கொண்டு வந்த பூநகரிப் பகுதியைச் சேர்ந்த இருவரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்து நேற்றைய் தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் மன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த பதில் நீதிவான் மன்றில் இரு நபர்களும் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு இருவருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் தலா ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

(ஸ்ரீ-3-24-29)

## அனுமதிப்பத்திரம் மற்றும் உரிய ஆவணங்கள் இன்றி வாகனம் செலுத்தியவருக்கு அபராதம்



(கரவெட்டி)

நெல்லியடிப் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரம் மற்றும் உரிய ஆவணங்களின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய நபருக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

மேற்படி நபருக்கு எதிராக நெல்லியடி பொலிஸார் நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் மன்றில் குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு மேற்படி அபராதத்தை விதித்துத் தீர்ப்பளித்தார்.

(ஸ்ரீ-3-24)


இந்தியாவின் புதுச்சேரி கலை மையத்தின் ஏற்பாட்டில் நேற்று யாழ். இந்துக்கல்லூரியில் சித்திரக்கண்காட்சி இடம்பெற்றது. இதில் வடமாகாண ஆளுநரின் பிரதம செயலர் எஸ். ரங்கநாதன் மங்கல விளக்கேற்றுவதையும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி நாடாவெட்டி திறந்து வைப்பதையும் அருகில் நல்லை ஆதீன குருமுதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் இந்திய துணைத் தூதரக அதிகாரி ரி.மகாலிங்கம் ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமா

# கோப்பாய் கோட்டமட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(கோப்பாய்)

கோப்பாய் கோட்டமட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் கோட்டக் கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

## பிரிவு - 1

**வாசிப்பு**

வ.ஸ்ரீசாகித்தியா (யா/அச்சுவேலி சென். திரேசா மகளிர் கல்லூரி), பு.பிரியங்கா (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்), ஜெ.சரண்யா (யா/புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை)

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

வி.றெனிஸ்ரன் (யா/நாவற்கிரி அ.மி.த.க. பாடசாலை), த.வைஷ்ணவி (யா/புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை), க.மதுஷன் (யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்).

**பேச்சு**

ஜெ.தரணிதரன் (யா/கோப்பாய் நாவலர் வித்தியாலயம்), இ.சாயினி (யா/அச்சுவேலி சென்.திரேசா மகளிர் கல்லூரி), அ.மகிழினி (யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்)

**பாவோதல்**

ஸ்ரீ.மினோசிகா (யா/கோப்பாய் மகா வித்தியாலயம்), கா.மதுரா (யா/நீர்வேலி றோ.க.த.க.வித்தியாலயம்), ச.கீர்த்திகா (யா/அத்தியார் இந்துக் கல்லூரி)

**இசையும் அசைவும்**

சி.எழிலவன் (யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), ம.சங்கவி (யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்), ஜெ.றோயல் தனுசியா (யா/கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலை)

## பிரிவு - 2

**வாசிப்பு**

செ.நிக்சனா (யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்), தூ.சாருஜா (யா/அச்சுவேலி சென்.திரேசா மகளிர் கல்லூரி), ம.மதுசாலினி (யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்).

**பேச்சு**

தி.சங்கவி (யா/அச்சுவேலி சென்.திரேசா மகளிர் கல்லூரி), த.டிலக்ஷிகா (யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), த.துசாலினி (யா/கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம்)

**பாவோதல்**

சி.மயூரன் (யா/கோப்பாய் மகா வித்தியாலயம்), க.சுரேக்கா (யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்), த.கிருஷிகா (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி)

**இசை (தனி)**

ச.கஸ்தூரி (யா/நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை), மு.ஜனார்த்தனன் (யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), ர.ரஜனி (யா/அச்சுவேலி சென்.திரேசா மகளிர் கல்லூரி)

**நடனம் (தனி)**

பா.லோஜனா (யா/புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி), யோ.சரண்யா (யா/கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம்), ப.சர்மிலா (யா/அத்தியார் இந்துக் கல்லூரி)

## பிரிவு - 3

**பேச்சு**

வே.ஜந்துஜா (யா/அச்சுவேலி சென்.திரேசா மகளிர் கல்லூரி), தே.சுலக்ஷனா (யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), ஞா. டிலுக்ஷா நிரோஜினி (யா/கோப்பாய் மகா வித்தியாலயம்)

**பாவோதல்**

உ.துளசிகா (யா/கோப்பாய் மகா வித்தியாலயம்), இ.டயானி (யா/நீர்வேலி சீ.சி.த.க. பாடசாலை), த.உயிர்ப்பிரகாசினி (யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்)

**இசை (தனி)**

இ.கீர்த்திகா (யா/புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி), வி.றகீகான் (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்), உ.கார்த்திகா (யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி)

**நடனம் (தனி)**

ர.சத்தியப்பிரியா (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்), ச.ஐஸ்வர்யா (யா/புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி), க.யதுர்சனா (யா/அத்தியார் இந்துக் கல்லூரி)

## பிரிவு - 4

**பேச்சு**

ஜெ.கோபிகா (யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்), பா.சங்கீர்த்தனா (யா/அச்சுவேலி சென்.திரேசா மகளிர் கல்லூரி), ந.ஜெயவானுஜன் (யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)

**பாவோதல்**

ந.கார்த்திகாயினி (யா/கோப்பாய் மகா வித்தியாலயம்), தெ.தனுஷா (யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்), ச.சன்சியா (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்)

**இசை (தனி)**

ம.ஆரபி (யா/இடைக்காடு மகா வித்தியாலயம்), கு.மயூரதி (யா/புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி), க.கஜேந்தினி (யா/கோப்பாய் மகா வித்தியாலயம்)

**நடனம் (தனி)**

சி.கொசலா (யா/அத்தியார் இந்துக் கல்லூரி), ம.பிறைற்றா (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி)

## பிரிவு - 5

**பேச்சு**

கு.நேருஜன் (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி), கு.கஜிதா (யா/இடைக்காடு மகா வித்தியாலயம்), வ.கிரஷாந்தி (யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)

**இசை (தனி)**

இ.தர்சிகன் (யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி), ர.தேனுஜன் (யா/இடைக்காடு மகா வித்தியாலயம்), த.ஷியாந்திகா (யா/புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி)

**நடனம் (தனி)**

ச.சுகன்யா (யா/அத்தியார் இந்துக் கல்லூரி)

**இசை (குழு - 1)**

யா/புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி, யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம், யா/அச்சுவேலி மத்திய கல்லூரி

**இசை (குழு - 2)**

யா/அத்தியார் இந்துக் கல்லூரி, யா/புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி, யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி

**நடனம் (குழு)**

யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, யா/அத்தியார் இந்துக் கல்லூரி, யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி

**நாட்டிய நாடகம்**

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி

**நாட்டார் பாடல்**

யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம், யா/புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி, யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

**மேடை நாடகம்**

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம், யா/ஊரெழு கணேசா வித்தியாலயம், யா/பத்தமேனி இரட்ணேஸ்வரி வித்தியாலயம்

**வில்லுப்பாட்டு**

யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்

**விவாதம்**

யா/அச்சுவேலி சென்.திரேசா மகளிர் கல்லூரி, யா/அச்சுவேலி மத்திய கல்லூரி, யா/புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி

**தமிழறிவு வினாவிடை**

யா/அத்தியார் இந்துக் கல்லூரி, யா/இடைக்காடு மகா வித்தியாலயம், யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்.

(ஸ்ரீ)


## சம்பூரண அரிச்சந்திரா இசைநாடக

# இறுவட்டு வெளியீட்டு விழா

காலம்: 08.05.2011 (ஞாயிறு பி.ப 3 மணி)

இடம்: சுன்னாகம் கதிரமலைச்சிவன் கோயில் மணிமண்டபம்

தலைவர்: சமூகசோதி த.பரராசசிங்கம் J.P அவர்கள்

பிரதம விருந்தினர்: பேராசிரியர் அ.சண்முகதாஸ் P.H.D அவர்கள்

ஆசியுரை: * முத்தமிழ்க் குருமணி சகலாகம சங்கிரகர் சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் (பிரதம குருக்கள், சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தானம்)
* சிவஸ்ரீ கு.தியாகராசக் குருக்கள் (நீர்வைமணி) (பிரதம குருக்கள், காமாட்சி அம்பாள் ஆலயம், நீர்வேலி)

வாழ்த்துரை: சிவத்தமிழ் சொல்லழகர் திரு.ச.லலீசன் அவர்கள் (விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்)

வெளியீட்டுரை: கலாவிநோதன், கலாபூசணம், வில்லிசை வேந்தன் திரு.க.நா.கணபதிப்பிள்ளை (சின்னமணி)

முதற்பிரதி பெறுபவர்: மனிதநேய ஈகையாளன், கல்விக் காருண்யன் திரு.ஈ.எஸ்.பி.நாகரத்தினம் (கஜமுகன் ஹாட் வெயர்ஸ், யாழ்ப்பாணம்)

பிரதம விருந்தினர் உரை:

நீர்வேலி காமாட்சி அம்பாள் ஆலய வளர்ச்சி நிதிக்காக நீர்வேலி, மாவிட்டபுரம் இளைஞர்கள் வழங்கும் இவ் இறுவட்டில்

அரிச்சந்திரன்: திரு.வீ.டேவீந்திரராசா (டேவிட்)

சந்திரமதி: திருமதி.லம்போதரன் ஜீவநந்தினி (நுண்கலைமாணி, வடக்கின் சங்கீத வசந்தம், கலாவித்தகர்)

சத்தியகீர்த்தி: திரு.ச.சசீவன் (மக்கள் வங்கி, அச்சுவேலி)

பக்கவாத்தியங்கள்: ஹார்மோனியச் சக்கரவர்த்தி திரு.பிலிப் ஜோன் கவாஸ் குழுவினர்

ஒலிப்பதிவு: சத்தியன், ஸப்தமி கலையகம், யாழ்ப்பாணம்

ஒளிப்பதிவு: றமேஸ் புலவர் வீடியோ, கோண்டாவில் • மனோ லைற், கோப்பாய்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி. — விழா ஏற்பாட்டுக் குழுவினர்

(சி-3162)


# புலிகளின் புலனாய்வு பிரிவினர் தமது அமைப்பை மீண்டும் கட்டியெழுப்ப முயற்சி

## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் தமது அமைப்பை மீண்டும் கட்டியெழுப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பு பலமான அமைப்பாகக் கட்டியெழுப்பப்பட்டதும் பலமாக இயங்கியதும் வெளிநாட்டு நிதியுதவிகள் மற்றும் ஆயுத விநியோகங்களின் அடிப்படையில் தான் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய நிலையில் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு மீண்டும் உயிரூட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெளிநாடுகளில் அதற்காக புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் நிதி சேகரிப்பும் நடைபெறுகின்றது.

அவ்வாறான முயற்சிகளின் பின்னணியில் உலகத் தமிழர் பேரவை மற்றும் பிரித்தானிய தமிழர் பேரவை போன்ற அமைப்புகள் செயற்படுகின்றன. அவர்களே புலம்பெயர் தமிழர்களிடம் நிதி திரட்டும் முயற்சிகளைப் பொறுப்பெடுத்துள்ளார்கள்.

அதேநேரம் விடுதலைப் புலிகளின் முன்னாள் புலனாய்வுப் பிரிவின் உறுப்பினர்கள் தங்கள் அமைப்பில் எஞ்சியுள்ளவர்களுடன் இற்றைவரைக்கும் தொடர்புகளைப் பேணிக் கொண்டுள்ளனர். வெளிநாடுகளிலும் அவர்களின் வலையமைப்பின் தொடர்புகள் பரவியுள்ளன.

ஆனாலும் அரசாங்கம் மற்றும் புலம்பெயர் தமிழர்களின் உதவியைக்கொண்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவும் நடவடிக்கைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ள வேண்டும். அதுதான் அவர்கள் முன்னுள்ள சரியான தெரிவாக இருக்கும் என்றும் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# மஹோற்சவம்

வல்வெட்டி வேவில் அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விக்னேஸ்வரசுவாமி தேவஸ்தான மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.45 மணிக்கு தீர்த்த திருவிழாவும் இடம்பெறும். (ஸ்ரீ-2)

# வியாழமாற்றம் உங்களுக்கு எப்படி?




**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை வரை)**

**"வி.ஐ.பி.க்கள் வந்திடுவார்! விரும்பியது எல்லாம் தந்திடுவார்!"**

"விதியை மதியால் வெல்லலாம்" என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் விருச்சிக இராசி நேயர்களே!

உங்கள் வாக்கு பலிக்கும். நீங்கள் காணும் கனவும் பலிக்கும். அதனால் தான் உங்களோடு, பழகுபவர்கள் எல்லோரும் உங்கள் யோசனைகளைக் கேட்டு நடக்கின்றனர். உங்கள் தோற்றப்பொலிவை பார்த்தோ, உங்கள் உடல் வலிமையைப் பார்த்தோ எடைபோட முடியாது. உடல்வலிமையைக் காட்டிலும், உள்ளத்தின் வலிமையை அதிகம் பெற்றவர்கள் விருச்சிக இராசிக்காரர்கள் தான்.

மூளை பலமே உங்களுக்கு மூல பலம். அதுவே உங்களுக்கு மூல தனம் என்றும் சொல்லலாம். சந்திரன் நீச்சம் பெற்ற இராசி உங்கள் இராசி என்றாலும், உங்கள் சிந்தனை உச்சம் பெற்றிருக்கும். யாருக்கும் வராத யோசனைகள் உங்களுக்கு வரும். மற்றவர்கள் பிரச்சினை எளிதில் தீர வழி வகுத்துக் கொடுப்பீர்கள்.

குரு உங்கள் இராசிநாதனோடு இணைந்து குருப்பெயர்ச்சியன்று உங்கள் இராசிக்கு 2, 10, 12 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். ஜீவன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு இந்த ஆண்டு போதுமான வருமானத்தை அள்ளிக் கொடுப்பார். பணம் பலவழிகளிலும் வந்து பையை நிரப்பும். பக்கத்தில் இருப்பவர்களின் ஒத்துழைப்பும் கூடும்.

**ஆசைகள் நிறைவேறும் குருப் பெயர்ச்சி**

இத்தனை மகத்துவம் வாய்ந்த உங்கள் இராசிக்கு இதுவரை ஐந்தாமிடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் 08.05.2011 முதல் ஆறாமிடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக, வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். மேஷத்தில் சஞ்சரிக்கும் குரு உங்கள் ஆசைகளை எல்லாம் நிறை வேற்றுவார்.

ஆறில் குரு வருகிற பொழுது, அதன் பார்வை பலம் கூடுதலாக இருக்கும். எதிரிகளை சமாளிக்கும் ஆற்றல் பெருகும். உதிரி வருமானங்களும், உத்தியோகம், தொழிலில் உன்னத முன்னேற்றமும் வந்து சேரும். பதவியில் இருப்பவர்கள், இரவு - பகலாக பாடுபட்டதற்கேற்ற பலன் இப்பொழுது கிடைக்கும்.

தனாதிபதியாகவும், பஞ்சமாதிபதியாகவும் குரு விளங்குவதால், பணத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கையும் கூடும். தனவரவு அதிகரிக்கும். தாராளமாகச் செலவிட்டு, ஏராளமாக பொருட்களை வாங்கி மகிழவும் குருவை நீங்கள் முறையாக வழிபட வேண்டியது அவசியமாகும்.

குருப்பெயர்ச்சிக்கு முன்னதாகவே, கேட்டை அல்லது ரேவதி நட்சத்திரமும் இணையும் நாளில், நடைபெறும் குரு ஹோமங்களில் கலந்து கொள்வதன் மூலமும், விதியை மாற்றியமைக்கும் தலங்களுக்குச் சென்று வருவதன் மூலமும் வியக்கும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம்.

*"தேவகுரு ஆறில் வந்தால்,*
*தேவைகள் பூர்த்தியாகும்!*
*ஆவல்கள் தீரவேண்டின்*
*அனுசரிப்பும் தேவையாகும்!*
*கோபத்தை விலக்கினால்தான்*
*குடும்பத்தில் அமைதி கூடும்!*
*தீபத்தில் குருவைக் கண்டு,*
*தரிசித்தால் நன்மை சேரும்!"*

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, ஆறாமிடத்தில் சஞ்சரிக்கும் குருவால் ஆற்றல்கள் பளிச்சிடப் போகின்றன.

கூட்டு முயற்சியில் மாற்றங்கள் ஏற்பட்டு, தனித்தியங்கும் சூழ்நிலை உருவாகலாம். கொள்கைப் பிறப்பை ஒருசில சமயங்களில் தளர்த்திக் கொள்ள நேரிடும். குடும்பத்தில் உள்ள பெரியவர்களை அனுசரித்தும், அவர்களது ஆலோசனைகளைக் கேட்டும் நடந்தால், உங்கள் எண்ணங்கள் நிறைவேறும்.

ரோக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு ஆதிபத்ய அடிப்படையில் பார்க்கும்பொழுது, உங்கள் குடும்பத்தினர்களில் யாரேனும் ஒருவருக்கு ஆரோக்கிய பாதிப்பும், அதனால் சிறுசிறு விரயங்களையும், கொடுக்கும் சூழ்நிலை உருவாகலாம். உத்யோகத்தில் எதிர்பார்த்தபடியே சலுகைகள் கிடைக்க மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டியது அவசியமாகும். எந்தச் செயலையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வதன் மூலம், யோகங்களை வரவழைத்துக் கொள்ளலாம்.

பஞ்சம ஸ்தானாதிபதியாகவும் குரு விளங்குவதால், பிள்ளைகளின் உத்தியோக நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். அவர்களின் கல்யாணம் மற்றும் கடல் தாண்டும் முயற்சிகளுக்கு செலவிட்டு மகிழ்வீர்கள். பெண் குழந்தைகளின் சுபச்சடங்குகள், பிரியமுள்ள உறவினர்களின் - இல்ல விழாக்களை எல்லாம் முன்நின்று நடத்துவீர்கள்.

**விதியை மாற்றும் வியாழனின் பார்வை!**

"குரு பார்க்க கோடி நன்மை" என்றும், "குரு சேர்ந்தால் கோடி நன்மை" என்றும் பழமொழி சொல்வார்கள். பொன்னவன் குருவின் பார்வை பதிந்தால், சாதாரண மனிதன் கூட சக்கரவர்த்தியாக மாறலாம். வீட்டில் இருப்பவர்களும் வேந்தர்களைப் போல மாறலாம். அரியணை ஏறும் யோகம் முதல் அன்றாட வாழ்க்கையை நன்றாக அமைத்துக் கொடுப்பது வரை குருவின் கையில் தான் இருக்கிறது.

அந்தக் குரு உங்கள் ராசிக்கு 2, 10, 12 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார். அந்த குருவின் பார்வை பதியும் இடமாக இருக்கும் தனம், வாக்கு, குடும்பம் என்னும் இடம் வலுவடைவதால், நீங்கள் கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலும். கொள்கைப் பிடிப்பு இருந்தும், அதைச் செயல்படுத்த முடியவில்லையே என்ற கவலை இனி அகலும். திணறடித்துக் கொண்டிருந்த பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்கும் விதத்தில் கைக்குப் பணம் வந்து கொண்டே இருக்கும்.

குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். உயர்ந்த மனிதர்களின் நட்பும், ஆதரவும் கிடைக்கும்.

குருவின் பார்வை பலன் 10ஆம் இடத்தில் பதிவதால், செயல் ஸ்தானம் பலம் பெறுகிறது. செய்யும் செயல்களில் இருந்த சிக்கல்கள் அகலும். சிறுசிறு பிரச்சினைகள் குடும்பத்தில் தலைதூக்கினாலும், அதைச் சமாளித்து விடுவீர்கள். விலை உயர்ந்த பொருட்களை கையாளுவதில் கவனம் தேவை. குழந்தைகளின் கல்வி நலன்கருதி எடுத்த முயற்சியில் எதிர்பார்த்த அளவு வெற்றி கிடைக்குமா என்பது சந்தேகம்தான். புதிய தொழில் கூட்டாளிகள் வந்திணையும் வாய்ப்பு உண்டு.

குருவின் பார்வை அயன சயன ஸ்தானம் எனப்படும் 12ம் இடத்தில் பதிவதால் பயணங்கள் அதிகரிக்கும். தொழில் அதிபர்களாக இருப்பவர்கள் இன்று இத்தாலி, நாளை நோர்வே, நாளை மறுநாள் மாஸ்கோ என்று சுற்றிக் கொண்டே இருப்பீர்கள். அலைச்சல் கூடும் இந்த நேரத்தில் ஆதாயமும் கிடைக்கும். நீண்டதூரப் பயணங்களை ஒரு சிலர் மேற்கொள்வர். பால்ய நண்பர்களின் உதவியால் புது முயற்சியொன்று கைகூடும்.

மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கவலைகள் மாறும். கோவில் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். அஞ்சல் வழியில் வரும் செய்தி ஆச்சரியப்பட வைக்கும். எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள். நடக்கும் தொழிலை விட்டு விட்டு, வேறு தொழிலை நாடிச் செல்வீர்கள். வீடு மாற்றங்கள் தானாகவே வந்து சேரலாம். வேற்று மனிதர்களின் ஒத்துழைப் போடு வியக்குமளவு முன்னேற்றம் காண்பீர்கள்.

**அக்கறை காட்ட வேண்டிய வக்ர காலம்!**

மேஷ இராசியில் சஞ்சரிக்கும் குரு 18.08.2011 முதல் 15.12.2011 வரை வக்ர இயக்கத்தில் இருக்கிறார். 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதி வக்ர கதியில் இருப்பதால், வரவைக் காட்டிலும் செலவு கூடலாம். தனவரவு தாராளமாக வந்தாலும், உடனுக்குடன் செலவாகிவிடும். குடும்பச் செலவு கூடும் இந்த நேரத்தில் வீட்டுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்கள் முதல் ஆடம்பர பொருட்கள் வரை வாங்குவதில் ஆசைகள் உருவாகும்.

தங்கம், வெள்ளி போன்றவைகளை வாங்கிச் சேர்க்கும் எண்ணம் மேலோங்கும் பழைய வாகனங்களை பழுது பார்ப்பதைக் காட்டிலும், புதிய வாகனங்கள் வாங்கலாமா என்ற சிந்தனைகள் வரும். அவ்வாறு, வாங்க நினைத்தவர்கள் அதிர்ஷ்ட எண்ணின் ஆதிக்கத்தில் வாங்குவது நல்லது. குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி எடுக்கும் முயற்சிகளுக்கு மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்புச் செய்வார்கள். இக்காலம் பொற் காலமாக இருக்க, மனித தெய்வ வழிபாடுகளையும், முன்னோர் வழிபாடுகளையும் மேற்கொள்வது நல்லது. அதோடு, மகத்தான குருவழிபாடும் செய்வது உத்தமம்.

இந்த குருப்பெயர்ச்சி நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறுவதற்கான வாய்ப்புகளைக் கொடுக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். கணவன் - மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். வக்ரகாலத்தில் மட்டும் வழிபாடுகளை முறையாக மேற்கொள்வது நல்லது. நந்தி வழிபாடு உங்களுக்கு நலங்கள் அனைத்தையும் வழங்கும். ஆகஸ்டு மாதத்திற்கு மேல் சொத்துக்கள் வாங்கும் அமைப்பும், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் நடைபெறும் அமைப்பும் உருவாகும். திசை மாறிய தென்முகக்கடவுள் வழிபாடும், தெசா புத்திக்கேற்ற தெய்வ வழிபாடும் உங்களுக்கு தித்திக்கும் விதத்தில் வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொடுக்கும்.

பவுர்ணமி தோறும் கிரிவலம் வந்து விநாயகப் பெருமான், முருகப் பெருமான், சிவபெருமான் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. கற்பக விநாயகரை கைதொழுது வழிபட்டால், அற்புதமான பலன்கள் வந்து சேரும் *(தொடரும்)*

**சிவல்புரி சிங்காரம்**

# இலங்கையை உலுப்பிவரும்

# ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கை

**தமிழாக்கம் தொடர் 6**

அநேகமான சந்தர்ப்பங்களில் பல சிவில் பிரஜைகளின் உயிர்களைப் பறித்த பொருளாதார மற்றும் சமய இலக்குகள் மீதும் அது தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொண்டது. எல்.ரி.ரி.ஈ புறந்தள்ளும் அரசியலைப் பின்பற்றியதோடு, 1990 ஆம் ஆண்டில் வடக்கில் தம் வீடுகளில் இருந்து முஸ்லிம் மக்களைத் துரத்தியதோடு, அதன் கட்டுப்பாட்டில் இருந்த எல்லைக் கிராமங்களில் வசித்த சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களைப் படுகொலை செய்தது.

தமிழ்மக்களை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக அதிகமாக வன்முறை, அச்சுறுத்தல் மற்றும் பயமுறுத்தலை எல்.ரி.ரி.ஈ பிரயோகித்தது. வலுக்கட்டாயமாக ஆட்சேர்ப்பதில், சிறுவர் சிறுமியர் உள்ளிட்ட வயது குறைந்தவர்களை படைவீரர்களாகப் பாவிப்பதில் எல்.ரி.ரி.ஈ ஈடுபட்டதும் தெரிந்த விடயமே.

அதன் நடைமுறை காரணமாக கனடா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா, ஐக்கிய இராசதானி மற்றும் ஐக்கிய அமெரிக்கக் குடியரசு ஆகியவற்றை உள்ளிட்ட நாடுகள் இவ்வமைப்பை தடை செய்ததோடு, 2011 செப்ரெம்பர் 11இன் பின்னர் தடை செய்வது மேலும் தீவிரமடைந்தது.

33. 1990 ஆம் ஆண்டுகள் தொடக்கம் மே 2009வரை, எல்.ரி.ரி.ஈ இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் பாரிய நிலப்பரப்பினை தன் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்ததோடு, அரசாங்கப் படையினரும் எல்.ரி.ரி.ஈ இனரும் பிரதேசத்தின் கட்டுப்பாட்டுக்காக போட்டியிட்டபோது, நாளடைவில் இந்த எல்லைக்கோடு மாற்றமடைந்தது.

நடப்பிலுள்ள ஒருதேசத்தை அது செயற்படுத்தி தானே அது என்ற தோற்றத்தை முன்வைக்க முனைந்தது. இதனை நோக்காகக் கொண்டு நன்கு வடிவமைக்கப்பட்ட சர்வதேச உபாயம் ஒன்றை அபிவிருத்தி செய்ததோடு, தன் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் அதன் காவல் அமைப்பு, சிறைச்சாலைகள், நீதிமன்றங்கள், உள் வரவுத் திணைக்களம், வங்கிகள் மற்றும் சில சமூகசேவைகள் ஆகியவற்றை நிறுவியது.

தரை, வான் மற்றும் கடற்திறன் கொண்ட முன்னேறியதொரு இராணுவத்தையும் அது கட்டியெழுப்பியதோடு, விரிவானதொரு உளவு பார்க்கும் அமைப்பின் உதவியுடன் கொரில்லா மற்றும் பாரம்பரிய நடைமுறைகளையும் மேற்கொண்டது.

34. வன்முறை மற்றும் அரச அடக்குமுறை காரணமாக அதிக எண்ணிக்கையிலான தமிழர்கள் மற்றும் ஏனையோர் சிறந்த பொருளாதார சந்தர்ப்பங்களுக்காக வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்ததால் இலங்கையின் புலம்பெயர்ந்த தமிழ் தொகை உலகின் பலபாகங்களிலும் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் வரை 1980 ஆம் ஆண்டுகள் முதல் வளர்ச்சியடைந்து புலம்பெயர்ந்தவர்கள் யுத்தம் நடைபெற்ற காலம் பூராகவும், அவர்களுள் சிலர் ஏன் ஏது என்று கேட்காதுஎல்.ரி.ரி.ஈ இனரு க்கு ஆதரவு வழங்கி, யுத்தம் நடைபெற்ற முழுக்காலப்பகுதியிலும் நிதி களை வழங்கி எல்.ரி.ரி.ஈ தவறிழைக்க வில்லை என வாதாடி முக்கியதொரு பங்கினை வகித்தனர்.

ஆயினும், ஆதரவு அனைத்தும் சுயமாகவே வழங்கப்படவில்லை. இலங்கைக்கு வெளியே அதிக எண்ணிக்கையிலான தமிழ் அகதிகள் வாழும் நாடுகளுக்கு எல்.ரி.ரி.ஈ அச்சுறுத்தல் உள்ளிட்ட அதன் நடைமுறைகளை விரிவாக்கி, அதனை தனிநாட்டிற்கான தமிழ் மக்களின் அபிலாசை என வருணணை செய்து 'அதனை அடைவதற்கான வழியாகப் பிரயோகித்தது. அது எவ்வித விமர்சனத்தையும் சகிக்காததோடு, எல்.ரி.ரி.ஈஇன் வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் குரல் எழுப்புவதற்கான எந்தவொரு சந்தர்ப்பத்தையும் அளிக்கவில்லை.

**(14) ஆ.சட்டத்தின் நல்லாட்சி மற்றும் மனித உரிமைகள் படிப்படியாக அழிந்துபோதல்**

நீதித்துறை உள்ளிட்ட அரச நிறுவனங்களில் அரசியல் ஈடுபாடு அதிகரித்தல், அத்தோடு சுயாதீனமாகத் தட்டிக்கேட்பதை நலிவடையச் செய்தல்.

1989இல் சிறியதொரு இடைவெளியைத்தவிர 1983 முதல் 2001 வரை மற்றும் மீண்டும் 2005 முதல் இன்று வரை அவசரகாலச் சட்ட ஆட்சி அமுலில் இருந்து வருகிறது. ஏனைய விடயங்களுள், தற்போது அமுலில் உள்ள அவசரகால ஒழுங்கு விதிகள் 1979ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடுப்பு சட்டத்துடன் சேர்ந்து, அரசாங்கத்திற்கு அசாதாரணமான அதிகாரங்களை வழங்குவதோடு, அதிகாரத்தின் துஷ்பிரயோகம் மற்றும் உரிமைகள் மீறல்கள் பற்றி ஆராய்வதற்கான நீதிமன்றங்களின் ஆளுமையைக் கட்டுப்படுத்துகின்றன.



35. இலங்கையின் 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு நாட்டின் கூறுபடாத சுபாவத்தை வலியுறுத்தியதோடு, தேசத்தின் தலைவர் அரசாங்கத்தின் தலைவர் மற்றும் ஆயுதப் படைகளின் தளபதியாக பதவி வகிக்கும் நிறைவேற்று ஜனாதிபதி ஒருவருக்கு பரவலான மற்றும் குவிசார்ந்த அதிகாரங்களை வழங்குகின்றது. மேலும், தனது வரையறைக்கு உட்பட்டவாறு ஜனாதிபதி எந்தவொரு அமைச்சுக்கும் தலைமை தாங்கலாம்.

தற்போது, ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ, பாதுகாப்பு, நிதி மற்றும் திட்டமிடல், துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் ஆகிய ஐந்து அமைச்சுக்களுக்குப் பொறுப்பாகவுள்ளார். உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றுக்கான தலைவர்களையும் நீதிபதிகளையும் நியமிப்பதற்கான ஜனாதிபதியின் அதிகாரத்தையும் அரசியல் யாப்பு நிலைநாட்டுகிறது.

மேலும், நெருங்கிய குடும்பத்தினரை ஜனாதிபதி நியமிப்பதற்கான கட்டுப்பார்டுகளும் இல்லை என்பதோடு, அத்தகைய தெரிவுகளைப் பாவிப்பதால், தற்போதைய அரசாங்கம் உறவினர்களுக்குச் சலுகை அளிக்கிறது என்ற விமர்சனத்தை எதிர்நோக்குகிறது.

36. அவசரகாலச் சட்டத்தின் கீழான நீடிக்கப்பட்ட காலப்பகுதிகள், அரசியல் யாப்பு அனுமதித்த அவசரகால ஒழுங்குவிதிகளைப் பார்த்தால், ஜனாதிபதியின் அதிகாரங்களை மேலும் வலுப்படுத்தல், அது போன்று ஏனைய சட்டங்களும், குறிப்பாக 1982ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க சட்டவிலக்கு உரிமைச் சட்டம் (1977 ஒகஸ்ட் முதல் 1988 டிசம்பர் 16 வரைக்கும் ஏற்புடையதான) பாரிய உரிமை மீறல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கான அரசாங்கத்தின் கடமையை மிகுந்த அளவில் நலிவடையச் செய்துள்ளன. சட்டத்தை அமுல் செய்வதற்காக அல்லது வேறு விதமாக பொது மக்களின் அக்கறைக்காக நல்ல நோக்குடன் சட்டப்படி அல்லது சட்ட விரோதமாக எந்தவொரு நடவடிக்கை தொடர்பாகவும் எந்தவொரு அமைச்சர், இராணுவ அதிகாரி அல்லது அவர்கள் பணிப்பின் கீழ் செயற்படும் எந்தவொரு நபருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுப்பதை இது தடை செய்கிறது. தண்டணையிலிருந்து விலக்கீட்டுரிமையை முறை சார்ந்த தாக்குவதன் மூலம், சட்டவிலக்கு உரிமைச் சட்டம் பயங்கரமானதொரு முன்மாதிரியை வழங்குகிறது.

37. அநேகமாக சூத்திரகாரர்கள் தண்டிக்கப்படாத, காணாமல் போதல்கள், சட்டத்திற்குப் புறம்பான செயல்கள் மற்றும் சித்திரவதை உள்ளிட்ட மனித உரிமைகள் மீறல்கள், அத்தகைய துஷ்பிரயோகங்களுக்கு எதிரான முறைசார்ந்த சட்ட மற்றும் அரசியலமைப்பின் கீழான பாதுகாப்புக்கள் இருந்த போதிலும், நேருவதற்கான சாதகமான சூழலை உருவாக்குவதற்கு இந்நடைமுறைகள் உதவியுள்ளன.

சட்டத்திலான பாதுகாப்பு இருந்த போதிலும் கற்பழிப்பு, பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் பாலியலைப் பயன்படுத்தல் ஆகியவற்றை உள்ளிட்ட பாலியல் சார்ந்த வன்முறைகளும் நேர்ந்துள்ளன. வலுக்கட்டாயமான காணாமல்போதல்கள் மற்றும் ஏனைய பாரிய மனித உரிமைகள் மீறல்கள் பற்றிய தொடர்ச்சியான அமைப்பினை ஆராய்வதற்கான பல ஜனாதிபதி ஆணைக்குழுக்கள், சில சந்தர்ப்பங்களில், உண்மையைக் கண்டறியும் முக்கியதேவையை நிறைவு செய்துள்ளன.

ஆயினும், இவை எதுவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்குவது அல்லது மீறல்களின் முறை சார்ந்த சுபாவம் பற்றி நடவடிக்கை எடுக்க வழிவகுக்கவில்லை. இந் நோக்கில் பார்க்கும்போது, தண்டணையிலிருந்து விலகீட்டுரிமைக்கு எதிராகச் செயற்படுவதற்கு, உண்மையை நிலைநாட்டுவதற்கு அல்லது நீதியைப் பெற்றுக் கொள்வதற்கு விசாரணை ஆணைக்குழுக்கள் பயனுறு கருவியாக அமையவில்லை.

38. அரசாங்க நிறுவனங்களைப் பலப்படுத்தி அவற்றின் சுயாதீனத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகள் 2001 இல் 17 ஆம் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு வழிகோலின. ஜனாதிபதியின் அதிகாரங்களை அரசியல் யாப்பினூடாக கட்டுப்படுத்துவதை நோக்காகக் கொண்ட அது பொலிஸ் தேர்தல்கள், மனித உரிமைகள், இலஞ்சம், நிதி மற்றும் பகிரங்கச் சேவை ஆகியவற்றுக்கான ஆணைக்குழுக்களின் நியமனங்களை மேற்பார்வை செய்வதற்கான சுயாதீன அரசியல் யாப்புச்சபையை ஏற்படுத்தியது.

மேலும், ஏனையவற்றுக்குப் புறம்பாக, உயர்நீதித்துறை, நீதிச் சேவை ஆணைக்குழு மற்றும் சட்டமா அதிபர் நியமனங்களை இச்சபை அனுமதிக்க வேண்டியிருந்தது. அண்மைக் கால ஜனாதிபதிகள் எவ்விதப் பாரிய விளைவுமின்றி அதனைப் புறக்கணிக்க முடியுமென்பதால் இத்திருத்தம் ஒப்பீட்டளவில் பயனற்றதாகி யுள்ளது. 2010 செப்ரம்பரில் பாராளுமன்றம் 18ஆம் திருத்தத்தை நிறைவேற்றியது. அது 17ஆம் திருத்தத்தைப் பயனற்றதாக்கியதோடு, அதன் சுயாதீனக் கட்டுப்பாடுகளுக்குமான நடவடிக்கைகளை அகற்றி ஜனாதிபதியின் பதவிக்கால மட்டுப்படுத்தல்களை இல்லாமலாக்கியது.

39.மூன்று தசாப்தங்கள் நடைபெற்ற யுத்தம் காரணமாக சகல பிரஜைகளின் மனித உரிமைகள் பாதிக்கப்பட்டு, சுயாதீன நிறுவனங்கள் தரமிழந்து சட்டத்தின் நல்லாட்சி நலிவடைந்தது. எல்.ரி.ரி.ஈ இக்கு எதிரான அதன் இறுதித் தாக்குதலுக்கு அரசாங் கம் தயாராகியபோது, மனித உரிமைகள் மேலும் பாதிப்படைந்ததோடு, பல நடவடிக்கைகள் காரணமாக சுயாதீன செய்தி அறிக்கை விடுதல், கருத்து வேறுபாடு மற்றும் மனிதாபிமான நடவடிக்கைகளுக்குக் கூட மேலும் பாரிய கட்டுப்பாடுகள் ஏற்பட்டன.

(தொடரும்)

# திராட்சையில் பீடைகளும் முகாமைத்துவமும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**பனிப்பூச்சியை முகாமைத்துவப்படுத்த...**

திராட்சைக் கொடியில் அதிகளவு சேதத்தை ஏற்படுத்தும் பனிப்பூச்சியை ஒருங்கிணைத்த முகாமைத்துவத்தின் மூலமே கட்டுப்படுத்த முடியும். இதற்காக திராட்சை செய்கையாளர்களினது நன்மை கருதி பனிப்பூச்சி பற்றி சென்ற வாரம் விரிவாகப் பார்த்தோமல்லவா?

இவ்வளவு திறமையுள்ள பனிப்பூச்சி வளிமண்டல வெப்பநிலை மாற்றத்திற்கு இயைந்து கொடுத்து தப்பிப் பிழைக்கும் ஆற்றலைக் கொண்டிருப்பதுவே இதனை கட்டுப்படுத்துவதில் ஏற்படும் சிக்கலாகும். ஆய்வு முடிவுகளின்படி வளிமண்டல வெப்பநிலை உயர உயர பனிப்பூச்சியின் வாழ்க்கை வட்டம் குறைவடைந்து செல்கின்றது. இதன் மூலம் அதிகரித்த வெப்ப நிலையில் அதனை ஒரு சாட்டாக வைத்து பனிப்பூச்சி எண்ணிக்கையில் பல்கிப் பெருகி விடுகிறது. எனவே, வெப்பநிலை அதிகரித்திருக்கும் காலங்களில் பனிப்பூச்சியானது தனது வாழ்க்கை வட்டத்தை சுருக்கிக் கொள்கிறது எனலாம். இந்த இடத்தில் நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும்.

வளிமண்டல வெப்பநிலை அதிகரிக்கும் காலங்களில் பயிர்களுக்கிடையிலான நுண்ணிய காலநிலையை (Micro climate) மாற்றியமைப்பதன் மூலம் பனிப்பூச்சியின் இனப்பெருக்கத்தை தடுத்திட முடியும். அத்துடன் பனிப்பூச்சி விரைந்து இனம்பெருகும். காலநிலையை சரிவரப் புரிந்து கொண்டால் அதனை மேலும் பரவ விடாமலும் தடுத்திட முடியும். **காற்றுள்ள போதே தூற்றிக்கொள்** என்பதனை பனிப்பூச்சியும் நன்கறிந்து வைத்துள்ளது. தனக்கியைவான சூழல் காரணிகளின் மாற்ற மறிந்து வாய்ப்பினை சரிவரப் பயன்படுத்திக் கொள்ளும் திறனைப் பாரீர்.

இவ்வாறான சூழ்நிலையில் பனிப்பூச்சியை கட்டுப்படுத்த மிகவும் அவதானமாக திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். இங்கே ஒருங்கிணைப்பு கட்டுப்பாட்டு முறைகளுக்கு மட்டுமல்லாது விவசாயப் பெருமக்களதும் ஒருங்கிணைவாகவும் இருக்க வேண்டும்.

திராட்சைக் கொடியில் பனிப்பூச்சியின் சேதத்தை குறைப்பதற்கு பல்வேறு வழிமுறைகளைக் கையாள வேண்டும். பூக்கள் பிடித்து காயுருப் பெறும் போது பனிப்பூச்சியைக் கட்டுப்படுத்தும் ஊடுபுகுந்து தாக்கும் பூச்சிப் பீடைநாசினிகளான இமிடாகுளோர்பிறிற்று (அட்மயர்) மற்றும் பைபுரோனில் (றீஜென்றட்) இன்னும் மெற்றாசிஸ் றொக்சு போன்றவற்றை விசிறலாம். ஆனால், பீடைநாசினிப் பிரயோகம் தனித்தொரு தீர்வை தந்துவிடாது. பூக்கள் அதிகமாக உருவாகும் போது பீடைநாசினியை நேரடியாக பூக்களின் மேல் விசுறுவதை தவிர்ப்பது பூக்கள் உதிருவதனைத் தவிர்க்கும். ஊடுபுகுந்து தாக்கும் பூச்சிநாசினிகளென்பதால் இலையின் மேலே விசிறினாலே போதுமானது.



இப்பனிப்பூச்சியின் கூட்டுப்புழுப்பருவம் நிலத்தினுள் மேலுள்ள உக்கல் படையினுள் இருக்கும். நிலத்தில் அதிகளவு கூட்டுரம் சேர்க்கப்பட்டிருந்தால் அதனுள் மறைந்து இருக்கும். இதனை கட்டுப்படுத்துவதற்காக மேலை நாடுகளில் பொலித்தீனினால் மண்ணின் மேற்பரப்பை மூடி விடுவர். இதற்கு கறுப்பு பொலித்தீனை (Black mulch) பயன்படுத்துவர்.

இதன்மூலம் கூட்டுப்புழுபருவம் நிலத்தில் சென்றடைவது தடுக்கப்படும். எங்களூரிலும் இவ்வாறான பொலித்தீனை நிலத்தில் விரிப்பது நல்லது எனினும் இதற்கென தனியான செலவு இருக்கும். பொலித்தீன் விரிப்பினால் நிலத்திலுள்ள களைகளும் கட்டுப்படுத்தப்பட்டு விடும்.மேலும் இருவித்திலை களைகளில் இப்பனிப்பூச்சி தங்கி வாழ்ந்து அதனை தனக்கிணைவான விருந்து வழங்கியாக மாற்றிக் கொள்கின்ற காரணத்தினால் இருவித்திலை களைகளான நாய்க்கடுகு, மூக்குத்திப்பூண்டு இன்னும் இருக்கும் ஏனையவற்றையும் முழுமையாக பிடுங்கியகற்ற வேண்டும்.

இதற்குப் பதிலாக பொலித்தீன் விரிப்பு பனிப்பூச்சியை கட்டுப்படுத்துவதோடு சேர்த்து ஏனைய களைகளையும் கட்டுப்படுத்தி விடும். இந்த முறைக்கு இணையாக இலைகுழைகளை பரப்பி விடுதலும் ஏற்றுக் கொள்ளப்படினும் அவை பனிப்பூச்சியை கட்டுப்படுத்த பெரிதும் உதவாது.

(தொடரும்)

---

# கமநல சேவைகள் ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படாததால் சிக்கல் நிலை

## மனித உரிமை ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

கமநல சேவைகள் ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படாததால் பிரதேச மட்டத்தில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் குத்தகை காணிகளில் பயிர் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு அநீதி இழைக்கப்படுவதாக ஆணைக்குழுவின் செயலாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிகேவா சுட்டிக்காட்டியுள்ளார்.

காணி உரிமையாளர்களுக்கும் குத்தகை காணிகளில் பயிர் செய்கையை மேற்கொள்வோருக்கும் இடையே பிரச்சினைகள் ஏற்படும் போது அதற்கான தீர்வை பெற்றுக்கொள்வதற்காக கமநல சேவைகள் ஆணைக்குழுக்களின் உதவியை நாட வேண்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் கடந்த 7 வருடங்களாக பிரதேச மட்டத்தில் கமநல சேவைகள் ஆணைக்குழுக்கள் ஸ்தாபிக்கப்படவில்லை என மனித உரிமை ஆணைக்குழுவின் செயலாளர் கூறியுள்ளார்.

கமநல சேவைகள் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் குறித்த ஆணைக்குழுக்கள் ஸ்தாபிக்கப்படாமை குத்தகை காணிகளில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வோரை வெகுவாக பாதித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக குறித்த விவசாயிகளின் உரிமைகள் மீறப்படுவதாகவும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான காணிகள் இல்லாமல் சிரமத்தை எதிர்நோக்குவதாகவும் மனித உரிமை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ)

---


# ஐ.நா. விடுதலைப்புலிகள் தொடர்பில் முதலில் விசாரணை நடத்த வேண்டும்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பு தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்பில் முதலில் விசாரணை நடத்த வேண்டுமென மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவசர காலச் சட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு தமது வரம்பை மீறிச் செயற்பட்டுள்ளதாகவும் இதனால் ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு வழங்கியவர்கள் பற்றியும் விசாரணை நடத்தப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகவே ஐக்கிய நாடுகள் அமைப்பு உருவாக்கப்பட்டதாகவும் பிரச்சினையை ஏற்படுத்துவதற்காக அல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலி ஆதரவு அமைப்புக்கள் மீளவும் இலங்கைக்கு நெருக்கடிகளை கொடுக்க முனைப்புக் காட்டி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ஸ்ரீ-2)

---

# அமைச்சரவைத் தீர்மானங்கள்

**இலவச கடவுச்சீட்டு**

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு ஏற்ப லிபியாவில் நிர்க்கதி நிலைக்கு ஆளாகி கடவுச்சீட்டு தொலைந்த நிலையில் நாடு திரும்பியவர்களுக்கு இலவசமாக கடவுச்சீட்டுகள் வழங்கப்படவுள்ளன.

அவ்வாறானவர்களுக்கு அபராதம் அறவிடாமல் கடவுச்சீட்டு வழங்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

**சூரிய சக்தி மின்சாரம்**

மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பாட்டலீ சம்பிக்க ரணவக்கவின் ஆலோசனைக்கு ஏற்ப மின்விநியோகம் கிட்டாத வீடுகளுக்கு சூரிய சக்தி மூலம் மின்சாரத்தை வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இதன்படி ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பாவனையாளர்களுக்கு சூரிய சக்தி மூலமான மின்சாரம் கிட்டவுள்ளது. இதனால் இவர்களுக்காக செல்விடப்பட்டு வந்த மண்ணெண்ணெய் மானியத் தொகையான 1.15 பில்லியன் ரூபாவை மிச்சம் பிடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தொழில்நுட்ப சட்டத்தில் திருத்தம்**

மீன்பிடி மற்றும் நீர்வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் டாக்டர் ராஜித்த சேனாரத்னவின் அமைச்சரவைப் பத்திரத்துக்கு ஏற்ப 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச தொழில்நுட்பச்சட்டத்தில் திருத்தம் கொண்டுவர அமைச்சரவை இணக்கம் கண்டுள்ளது.

**விவசாய அபிவிருத்தி சட்டத்தில் திருத்தம்**

கமநல சேவைகள் மற்றும் வனவிலங்கியல் துறை அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேனவின் ஆலோசனைப்படி 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்திலும் திருத்தம் கொண்டுவர அமைச்சரவைமுடிவு செய்துள்ளது.

(ஸ்ரீ-2)

# யாழ்.குடாநாட்டின் பூர்வீக மக்கள் பற்றி கந்தரோடையில் தொல்லியல் அகழ்வாய்வு

## யாழ். பல்கலையும் தொல்லியல் திணைக்களமும் ஆய்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள முக்கிய புராதன குடியிருப்பு மையங்களில் ஒன்றான கந்தரோடையில் கடந்த 20 ஆம் திகதியிலிருந்து தொல்லியல் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இலங்கைத் தொல்லியல் திணைக்களத்துடன் இணைந்து இப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை நடாத்தப்படும் முதலாவது அகழ்வாய்வு இதுவாகும்.

வரலாற்று இலக்கியங்களில் குடாநாட்டின் புராதன மக்கள் பற்றிய வரலாறு புகை படர்ந்த நிலையிலேயே காணப்படுகிறது.

இதனால் வரலாற்று அறிஞர்கள் மத்தியில் இப்பிராந்தியத்தில் எக்காலத்தில் இருந்து செறிவான மக்கள் குடியிருப்புக்கள் இருந்தது என்ற வாதப்பிரதிவாதங்கள் நீண்டகாலமாக நிலவி வந்தன.

சிலர் கி.பி. 10 ஆம் நூற்றாண்டெனவும் வேறுசிலர் கி.பி. 13 ஆம் நூற்றாண்டெனவும் இன்னும் சிலர் ஒல்லாந்தருடன் எனவும் கருத்துக்கூறி வந்தனர். ஆனால், 1970 களில் கந்தரோடையில் திட்டமிட்ட முறையில் அகழ்வு மேற்கொண்ட பென்சில்வேனியப் பல்கலைக்கழக அரும்பொருள் ஆய்வாளர் விமலாபேக்லே தலைமையில் நடந்த அகழ்வாய்வின் மூலம் இற்றைக்கு 2400 ஆண்டுகளுக்கு முன்னரே தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டை ஒத்த திராவிட மக்கள் சமகாலத்தில் இங்கும் குடியிருந்தனர் என்பதை உறுதிப்படுத்தினர்.

1980 களில் குடாநாட்டின் புராதன 40 குடியிருப்பு மையங்களை அடையாளப்படுத்திய கலாநிதி இரகுபதி அவற்றின் தலைமைக் குடியிருப்பாக கந்தரோடையைக் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் 1970 களில் விமலாபேக்லேயால் கண்டு பிடிக்கப்பட்ட சில தொல்லியர் சான்றுகள் சமகால நவீன காலக்கணிப்பிற்கு உட்படுத்திய போது அவற்றின் காலம் இற்றைக்கு 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதெனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் விமலாபேக்லேயால் அகழ்வு செய்யப்பட்ட இடத்திற்கு அருகே புதிய இடங்களில் அகழ்வினை மேற் கொண்டு குடாநாட்டின் பூர்வீக மக்கள் எக் காலத்தில் இருந்து வாழ்ந்து வருகின்றனர் என்பதை நவீன காலக்கணிப்பின் மூலம் உறுதி செய்வதே தற்போதைய எமது அகழ் வாய்வின் நோக்கமாகும்.

இந்த அகழ்வாய்வுக்கான நிதியை தொல்லியல் திணைக்களம் வழங்குவதுடன் இப் பணியில் தொல்லியல் திணைக்கள ஆய்வாளர்களுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் சிறப்பு பட்டதாரி மாணவர்களும் பேராசிரியர் கிருஷ்ணராஜா, பேராசிரியர் ப. புஷ்பரெட்ணம் மற்றும் இளம் தொல்லியல் விரிவுரையாளர்களும் பங்கு கொண்டுள்ளனர்.

இந்த அகழ்வாய்வில் பங்கு கொண்டு பயிற்சி பெறும் நோக்கில் தொல்லியல் வரலாற்றுச் சிறப்புக்கலை மாணவர்கள் சுழற்சி முறையில் பங்கெடுக்க பல்கலைக்கழக நிர்வாகம் ஏற்ற ஒழுங்குகளை செய்துள்ளது.

இவ்வகழ்வாய்வின் முடிவுகளை தொல்லியல் திணைக்களமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையும் இணைந்து வெளியிடவுள்ளனர். (ஸ்ரீ-2)

## பண்டத்தரிப்பு பத்திமா அன்னையின் திருவிழா

பண்டதரிப்பு பத்திமா அன்னையின் திருவிழா கடந்த 4 ஆம் திகதி ஆரம்பமாகி 9 நாட் கள் தொடர்ந்து நவநாள் திருப்பலி 4.30 மணிக்கு நடைபெற்று வருகிறது. இதில் எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 5.30 மணிக்கு முதல் திருப்பலியும் காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் மதியம் 12 மணிக்கு நோயாளர்களுக்கான திருப்பலியும் மாலை 4 மணிக்கு மாலைத்திருப் பலியும் ஒப்புக் கொடுக்கப்படும். (ஸ்ரீ-2)

## புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வு பிற்போடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் நடைபெறவிருந்த தமிழ்- சிங்கள புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வு அன்றைய தினம் நடைபெறமாட்டாதெனவும் அதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் கிளிநொச்சி வலயக் கல்வி பணிப்பாளர் த.குருகுலராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் பிர தேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி முயற்சி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறுமென உதவி அரசாங்க அதிபர் என்.திருலிங்கநாதன் அறிவித்துள்ளார்.

இவ் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# பட்டப்பின் படிப்பை தொடர்வோரை முழுநேர வகுப்புகளில் இணைத்துக்கொள்ள தீர்மானம்

(கொழும்பு)

பட்டப்பின் படிப்பை தொடர்வோருக்கு பல்கலைக்கழகங்களில் முழுநேரம் கல்வி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவது தொடர்பில் பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது.

இலங்கையின் பல்கலைக்கழகங்கள் பட்டப்படிப்பை மேற்கொள்வோரை இலக்கு வைத்தே அமைக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் குறைந்த எண்ணிக்கையிலானவர்களே பட்டப்பின் படிப்பை தொடர்வதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அவர்களுக்கான கல்வி வசதிகள் அநேகமாக வெளிவாரி கற்கை நெறிகள் ஊடாகவே வழங்கப்படுவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பட்டப்பின் படிப்பிற்காக வகுப்புக்கள் வார இறுதி நாட்களில் மாத்திரமே இடம்பெறுவதாகவும் பேராசிரியர் காமினி சமர நாயக்க கூறியுள்ளார். இதன்மூலம் பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதோடு அதன் தரத்தை பேணுவதிலும் சிரமம் ஏற்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார். மேற்கத்தேய நாடுகளைப்போன்று பட்டப்படிப்பினை தொடர்வோருக்கு மட்டுமல்லாமல் ,பட்டப்பின் படிப்பினை தொடர்வோருக்கும் முழுநேரம் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளதாக பேராசிரியர் காமினி சமர நாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

# குறுகிய அரசியல் நோக்கமுடையவர்கள் பயங்கரவாத ஒழிப்பை எதிர்க்கின்றனர்



## ஜனாதிபதி தெரிவிப்பு

குறுகிய அரசியல் நோக்கமுடையவர்கள் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளை எதிர்ப்பதாகவும் சில நபர்கள் தங்களது சுயலாபத்தை கருத்தில் கொண்டு செயற்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். சர்வதேச குடும்பநல தின நிகழ்வுகள் அலரிமாளிகையில் நடைபெற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இவ்வாறான சதித் திட்டங்களுக்கு தாம் அஞ்சப்போவதில்லை என ஜனாதிபதி தெரிவித் துள்ளார். சகலவிதமான முரண்பாடுகளையும் களைந்து அனைவரும் நாட்டைப் பாதுகாப்ப தற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார்.

30 ஆண்டுகளாக நாட்டில் நீடித்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்ததுடன், முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார். எவ்விதமான சாட்சியுமின்றி இலங்கைக்கு எதிராக சில தரப்பினர் குற்றச்சாட்டுக்களை அடுக்கிச் செல்வதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வடமாகாணத்திலுள்ள பாலூட்டும் தாய்மார் மற்றும் சிறுவர்களின் நலன்கருதி நிதியுதவி

(கொழும்பு)

வடமாகாணத்திலுள்ள பாலூட்டும் தாய்மார் மற்றும் சிறுவர்களின் சுகாதார நலன் கருதி உலக வங்கியின் ஊடாக ஜப்பான் சமூக அபிவிருத்தி நிலையம் நிதியுதவி வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

இதற்கமைய 2.7 மில்லியன் டொலர்கள் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கை யொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இரண்டு வருடத் திட்டத்தின் மூலம் சிறார்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் போஷாக்குக் குறைபாடுள்ளவர்களின் போஷாக்கு நிலைமையை முன்னேற்ற எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் தாய்மார்களுக்கான சுகாதார துறைசார் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ)



கோட்டை,கொட்டி ஸ்ரீஞானபால வைரவர் ஆலயத்தில் மகா சிவராத்திரி தினத்தன்று ''சொல்லருவி'' த.கருணாகரன் ''சிவராத்திரியின் மகிமை'' பற்றி சொற்பொழிவாற்றுவதையும் சைவ வினாவிடைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.


# கிளிநொச்சி மாவட்ட தொண்டராசிரியர்கள், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான அறிவித்தல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் தற்போது தொண்டராசிரியர்களாக கடமையாற்றிக் கொண்டிருப்பவர்களையும் கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளிகளில் முன்பள்ளி ஆசிரியர்களாக கடமையாற்றிக் கொண்டிருப்பவர்களையும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பின் போது தொண்டராசிரியர்களும் முன்பள்ளி ஆசிரியர்களும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் அனைத்துத் தொண்டராசிரியர்களையும் முன்பள்ளி ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# எது புனிதத்தலம்?



## ஆன்மீகம் 11

சக்திநிலை பற்றி நான் எதுவும் பேசவேண்டியதில்லை. காட்டு விலங்குகள்கூட நம்மிடம் நல்ல முறையில் நடந்து கொள்கின்றன. ஏனெனில் இந்த இடத்தில் காலெடுத்து வைக்கும்போதே அவை தங்களையும் அறியாமலே தீட்சை பெற்று விடுகின்றன.

குழப்பத்தைப் பற்றிய உங்கள் புகார் போல மெக்சிக் கோவில் ஒருமுறை நடந்தது. மெக்சிக்கோவில் சில இடங்களில் வெப்ப நீரூற்றுக்களும் குளிர் நீரூற்றுக்களும் சேர்ந்தாற்போல் உள்ளன. எனவே சுற்றுப்பயணிகள் அதுபோன்ற ஒரு இடத்திற்குச் சென்றபோது அந்த நீரூற்றுக்களில் உள்ளூர் பெண்கள் துணி துவைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தனர். முதலில் வெப்பநீரில் துணியை நனைத்து விட்டு பிறகு குளிர் நீரூற்றில் மீண்டும் நனைத்து விட்டு பிழிந்து காயப்போட்டனர். அனைவரும் அப்படித்தான் துணி துவைத்துக் கொண்டிருந் தனர். சுற்றுப் பயணி இதைப் பார்த்து வழிகாட்டியிடம் சொன்னார், "அவர்கள் துவைப்பதற்கு வசதியாக வெப்ப நீரூற்றையும் குளிர்நீரூற்றையும் அருகருகே அமைத்துக் கொடுத்த கடவுளுக்கு இந்தப் பெண்மணிகள் தினசரி நன்றி சொல்வார்கள்" அதற்கு வழி காட்டிசொன்னார் "இல்லையில்லை அப்படியெல்லாம் கிடையாது சோப் இல்லை என்று அவர்கள் தினமும் புகார் செய்கிறார்கள்" எனவே உங்கள் புகார் அதைப் போலத்தான் இருக்கிறது.


இங்கு வந்து உட்கார்ந்தாலே உள்ளிருந்து நாங்கள் உங்களை அசைக்கிறோம். குறைந்தபட்சம் நமக்குள்ளே ஏதோ செயல்படுகிறது என்று அறிகிறீர்கள். உங்கள் பொருட்தன்மையைக் கடந்த ஏதோ ஒன்று இப்போது உங்களை உள்ளிருந்து அசைக்கிறது என்று குறைந்த பட்சமாக உணர்கிறீர்கள். உங்களைவிடப் மிகப்பெரிய ஒன்று உங்களைக் கதறவும் அல்லது தரையில் ஊர்ந்து செல்லவும் இப்படி ஏதோ ஒன்று செய்கிறது என உணர்கிறீர்கள். உங்களுக்கு என்ன நிகழ்கிறது என்பது பொருட்டல்ல. ஆனால் உங்களுக்குள் உள்ள ஏதோ ஒன்று குறைந்த பட்சமாக நகர ஆரம்பிக்கிறது. எனவே சக்திநிலைபற்றி நீங்கள் கேள்வி எழுப்ப முடியாது. இதுவரை உங்களுக்கு அப்படி நடக்கவில்லை என்றாலும் உங்களைச் சுற்றிலும் எல்லோருக்கும் அது நிகழ்வதைப் பார்க்கிறீர்கள், அது உங்களுக்கு நிகழும், கவலைப்பட வேண்டாம்.


அப்படியானால் இது கர்மவினை செயன்முறைகளை விரைவுபடுத்துவதா? நிச்சயமாக. நீங்கள் வகுப்பையோ அல்லது என்னையோகூட பயன்படுத்திக் கொள்ள வேண்டாம். வெறுமனே இந்த இடத்தை மட்டும் பயன்படுத்திக்கொண்டால் கூட, 100 தலைமுறைகளில் செய்ய முடியாததை இந்த ஒரு தலைமுறையில் செய்யமுடியும். உங்களுக்கு என்னுடன் பிரச்சினை இருந்தாலும்கூட வெறுமனே கண்கள் மூடி இந்த இடத்தில் உட்காருங்கள். அது உங்களுக்கு நிகழ அனுமதியுங்கள். பிறகு உங்களுக்கு நீங்களே அற்புதமான ஒன்றை நிகழ்த்திக் கொள்ள முடியும். ஏனெனில் இந்த இடம் சக்தியால் நிரப் பப்பட்டு இருக்கிறது. இந்த சக்தி தனிச் சிறப்புவாய்ந்த தன்மையில் இருக்கிறது. நீங்கள் ஏதாவது சக்தி நிலை உள்ள இடங்களுக்குச் சென்றால் அங்கிருக்கும் சக்திநிலை ஏதாவது சக்திநிலை ஏதாவது ஒரு குறிப்பிட்ட வடிவத்தையோ அல்லது குறிப்பிட்ட இடத்தையோ சார்ந்திருக்கும். உதாரணமாக தியானலிங்கம் இருக்கிறது. அதைச் சுற்றியும் சக்தி நிலை இருக்கிறது. அதுபோல் ஒரு குறிப்பிட்ட வடிவத்தைச் சுற்றி சக்தி நிலை இருப்பது இயல்பானது தான். ஆனால் முழு இடமுமே சக்தியால் நிரப்பப்பட்டிருப்பது என்பது மிகவும் அரிது. நாம் இதை உருவாக்கியதால் நான் இப்படி சொல்லவில்லை. நாம் இப்படி உருவாக்க முடிந்ததற்கு காரணம் மிக மிக அற்புத உயிர்கள் இந்த இடத்தைச் சுற்றிலும் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களுடைய ஆவலும் அதுதான்; நோக்கமும் அதுதான். பல உயர்ந்த உயிர்களின் நோக்கம் அப்படி இருப்பதால்தான் நாம் அப்படி உருவாக்க முடிந்திருக்கிறது.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

(தொடரும்)

# வரலாற்றின் திரிபுகளில் சிக்கியுள்ள சிங்ககிரியான சிகிரியா





**03**

சிகிரியா இராவணனின் மாளிகைகளில் ஒன்றாக இருக்கலாம் எனக் கூறும் கலாநிதி மிரண்டா ஒபயசேகரா இதற்கான காரணங்களையும் விளக்கி ஒரு கட்டுரையை வடித்துள்ளார்.

அவர் கூற்றுப்படி பார்த்தால் இராவணன் சிறந்த இசை மேதை. நுண்கலையில் ஆர்வம் மிக்க கலைஞன், அழகை ரசிக்கும் கலைஞன், பொருளாதாரம் மிக்கவன், கலைகளைப் படைக்கும் அற்புத திறமை மிக்கவன் மயன் அவன் மாமன். கல்லிலே கலை வண்ணம் கண்ட கலைஞர் சமூகத்தவன். இவ்வாறான ஒன்றை படைப்பதற்கு வேண்டிய கலை ஞானம், கற்பனை வளம், பொருட்பலம், ஆட்பலம், அறிவு தூய்மை மிக்கவன். இலங்கையை ஆண்ட முதல்மன்னன் இராவணனுக்கு 10 மாளிகை இருந்த வரலாறு உண்டு.

இராவணனின் தம்பி கும்பகர்ணன் வன்னியில் குருமலையில் வாழ்ந்தான். இவன் தேரில் சிங்கக் கொடி பறந்த வரலாற்றை இராமாயணம் கூறுகிறது. இராவணனின் உறவினனே சிங்கமகா சூரனாகும். சிகிரியா அரச மாளிகை அல்ல. அது முழுக்க முழுக்க சமயம் சம்பந்தமான இடம். அச்சமயம் இந்து சமயமாகவோ அல்லது வேறு சமயமாகவோ இருக்கலாம் என பௌத்த சிங்கள கலாநிதியான எம். இரத்தினசூரியா கூறுகிறார்.

இந்த மூன்று பௌத்த சிங்களக் கலாநிதிகளும் சிகிரியா எந்த பௌத்த சிங்களவராலும் கட்டப்படவில்லை என்பதை மனப்பூர்வமாக ஏற்றியிருக்கிறார்கள்.வேறு எந்த சமயத்தவர்களும் சிகிரியா கருவாகி உருவாகிய போது இலங்கையில் இருந்ததில்லை. எனவே தமிழரின் உழைப்புக் கைவண்ணம் சிகிரியா ஆகும்.

இன்று சிகிரியா, சிவனொளிபாத மலை, கதிர்காமம் சிங்களப் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் இருப்பதால் அவர்கள் உரிமை கொண்டாடலாம்.அதன் மூலகத்தாக்கல் தமிழர் என்பதை மறைக்கவும் மறுக்கவும் கூடாது. நிறைந்த தமிழர் வாழும் பகுதியான வடபகுதியிலுள்ள நாகவிகாரை நாகர்களால் உருவாக்கப்பட்டது. சிங்களவரால் கட்டப்பட்டதல்ல. இருந்தும் பௌத்த மதத்தின் உரிமையை மதித்து தமிழர்கள் சிங்களவர்களுக்கே வழங்கியுள்ளார்கள். ஆனால் இந்து சமயத்தின் உரிமையான இடங்களை பௌத்தர்கள் அபகரித்துக் கொண்டு வரலாற்றையும் திரித்து எழுதுகின்றார்கள். அதுதான் பௌத்த தர்மம்.

> "கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

சிகிரியாவில் உள்ள சித்திரங்கள் இந்தியாவில் அஜந்தா,எல்ரா போன்ற இடங்களிலும் உண்டு. இப் பகுதியில் சிங்கள மக்கள் என்றும் வாழாத பகுதிகளாகும். அக்குகையில் கூடுதலானவை சைவசமயக் குகைகளாகும். சிறுபகுதிகளே பௌத்த குகைகளாகும். இக் குகைகள் அனைத்தையும் கருவாக்கி உருவாக்கிய பெருமை கம்மாளரான தமிழ் கற்சிற்பிகளுக்கே உரியதாகும். சிகிரியாவில் 500க்கு மேற்பட்ட குகைச் சித்திரங்கள் இருந்த வரலாறு கூறுகிறது. அதில் பெரும்பகுதி சைவசமயத்தோடு தொடர்புடையதாக இருந்ததால் மத வெறி பிடித்த வெறியர்களை உலக உல்லாசப் பயணிகளின் கவனத்தையும் கருத்தையும் தன்பால் இழுத்த அற்புத அருங்கலை ஓவியங்களைச் சிதைத்து சீரழித்து விட்டார்கள். சமீபத்தில் கூட சுவரோவியங்களின் நெற்றியில் பொட்டிருந்த காரணத்தால் அதைத் சிதைப்பதற்காக அழித்து சித்திரத்தையே சிதைத்தார்கள். இப்போதுகூட அதை உற்று நோக்கில் சித்திரத்தில் பொட்டிருந்த அடையாளம் தெரிகிறது.

இது இவ்வாறு இருக்க இன்னும் ஒருபுதிய கருத்தை சில ஆய்வாளர்கள் முன்வைக்கிறார்கள். அதாவது அக்காலத்தில் புஷ்பக விமானம், வானவூர்தி இரண்டு விமானங்களை வைத்திருந்தவர்கள் இலங்கையின் முதல் மன்னர்களான குபேரனும் இராவணனுமாவார். இவர்கள் இருவரும் சகோதரர்கள். அக்காலத்தில் விமானங்களை தரிக்கக்கூடிய வசதி வாய்ப்பில்லாததால் மலை உச்சிகளில் குளத்தை ஏற்படுத்தி அதில் இறக்கினார்கள். அவ்வாறான தரை சிகிரியா, கைலயங்கிரி,சிவனொளி பாதமலை போன்ற மலைகளில் செய்யப்பட்டிருந்தது. வானவூர்தி புஷ்பக விமானம் வைத்திருந்தவர்கள் குபேரன், இராவணன் ஆவர். இராவணனிடம் இலங்கை ஆட்சியைக் கையளித்த குபேரன் கைலயங்கிரிக்குச் சென்று ஆட்சி அமைத்தான் என்ற வரலாறு இராமாயணம் தருகிறது. கௌதம புத்தரிடமோ அல்லது எந்தச் சிங்கள மன்னனிட மோ வானவூர்தி இருந்த வரலாறு கிடையாது.

எனவே எந்த வகையில் பார்த்தாலும் சிகிரியா தமிழர்களால் உருவாக்கப்பட்ட சித்திரைச் சிங்க நகரமாகும். இன்று உலகக் கலாசார அமைப்பால் பாதுகாக்கப்படும் உன்னத கலைச் சிகரம் தமிழர்களின் உழைப்பின் சின்னமாகும்.

**கலாபூஷணம் பூ.ம.செல்லத்துரை**

பாடசாலை நூல்களில் சிகிரியா காசியப்பனால் கட்டப்பட்டது என்ற தப்பான வரலாற்றுத் தரவுகளே புகுத்தப்பட்டுள்ளன. இது பிஞ்சு உள்ளங்களில் நஞ்சு பாய்ச்சும் செயலாகும்.

மூன்று சிங்களக் கலாநிதிகள் பௌத்தர்களால் சிகிரியா கட்டப்படவில்லை என்று உறுதியாக கூறிய பின்பும் இத் தவறு தொடர்வது நியாயமில்லை.

(முற்றும்)

# பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் பாரிய நிதி நிர்வாக மோசடி

## அநுரகுமார எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் அதிக வருமானத்தை ஈட்டுகின்ற பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் பாரிய நிதி நிர்வாக மோசடிகள் இடம்பெற்று வருகின்ற அதேவேளை அங்கு முறையான திட்டமிடல்களும் இல்லாதிருக்கின்றன.

இது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தி வருவதாக ஜனநாயக தேசியக் கூட்டணி எம். பி. அநுரகுமார திசாநாயக்க சபையில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற அமர்வின் போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்று வருகின்ற மோசடிகள் எனும் தலைப்பில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அநுரகுமார எம்.பி.இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனமானது, கடந்த ஏப்ரல் மாதத்தில் மாத்திரம் டீசல்(152 மில்லியன் லீற்றர்), பெற்றோல் (71 மில்லியன் லீற்றர்) , மண்ணெய் ணெய் (15.2 மில்லியன் லீற்றர் ) உட்பட எரிபொருட்களின் விற்பனையில் மூலம் சுமார் 70 பில்லியன் கோடி (7 ஆயிரம் கோடி) ரூபா வருமானத்தை ஈட்டியிருக்கிறது.

இதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த வருமானமாக 840 பில்லியன் (84 ஆயிரம் கோடி) ரூபா என கணிப்பிட முடியும். இதன் படி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது, பிரதான வருமானம் ஈட்டும் வியாபார நிறுவனமாக இருக்கின்றது.

பாரிய கொடுக்கல்- வாங்கல் வர்த்தகமாக இருக்கின்ற பெற்றோலியக் கூட் டுத் தாபனமானது தேசிய பாதுகாப்பிலும் முக்கிய பங்கினை வகிக்கிறது. கூட்டுத்தாபனம் படையினருக்கு இலவசமாக எரிபொருளை விநியோகித்தி ருக்காவிடில் யுத்தத்தை இடையில் நிறுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும்.

இந்தளவு முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனத்துக்கு தலைவர் இருக்கின்ற போதிலும் பொது முகாமையாளர் இல்லை. சாதாரண நிறுவனங்களில் கூட பொதுமுகாமையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மூன்று பொது முகாமையாளர்கள் இருக்க வேண்டிய இடத்தில் ஒருவர் மாத்திரமே இருக்கின்றார். நிதி மற்றும் நிர்வாகப் பிரிவுக்கான பொதுமுகாமையாளர் இல்லை. திட்டமிடல் பிரிவுக்கு பிரதி பொது முகாமையாளர் மாத்திரமே உள்ளார். மேலும் வர்த்தக மற்றும் நிதி முகாமையாளர் பதவிகளும் வெற்றிடங்களாக காணப்படுகின்றன என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## ஆலோசனைக்கூட்டம்

எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான கோரிக்கையை முன்வைப்பதற்கான ஆலோசனைக்கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு திருநாவுக்கரசு மகாவித்தியாலய மண்டபத்தில் நடாத்தப்படவுள்ளது.

எழுதுமட்டுவாழ் பிரதேச மக்கள் அனைவரையும் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-3-29)

## பருத்தித்துறையில் நீதிமன்றக் கட்டடம்

நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் அமைச்சரவைப் பத்திரத்துக்கு பருத்தித்துறையில் 62.33 மில்லியன் செலவில் நீதிமன்றக் கட்டடத் தொகுதி அமைக்கப்படவுள்ளது.

அதேவேளை மட்டக்களப்பிலும் 116.26 மில்லியன் ரூபா செலவில் நீதிமன்றக் கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# புறநிலைப்படிப்புக்கள் அலகினால் புதிய பாடநெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புக்கள் அலகினால் நடத்தப்பட்டு வரும் சான்றிதழ் கற்கை நெறிகளின் வரிசையில் தொடர்பாடலுக்கான ஆங்கிலம், மனிதவுரிமைக்கற்கை, அலுவலக முகாமைத்துவம் ,கலை இரசனை ஆகிய பாடங்களுக்கான புதிய பிரிவுகள் எதிர்வரும் ஜுன்மாதம் 4 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இக்கற்கை நெறிகளை பயில விரும்புவர்கள் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்பதாக புறநிலைப்படிப்புகள் அலகிற்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்படுகின்றனர். மேலதிக விபரங்களை புறநிலைப்படிப்புகள் அலகில் பெற்றுக்கொள்ளலாமென இணைப்பாளர் பா.அகிலன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# ஓய்வூதியத்திட்டம் தொடர்பான சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானதல்ல

## உயர் நீதிமன்றம் அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் ஓய்வூதியத் திட்டம் தொடர்பிலான சட்டமூலம் அரசியல் அமைப்புக்கு முரணானது அல்லவென்பதை உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் அமர்வு ஆரம்பமான போது சபாநாயகர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் உத்தேச ஓய்வூதியத்திட்டம் தொடர்பாக பல்வேறு தரப்பினர் மத்தியிலும் நிலவிய கருத்து முரண்பாடு காரணமாக அது குறித்து நீதிமன்றத்தின் ஆலோசனையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய இந்த விடயம் தொடர்பிலான தமது நிலைப்பாட்டினை உயர் நீதிமன்றம் சபாநாயகருக்கு நேற்று முன்தினம்அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# கே.பி.யை விசாரிக்க தெரிவுக்குழு தேவை

## ஐ.தே.க. கேட்கிறது

(கொழும்பு)

காவலிலுள்ள விடுதலைப் புலிகளின் முன்னாள் ஆயுதக் கொள்வனவாளர் கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் மீது விசாரணை நடத்துவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை நியமிக்கக் கோரும் தீர்மானம் ஒன்றை ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளனர்.

எந்தச் சட்டத்தின் அடிப்படையில் கே.பி. தடுத்து வைக்கப்பட்டுள்ளார், அவர் மீதான குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் வரைந்திருந்தால் அவை எந்த சட்டங்களின் கீழ் சுமத்தப்படவுள்ளன என்பன உள்ளிட்ட சில முக்கிய விடயங்களை அறிந்து கொள்ளவும் இந்தத் தெரிவுக்குழுவை நியமிக்குமாறு அந்தத் தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது.

ரவி கருணாநாயக்க, பாலித ரங்கபண்டார, ஏரன் விக்கிரமரத்ன, லக்ஸ்மன் கிரியெல்ல உள்ளிட்ட ஐ.தே.க.வின் 9 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

இந்தத் தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்வது பற்றிய சபாநாயகரின் முடிவு இன்னமும் அறிவிக்கப்படவில்லை. (ந-5)




★1697- சுவீடனில் ஸ்டொக்ஹோம் நகரின் பழம்பெரும் அரசமாளிகை தீயில் அழிந்தது.

★1840- மிசிசிப்பியில் பெரும் சூறாவளி தாக்கியதில் 317 பேர் கொல்லப்பட்டனர்.

★1895- ரஷ்ய அறிவியலாளர் அலெக்சாண்டர் பப்போவ் உலகின் முதலாவது வானொலிக் கருவியை சென் பீட்டர்ஸ்பேர்க்கில் அறிமுகப்படுத்தினார். இந்நாள் ரஷ்யாவில் வானொலி நாளாகக் கொண்டாடப்படுகிறது.

★1915- முதலாம் உலகப் போர்: ஜேர்மனியின் யூ-20 நீர்மூழ்கிக் கப்பல் பிரித்தானியாவின் லூசித்தானியா என்ற ஆடம்பரக் கப்பலைத் தாக்கி மூழ்கடித்ததில் ஆயிரத்து198 பேர் கொல்லப்பட்டனர்.

★1920- போலந்துப் படைகள் உக்ரேனின் கீவ் நகரைத் தாக்கிக் கைப்பற்றின. இவர்கள் பின்னர் ஒரு மாதத்தின் பின்னர் செம்படைகளினால் வெளியேற்றப்பட்டனர்.

★1920- சோவியத் ரஷ்யா ஜோர்ஜியாவை அங்கீகரித்தது. ஆனாலும் ஆறு மாதத்தின் பின்னர் அது ஜோர்ஜியாவைக் கைப்பற்றியது.

★1927- நிக்கராகுவாவில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.

★1945- இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் இராணுவத் தளபதி அல்பிரட் யோட்ல் ஜேர்மனியின் நிபந்தனையற்ற சரணடைதலுக்கு பிரான்சில் கையெழுத்திட்டார்.

★1946- சோனி நிறுவனம் 20 தொழிலாளர்களுடன் டோக்கியோவில் ஆரம்பிக்கப்பட்டது.

★1948- ஐரோப்பிய அமைப்பு (Council of Europe) உருவாக்கப்பட்டது.

★1952- ஒருங்கிணைந்த மின்சுற்று (integrated circuit) தத்துவம் ஜெப்ரி டம்மர் என்பவரால் வெளியிடப்பட்டது.

★1954- வியட்நாமில் தியன் பியன் பு (Dien Bien Phu)சமரின் போது பிரெஞ்சுப் படைகள் தோற்கடிக்கப்பட்டன.

★1992- நாசாவின் என்டெவர் விண்ணோட்டம் தனது முதலாவது பயணத்தை ஆரம்பித்தது.

★1999- கினி- பிசாவுநாட்டில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் நாட்டின் அரசுத் தலைவர் ஜொவாவோ பெர்னார்டோ பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

★2002- சீனாவின் விமானம் ஒன்று மஞ்சள் கடலில் வீழ்ந்ததில் 112 பேர் கொல்லப்பட்டனர்.

★2007- ரோமப் பேரரசின் ஹெரோட் மன்னனின் கல்லறை ஜெருசலேம் நகருக்கருகில் கண்டுபிடிக்கப்பட்டது.

★2007- முன்னர் இந்தியாவுடன் இணைந்திருந்த சிறிய கண்டம் ஒன்று தெற்குக் கடல்களின் அடியில் தமது ஆய்வுக் கப்பலான போலார்ஸ்டேர்ன் (the polarstern) கண்டுபிடித்துள்ளதாக ஜேர்மனிய அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

★2007- நாடு கடந்த நிலையில் வாழ்ந்த வங்களாதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா நாடு திரும்பினார்.

### பிறப்புக்கள்

★1840- பியோத்தர் த்சாயக்கோவ்ஸ்கி, ரஷ்ய இசையமைப்பாளர் (இ. 1893)

★1861- இரவீந்திரநாத் தாகூர், வங்காள மொழிக் கவிஞர் நோபல் பரிசு பெற்றவர் (இ.1941)

### இறப்புக்கள்

★1539- குரு நானக், சீக்கிய மதத்தை ஆரம்பித்தவர் (பி. 1469)

★1825- அந்தோனியோ சாலியரி, இத்தாலிய இசையறிஞர் (பி. 1750)

★1998- அலன் கோர்மாக், நோபல் பரிசு பெற்றவர் (பி.1924)

### சிறப்புநாள்

★நோர்வே- தேசிய தினம்

# பின்லேடனின் மனைவியை அமெரிக்காவிடம் ஒப்படைக்க பாகிஸ்தான் அரசு மறுப்பு

(வோஷிங்டன்)

பாகிஸ்தானில் பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்டபோது அவருடைய 5 ஆவது மனைவி அமய் பிடிபட்டார். தற்போது, பாகிஸ்தான் இராணுவம் வசம் உள்ள அவரை அமெரிக்காவிடம் ஒப்படைக்க பாகிஸ்தான் அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் பதுங்கியிருந்த பின்லேடனை அமெரிக்க இராணுவத்தின் கொமாண்டோ படையினர் கடந்த முதலாம் திகதி அதிகாலையில் சுட்டுக் கொன்றனர். பின்லேடன் பதுங்கியிருந்த வீட்டில் மனைவி, பிள்ளைகள் என குடும்பமே வசித்து வந்தது. சண்டையில் பின்லேடன், மகன் காலித் ,ஒரு பெண், உதவியாளர் இருவர் என 5 பேர் கொல்லப்பட்டனர். இந்த நிலையில் பின்லேடனின் 5 ஆவது மனைவி உயிருடன் பிடிக்கப்பட்ட தகவல் வெளியாகியுள்ளது.

ஏமன் நாட்டைச் சேர்ந்த அமய் அகமது அப்துல்பதா என்ற பெண்ணை 10 ஆண்டுகளுக்கு முன் ஆப்கானிஸ்தானில் வைத்து 5ஆவது மனைவியாக பின்லேடன் மணம் முடித்தார். பின்லேடன் திருமணம் செய்யும் போது அமயின் வயது 17 ஆகும். தற்போது 27வயதுடைய அமய் அல்-சடா என்றும் அழைக்கப்படுகிறார். பின்லேடன் கொல்லப்பட்ட சமயத்தில் அமய் மீது குண்டுகள் பாய்ந்து காயமடைந்ததாகக் கூறப்படுகிறது.

வளைகுடா நாடுகளில் அல்கொய்தா அமைப்பை வலுப்படுத்தும் நோக்கத்தில் 5ஆவது மனைவியாக அமயை பின்லேடன் திருமணம் செய்துள்ளார். பின்லேடனின் இரகசியங்கள், திட்டங்கள் மற்றும் யாருடன் தொடர்பு வைத்திருந்தார் என்பது போன்ற தகவல்கள் அமய்க்குத் தெரியும். எனவே, அமய் மற்றும் பின்லேடன் குடும்பத்தின் முக்கிய உறுப்பினர்கள் சிலரையும் உயிருடன் பிடித்துச் செல்ல அமெரிக்க இராணுவம் திட்டமிட்டிருந்தது.

ஆனால், தாக்குதல்களுக்குச் சென்ற ஹெலிகொப்டர்களில் ஒன்று பழுதாகிவிட்டதால் அந்தத்திட்டம் நிறைவேறவில்லை. எனவே, பின்லேடனின் 5ஆவது மனைவி அமய் உள்ளிட்டோரை அங்கேயே விட்டுச் சென்றனர். இதை அமெரிக்க இராணுவத் தலைமையகம் பென்டகன் கூறியுள்ளது.

பின்லேடனின் 5ஆவது மனைவி அமய்க்கு ஒரு மகள் இருக்கலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் அபோதாபாத் வீட்டில் பின்லேடனுடன் வசித்து வந்ததாக அமய் கூறினார். பின்லேடனின் மனைவி அமய் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் பாகிஸ்தான் இராணுவ கட்டுப்பாட்டில் இருக்கின்றனர். பின்லேடன் மீது தாக்குதல் நடந்த போது அமய் தடுத்ததாகவும் அப்போது நடந்த சண்டையில் அவரது காலில் குண்டு பாய்ந்து மயக்கம் அடைந்ததாகவும் கூறப்படுகிறது. எனவே, ராவல் பிண்டியில் உள்ள இராணுவ மருத்துவமனையில் அமய் சிகிச்சை பெற்று வருகிறார். பின்லேடனை உயிருடன் பிடித்த பின்பு அவரை அமெரிக்க படையினர் சுட்டுக் கொன்றதாக அமய் கூறி வருகிறார்.

ராவல்பிண்டி வைத்தியசாலையில் இருக்கும் அவரிடம் பின்லேடன் மற்றும் அல்கொய்தா இயக்கத்தினர் பற்றிய தகவல்களை பெறுவதற்காக விசாரணை நடத்த அமெரிக்கா விரும்புகிறது. அதனால் அமெரிக்காவிடம் அமயை ஒப்படைக்குமாறு அமெரிக்கா வலியுறுத்தி உள்ளது. அந்தக் கோரிக்கையை பாகிஸ்தான் மறுத்துள்ளது.

ஏற்கனவே தங்கள் நாட்டுக்குள் புகுந்து தாக்குதல் நடத்திய அமெரிக்கா மீது அதிருப்தியில் இருப்பதால் இந்தக் கோரிக்கைக்கு பாகிஸ்தான் செவி சாய்க்கவில்லை. இது தொடர்பாக தூதரக ரீதியான முயற்சியை அமெரிக்கா தொடருகிறது. இதற்கிடையே சண்டையில் பின்லேடன் சாகவில்லை என்றும் பின்லேடனை உயிருடன் பிடித்த பின்னர் சில நிமிடங்களில் சுட்டுக் கொன்றதாகவும் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

அந்த வீட்டில் வசித்து வந்த பின்லேடனின் 12 வயது மகள் இதை தெரிவித்ததாக அல்- அராபியா என்ற அரபு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. பின்லேடனை சுட்டுக் கொன்ற பின்னர் அவரது உடலை ஹெலிகொப்டருக்கு இழுத்துச் சென்றனர் என்று அவர் கூறி இருக்கிறார்.

பின்லேடனுடன் கொல்லப்பட்ட அவருடைய மகன் காலித் உடலை அமெரிக்க இராணுவத்தினர் எடுத்துச் சென்றனர். அந்த உடல் பற்றிய எந்தத் தகவலும் இதுவரை வெளியாகவில்லை. அந்த உடல் எங்கு அடக்கம் செய்யப்பட்டது என்றும் அமெரிக்கா தெரிவிக்கவில்லை.

அதேநேரத்தில் பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ உதவியுடன் பின்லேடன் பதுங்கி இருந்ததாக இங்கிலாந்து உளவு அமைப்பான எம். ஐ. 6 தெரிவித்துள்ளது. அதற்காக பெரிய அளவிலான தொகையை ஐ. எஸ். ஐ. அதிகாரிகளுக்கு அல்கொய்தா கொடுத்திருக்கிறது. பின்லேடனுக்கு ஐ.எஸ்.ஐ. அமைப்பின் இரண்டு மற்றும் மூன்றாம் கட்ட அதிகாரிகள் உதவியுள்ளனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஐ.எஸ். ஐ. தலைவராக லெப்டினன்ட் ஜெனரல் அகமது சுஜா பாஷா பதவியேற்ற பின்னர் தீவிரவாதிகளுக்கு முழு பக்கபலமாக ஐ.எஸ்.ஐ. செயற்பட தொடங்கி விட்டது என்றும் எம்.ஐ 6 குற்றஞ்சாட்டி இருக்கிறது.

மேலும் இங்கிலாந்து பாராளுமன்ற எம்.பி.க்களை கடந்த 4 ஆம் திகதி சந்தித்த பிரதமர் டேவிட் கமரூன் இந்த தகவலை வெளியிட்டார். (ஸ்ரீ-2)




## ஓசாமா கொல்லப்பட்டமை தொடர்பான முழுவிபரத்தையும் வெளியிடவேண்டும்

### அமெரிக்காவிடம் ஐ.நா. கோரிக்கை

அமெரிக்காவின் இரகசிய நடவடிக்கையில் ஓசாமா பின்லேடன் கொல்லப்பட்டது தொடர்பான முழு விபரங்களையும் அமெரிக்கா வெளியிட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கவுன்சிலின் ஆணையர் நவநீதம்பிள்ளை கேட்டுள்ளார்.

ஓசாமா பின்லேடனுக்கு எதிரான நடவடிக்கை சட்டப்படியான ஒன்றா என சரிபார்க்க இந்தத் தகவல்கள் தேவைப்படுவதாக அவர் கூறியுள்ளார். அல்கொய்தாவின் நிறுவுனரான பின்லேடன் மிக கொடூரமான பயங்கரவாதச் செயல்க்ளைப் புரிந்ததாக தானே ஒத்துக் கொண்டிருந்தாலும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் சர்வதேச சட்டங்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் இருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இதே நேரம் ஆயுதமற்ற ஒருவரை கொன்றது தனக்கு சங்கடமான உணர்வுகளை ஏற்படுத்துவதாக அங்கிலிக்கன் திருச்சபையின் தலைவரான ரோவான் வில்லியம்ஸ் தெரிவித்துள்ளார்.


இதேவேளை, ஓசாமா பின்லேடன் தன் நாட்டிலிருந்ததை தனது உளவு நிறுவனங்களால் கண்டுபிடிக்க முடியாமல் போனதாக கூறப்படுவது தொடர்பான ஒரு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக மூத்த பாகிஸ்தானிய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-2)



பயங்கரவாதி பின்லேடன் கொல்லப்பட்ட சம்பவம் உலகையே உலுக்கி எடுத்தாலும் அவர் கொல்லப்பட்ட அபோதாபாத் பகுதியில் உள்ள வீட்டின் பின்பகுதியில் அந்தச் சம்பவம் பற்றிய எந்த சலனமும் இல்லாமல் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயி ஒருவரை படத்தில் காணலாம்.

## ஓசாமாவின் படத்தை வெளியிட மாட்டேன்

### ஒபாமா தெரிவிப்பு



பாகிஸ்தானில் கடந்த சனிக்கிழமை இரவு அமெரிக்க படையினரால் கொல்லப்பட்ட ஓசாமா பின்லேடனின் சடலத்தின் புகைப்படத்தை வெளியிடுவதில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா முடிவு செய்துள்ளார்.

கொடூரமான நிலையில் இருக்கும் சடலத்தை அப்படியே அப்பட்டமாகக் காட்டும் புகைப்படங்கள் வன்செயல்களுக்குத் தூண்டலாம் என்ற அச்சம் தனக்கு இருப்பதாக ஒபாமா தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தைத் தங்களுக்குள் விவாதித்ததாகவும் தங்களிடமுள்ள புகைப்படத்தில் இருப்பது ஓசாமாதான் என்பதில் தாங்கள் தெளிவாக இருப்பதாகவும் டி.என்.ஏ மாதிரியின் சோதனை மூலமும் இது உறுதிசெய்யப்பட்டிருப்பதால் ஓசாமா பின்லேடனைக் கொன்றுவிட்டோம் என்பதில் தங்களுக்கு எந்த விதமான சந்தேகமும் கிடையாது என்றும் ஒபாமா தெரிவித்திருக்கின்றார்.

அதேசமயம் தலையில் சுடப்பட்ட ஒருவரது சடலத்தின் கொடூரமான காட்சியை அப்பட்டமாகக் காண்பிக்கும் புகைப்படத்தை வெளியிடுவது என்பது ஒரு முக்கியமான பிரச்சினை என்று கூறியுள்ள ஒபாமா, அதனை யாராவது பிரசாரத்திற்குப் பயன்படுத்திக்கொண்டால் அதனால் வன்செயல்கள் தூண்டப்படலாம் என்பதனையும் தாங்கள் கருத்திற் கொண்டதால்தான் அந்தப் புகைப்படங்களை வெளியிடவேண்டாம் என்று முடிவெடுத்திருப்பதாக ஒபாமா தெரிவித்திருக்கின்றார். (ஸ்ரீ-2)

## பின்லேடன் கொலையின் எதிரொலி; ஈராக்கில் வெடிகுண்டுத் தாக்குதல்

### 21 பேர் பலியாகினர்

(பக்தாத்)

ஈராக் தலைநகர் பக்தாத்தில் நடந்த தற்கொலைப்படை தாக்குதலில் 21 பேர் பலியாகினர். ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் ஹில்லா நகரில் உள்ள ஒரு பொலிஸ் நிலையம் மீது நேற்று முன்தினம் பயங்கரவாதிகள் வெடிகுண்டுகள் நிரப்பிய கார் ஒன்றினை மோதச் செய்து தாக்குதல் நடத்தினர்.

இதில் உயர் பொலிஸ் அதிகாரிகள் உட்பட 21 பேர் உடல் சிதறி பலியாகினர். இந்தத் தாக்குதலால் அருகில் இருந்த வீடுகள், கடைகள் மற்றும் பழைமையான கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாயின. அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. இந்தத் தாக்குதலுக்கு அல் கொய்தா அமைப்பு காரண மாக இருக்கலாம் என பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர். மேலும் பின்லேடன் கொல்லப் பட்டதற்கு பழி தீர்க்க இந்த வெடிகுண்டு தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது. காயமடைந்தவர்கள் ஹில்லா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஸ்ரீ-2)

# பிரபாகரனை கிளர்ச்சித் தலைவராகவும் பின்லேடனை தீவிரவாதியாகவும் மேற்குலகம் கணிப்பிடுகின்றது

## அமைச்சர் டலஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதம் என்பதனை சர்வதேச சமூகம் வரைவிலக்கணப்படுத்த வேண்டுமென அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அல்கொய்தா இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடனை பயங்கவாதியாகவும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை கிளர்ச்சியாளராகவும் மேற்குல நாடுகள் அடையாளப்படுத்துவதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி, இலங்கை ஜனாதிபதி ஆர்.பிரேமதாச ஆகியோரை படுகொலை செய்ததுடன் 600 தற்கொலைத் தாக்குதல்களுக்கு பிரபாகரன் உத்தரவிட்டதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதம் தொடர்பான மேற்குலக நாடுகளின் இரட்டை நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பிரபாகரனை கிளர்ச்சித் தலைவராகவும் பின்லேடனை தீவிரவாதியாகவும் மேற்குல நாடுகள் அடையாளப்படுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மிகவும் ஒழுக்கமான கிளர்ச்சி குழு என புலிகளை தாரூஸ்மான் அறிக்கை விபரித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.



அல்கொய்தா இயக்கம் உருவாகுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னர் தொடக்கம் புலிகள் தீவிரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

உயரழுத்த மின்மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு இன்று சனிக்கிழமை காலை 8மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன்மணல் பிரதேசம், யாழ். நகரப்பகுதி, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8மணி தொடக்கம் மாலை 5 மணி வரை உரும்பிராய், கோண்டர்வில், மருத்துவ பீடப்பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், நகரப்பகுதி நீங்கலாக யாழ்.மாநகரசபைப் பகுதி ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் எனவும் திருத்தவேலைகள் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாக முடிபுற்றால் மின்சாரம் வழங்கப்படும் எனவும் இலங்கை மின்சார சபையின் யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (ந-6)

## வெளிவிவகார அமைச்சர் சீனாவிற்கும் ரஷ்யாவிற்கும் விரைவில் விஜயம்

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் சீனாவிற்கும் ரஷ்யாவிற்கும் மிக விரைவில் விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கை தொடர்பிலான இலங்கையின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் நோக்கில் இந்த விஜயம் அமையவுள்ளது.

சீன மற்றும் இந்திய அரசாங்கங்களின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் அமைச்சர் பீரிஸ் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிபுணர் குழு அறிக்கை குறித்து இரண்டு நாடுகளினதும் எதிர்ப்பைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

நிபுணர் குழு அறிக்கையை இலங்கை அரசாங்கம் முற்றுமுழுதாக நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் விவாதிப்பதற்கு முனைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## ஐக்கிய நாடுகள் சபையும் அதன் செயலரும் எங்களுடையவர்கள்

### அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதன் செயலாளர் நாயகம் ஆகியோர் எங்களுடையவர்கள் என்று அமைச்சர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இலங்கை ஐக்கிய நாடுகள் சபையின் நீண்டகால அங்கத்துவத்தைக் கொண்ட ஒரு நாடு என்ற வகையில் ஐ.நா.சபை மற்றும் அதன் உறுப்பு நாடுகளுடன் சிநேகபூர்வமான உறவைக்கட்டியெழுப்பி தாரூஸ்மான் அறிக்கையின் தவறுகளைச் சீர்திருத்திக் கொள்ளவைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதன் செயலாளர் நாயகம் ஆகியோர் எங்களுடையவர்கள். அதன் காரணமாக எதிர்காலத் தில் அந்த அமைப்புடன் நல்லுறவை மேம்படுத்திக் கொள்ளும் அதே வேளை அதன் உறுப்பு நாடுகள் மத்தியில் இலங்கையின் நற்பெயரைக் கட்டியெழுப்புதல் மற்றும் அரசாங்கத்தின் கொள்கைகளை எடுத்து விளக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் என்பது எந்தவிதமான சவால்களையும் எதிர்கொள்ளும் தைரியம் கொண்டதொரு அரசாங்கமாகும். கடந்த காலங்களில் அவ்வாறான எண்ணற்ற சவால்களை எதிர்கொண்டு வெற்றிக் கொடி நாட்டியது போன்று தாரூஸ்மான் அறிக்கை விடயத்திலும் அரசாங்கம் கடைசியில் வெற்றியை ஈட்டும் என்றும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

## றொபேர்ட் ஓ பிளேக் தமிழ் மக்களுக்கு மீண்டும் தவறாக உபதேசம் செய்யக்கூடாது

### மனோ கணேசன் தெரிவிப்பு

போர் முடிவடைந்தவுடன் உடனடியாகவே அரசாங்கம் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் என்ற பிரசாரத்தை அப்போதைய அமெரிக்கத் தூதர் றொபேர்ட் ஓ பிளேக் முன்னெடுத்தார். ஆனால், இன்று போர் முடிந்து இரண்டு வருடங்களாகி, இத்தனை அழிவுகளுக்குப் பின்னரும்கூட தமிழ் மக்களால் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அறிகுறியைக்கூட காண முடியவில்லை என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஜ.ம.மு தலைமையகத்தில் நடைபெற்ற வாராந்தக் கூட்டத்தில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

போர் நடைபெற்ற காலப்பகுதி முழுவதும் பிளேக் 13ஆவது திருத்தச் சட்டம் பற்றியே உபதேசித்து வந்தார். 13ஆவது திருத்தத்திற்கு அப்பால் அரசாங்கம் செல்லும் என்ற ஒரு தோற்றத்தையும் அவர் ஏற்படுத்தியிருந்தார்.

அமெரிக்க அரசாங்கம் இலங்கையில் போருக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியிருந்தது. இந்த நிலைப்பாட்டை சமாளிப்பதற்காகவே பிளேக் இத்தகைய கருத்துகளைத் தொடர்ந்து தெரிவித்து வந்தார். ஆனால், இன்று எவ்வளவு அழிவுகளுக்குப் பின்னரும்கூட இந்நாட்டில் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அறிகுறியைக்கூட தமிழ் பேசும் மக்களால் காண முடியவில்லை.

போரின்போது ஐ.நா. சபை பொதுமக்கள் இழப்பைத் தவிர்ப்பதில் தீர்மானகரமாகச் செயலாற்றவில்லை என்பதை இன்று உலகம் அறிந்துகொண்டுள்ளது. சர்வதேச சமூகத்தின் அழுத்தம் மூலம் இறுதி நேரத்தில் போரை நிறுத்துவது போன்ற சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவை காலங் கடந்த செயல்களாகும்.

அவ்வேளையில் போர் நிறுத்த முடியாத ஒரு கட்டத்தை அடைந்திருந்தது. அது சாத்தியமாகி இருந்தாலும்கூட அதன்மூலம் வன்னிமக்களைப் பாதுகாத்திருக்க முடியாது. வேண்டுமென்றால் எஞ்சியிருந்த சில விடுதலைப் புலிகளின் தலைவர்கள் பாதுகாக்கப்பட்டிருக்கலாம். பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான காலம் அப்போது கடந்திருந்தது.

போர்க் காலத்தில் நாங்கள் மக்கள் கண்காணிப்புக் குழுவை அமைத்துச் செயற்பட்டோம். விக்ரமபாகு, சிறிதுங்க ஆகியோருடன் இணைந்து அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் படுகொலைகள் மற்றும் ஆட்கடத்தல்களுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தினோம். அதன்போது அமெரிக்காவின் சுதந்திரக் காவலர் மனித உரிமை விருது எனக்கு அளிக்கப்பட்டது. அப்போது தூதுவராக இருந்த பிளேக் இதற்குக் காரணமாக இருந்தார். இந்த விருது எங்கள் செயற்பாட்டில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. உண்மையில் இதன்பிறகுதான் எனக்கு பெருமளவில் அச்சுறுத்தல்கள் அதிகரித்தன.

இவ்வேளையில் அமெரிக்கா யுத்தத்திற்கான நிபந்தனையற்ற ஆதரவு என்ற கொள்கையைக் கடைப்பிடித்தது. ஆனாலும் தமிழ் மக்களின் மனித உரிமைகள் தொடர்பில் தாங்கள் அக்கறைகொண்டுள்ளோம் என்று காட்டுவதற்காகவே இந்த விருது எங்களுக்கு வழங்கப்பட்டதாக நான் தெரிந்துகொண்டேன். அதனால்தான் இந்த விருது வழங்கும் நிகழ்வைப் பகிரங்கமாக நடத்துவதற்கு நான் உடன்படவில்லை.

போரினால் மரணமடைந்த அப்பாவி மக்களின் உயிர்களை மீண்டும் ஒருபோதும் மீட்டுக்கொண்டு வரமுடியாது. எனவே போருக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியவர்களுக்கு இன்று இலங்கை தமிழ் மக்கள் குறித்த தார்மீகப் பொறுப்புணர்வு இருக்கின்றது. இவர்களுக்கு இன்று ஒரே ஒரு சாத்தியமான வழி மட்டுமே இருக்கின்றது. அதுதான் ஒரு நியாயமான அரசியல் தீர்வு என்பதாகும். இது தொடர்பில் அமெரிக்காவும் இந்தியாவும் இலங்கை அரசாங்கத்துடன் தீர்மானகரமான செயற்பாடுகளில் ஈடுபடல் வேண்டும்.

ஐக்கிய அமெரிக்காவுக்கான துணை இராஜாங்கச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக் தனது முன்னைய அரசியல் தீர்வு உபதேசத்தை நடை முறைப்படுத்துவதற்கான நேரம் இதுவாகும். இதை நடைமுறைப்படுத்தாமல் மீண்டும் தமிழர்களுக்கு றொபேர்ட் ஓ பிளேக்கும் அவரது அரசாங்கமும் உண்மைக்குப் புறம்பான உபதேசங்களைச் செய்யக்கூடாது. (ஸ்ரீ-2)


- தபால் மூலம் -

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

20

APRIL. 2011 TO SEPT.2011

தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology. M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st FLOOR, SJPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 10.05.2011

# இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிக்கு உரிய அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்

## திருச்சியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்

(சென்னை)

இலங்கைத் தமிழர் உரிமைகளைப் பாதுகாக்க இந்திய அரசு தலையிட வேண்டும் என்பதை வலியுறுத்தி திருச்சியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அக்கட்சியின் மாநிலச் செயலர் ஜி.இராமகிருஷ்ணன் கலந்துகொண்டு பேசினார்.

அவர், இலங்கையில் மனித உரிமை மீறப்பட்டுள்ளது, தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். மருத்துவமனைகளும் தாக்குதலுக்குள்ளாகியிருக்கின்றன. இவையனைத்தும் ஐ.நா.சபையின் ஆய்வறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளன.

எதிர்வரும் 13ஆம் திகதி சட்டப்பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கைக்குப் பின் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்படப் போவது உறுதி. ஆனால், அதுவரையும் ஆட்சி அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் தி.மு.க அரசு, மத்தியில் செல்வாக்கு மிகுந்த தி.மு.க தலைவர் கருணாநிதி இந்த அறிக்கையைத் தொடர்ந்து இலங்கை அரசு மீது நடவடிக்கை எடுக்க வற்புறுத்த வேண்டும்.

காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவர் கே.வீ.தங்கபாலு, மத்திய அமைச்சர் ஜீ.கே. வாசன் உள்ளிட்டோர் முதல்வர் கருணாநிதியை வந்து சந்திக்கின்றனர். அவர்களிடம் முதல்வர் கருணாநிதி இதை வலியுறுத்த வேண்டும்.

இலங்கையில் தமிழ் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களின் அடிப்படை - சராசரி உரிமைகளும்கூட மறுக்கப்பட்டுள்ளன. எனவே, இலங்கையில் தமிழ் மக்களுக்கான சம அந்தஸ்து கோரும் போராட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து ஆதரிக்கும்.

இந்தியாவில் தமிழ்நாடு, கேரளம், மேற்கு வங்கம், அசாம் போன்ற மாநிலங்கள் இருப்பதைப் போல இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிக்கு உரிய அந்தஸ்து வழங்க வேண்டும். தமிழர்கள் வாழும் வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைக்க வேண்டும். சட்டம் - ஒழுங்கு, சுகாதாரம், கல்வி போன்ற அனைத்து உரிமைகளையும் தமிழர்களுக்கும் வழங்க வேண்டும்.

போர் நிறைவடைந்து இரு ஆண்டுகள் முடிந்தும்கூட இலட்சக்கணக்கான தமிழர்கள் வாழ்வுரிமைகளை இழந்து சிறைப்படுத்தப்பட்டுள்ளனர். இனியும் இந்திய அரசு வேடிக்கை பார்க்கக் கூடாது. தி.மு.க மௌனம் சாதிக்கக்கூடாது.

மீனவர்கள் தொடர்ந்து இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்படுவது குறித்து அந்த நாட்டு அரசுடன் இந்திய அரசு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். சுமுகத் தீர்வுகாண வேண்டும் என்றார். (ஸ்ரீ-2)

## கனிமொழியின் பிணை மனு மீதான விசாரணை

### இன்றைக்கு ஒத்திவைப்பு

(சென்னை)

2 ஜி அலைக்கற்றை விவகாரத்தில் சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் அனுப்பிய அழைப்பாணையை ஏற்று விசாரணைக்காக டில்லி சென்றுள்ள கனிமொழி, பாட்டியாலா இல்ல வளாகத்தில் உள்ள சி.பி.ஐ. நீதிமன்றத்தில் நேற்று ஆஜ ரானார். அப்போது அவரது தரப்பில் பிரபல வழக்கறிஞர் ராம் ஜெத்மலானி வாதாடினார்.

கனிமொழி தரப்பில் பிணை மனு தாக்கல் செய்யப்பட்டது. பிணை மனு மீதான விசாரணையை நீதிபதிகள் இன்று சனிக்கிழமைக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க. செய்தி தொடர்பாளர் இளங்கோவன், தி.மு.க எப்போதும் கனிமொழிக்கு ஆதரவாக இருக்கும் என்றார். (ஸ்ரீ-2)

## சீனப் பட விழாவில் திரையிட விஜயின் காவலன் படம் தெரிவு

சீனாவின் 14வது ஷங்காய் திரைப்பட விழா அடுத்த மாதம் 11ஆம் திகதி முதல் 19ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இதற்காக உலகம் முழுவதும் 80 நாடுகளில் இருந்து 2 ஆயிரத்து 500 படங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தென்னிந்தியாவில் இருந்து விஜய் நடித்த **காவலன்** படம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்தப் படத்தில் விஜய் ஜோடியாக அசின் நடித்திருந்தார். சித்திக் இயக்கியுள்ளார்.

காவலன் படம் திரையிடப்படும் நாளன்று, விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்ளும்படி விஜய்க்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

## பாரதச் செய்திகள்



# இந்தியாவுக்கு பாகிஸ்தான் நேரடி எச்சரிக்கை

(சென்னை)


பின்லேடனைச் சுட்டுக்கொல்ல அமெரிக்கா நடத்தியது போலவே தன்னிச்சையான தாக்குதல் நடத்த இந்தியா உள்ளிட்ட வேறு நாடுகள் முயற்சித்தால் பேரழிவுகளைச் சந்திக்க நேரிடும் என பாகிஸ்தான் எச்சரித்துள்ளது.

பாகிஸ்தானில் கடந்த 6 ஆண்டுகளாக பதுங்கியிருந்த சர்வதேச பயங்கரவாதி ஒசாமா பின்லேடனை அமெரிக்க இராணுவத்தினர் சுட்டுக்கொன்றனர். பாகிஸ்தான் அரசு மற்றும் இராணுவத்திற்குத் தெரியாமலேயே அந்த நாட்டுக்குள் புகுந்து அமெரிக்க இராணுவத்தினர் இந்தத் தாக்குதலை நடத்தினர். இதனால் உலக நாடுகள் வியப்பில் ஆழ்ந்துள்ளன.


இதற்கிடையே இந்திய இராணுவ தலைமை தளபதி வி.கே.சிங், பின்லேடனைக் கொல்ல அமெரிக்க சிறப்புப் படையினர் நடத்திய தாக்குதலைப் போலவே தாக்குதல் நடத்தும் சக்தி இந்திய இராணுவத்திற்கும் உள்ளது என தெரிவித்தார். இதற்குப் பதிலளிக்கும் விதமாக பாகிஸ்தான் வெளியுறவுச் செயலாளர் சல்மான் பஷீர் நேற்று முன்தினம் பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

எங்களுடைய நாட்டில் வீரம் மிகுந்தவர்கள் அதிகமாகவுள்ளனர். இப்போது நடந்தது போன்ற தாக்குதல் மீண்டும் நடைபெறும் என்ற ரீதியில் எல்லைக்கு அப்பால் இருந்து கொண்டு இராணுவம், விமானப்படை போன்றவற்றின் மூத்த அதிகாரிகள் கூறிவருகின்றனர். அதுபோன்ற சம்பவம் அல்லது தவறான கணக்கீட்டால் தாக்குதல் நடைபெற்றால் மிகப்பயங்கரமான பேரழிவு ஏற்படும்.

எந்த வகையிலாவது தன்னிச்சையான தாக்குதலை நடத்த எந்தவொரு நாடு நினைத்தாலும் அது தவறானதாக அமையும். பாகிஸ்தானைப் பாதுகாக்கும் வகையில் இராணுவம் வலிமையாக இருக்கிறது என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)



உலகக் கோப்பையை கைப்பற்றியதற்காக தமிழக முதல்வர் கருணாநிதி சென்னையில் இந்திய அணி வீரர்களுக்கு பரிசு தொகையை வழங்கினார். முன்னதாக அணித் தலைவர் தோனி முதல்வரை சந்தித்து வாழ்த்துக்களை பெற்றுக் கொண்டார்.



ஹெலிகொப்டர் விபத்தில் இறந்த அருணாச்சல பிரதேச முதல்வர் டோர்ஜியின் உடல் இடா நகருக்கு கொண்டு வரப்பட்ட போது பொதுமக்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர்.

## 2 ஜி அலைக்கற்றை விவகாரம்

# சிதம்பரத்தை விசாரிக்க பா.ஜ.க.கோரிக்கை

இரண்டாம் தலைமுறை கையடக்கத் தொலைபேசி அலைக்கற்றை ஒதுக்கீடு முறைகேடு தொடர்பாக தற்போதைய உள்துறை அமைச்சரும் முன்னாள் நிதியமைச்சருமான ப.சிதம்பரத்திடம் சி.பி.ஐ எனப்படும் மத்திய புலனாய்வுத்துறை விசாரணை நடத்த வேண்டும் என்று பாரதீய ஜனதா கட்சி வலியுறுத்தியுள்ளது.

அக்கட்சியின் மூத்தலைவர்களில் ஒருவரான யஷ்வந்த் சின்ஹா இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் பா.ஜ.க தலைவர் நிதின் கட்கரி மற்றும் மூத்தலைவர் முரளிமனோகர் ஜோஷி, ஜஷ்வந்த் சின்ஹா உள்ளிட்டோர் டெல்லியில் நடந்த ஒரு கூட்டத்தில் பங்கேற்றார்கள்.

அப்போது பேசிய யஷ்வந்த் சின்ஹா, உள்துறை அமைச்சர் சிதம்பரத்திடம் சி.பி.ஐ விசாரணை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தினர்.

ஸ்பெக்ரம் ஒதுக்கீடு நடந்த போது, சிதம்பரம் தான் நிதியமைச்சராக இருந்தார். ராசா சொல்வதை யெல்லாம் அவர் கேட்டுக் கொண்டார். அதனால் 2ஜி விவகாரம் தொடர்பாக சிதம்பரத்திடம் சி.பி.ஐ விசாரணை நடத்தும் வரை விசாரணைகள் முழுமையடையாது.

இந்தப் பிரச்சினை முடிந்து விட்டதாகக் கருதப்படவேண்டுமென்று அப்போது சிதம்பரம் சொல்லியிருக்கிறார். அவர் எந்த அடிப்படையில் அப்படிப்பட்ட ஒரு பரிந்துரையை அளித்தார் என்பது குறித்து சி.பி.ஐ விசாரணை நடத்தவேண்டும்.

ஏதோ ஒரு இடத்தில் கரும்புள்ளி இருக்கிறது. அதைக் கண்டுபிடிக்க வேண்டும். என்றார் பா.ஜ.க.வைச் சேர்ந்த யஷ்வந்த் சின்ஹா.

யஷ்வந்த சின்ஹாவின் இந்தப் புகார் தொடர்பாக ப.சிதம்பரம் இதுவரை தனது கருத்துக்களை வெளியிடவில்லை. (ஸ்ரீ-2)

மிக மிக முன்யோசனையுடன் தீட்டப்பட்ட சாதாரண திட்டங்கள் கூட ஊக்கம் மிகுந்த செயல்களினால் பெரும் திட்டமாக உருவெடுத்து வெற்றியளித்து விடுகின்றன.
— ஜேம்ஸ் அடிசன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இலங்கை அரசாங்கத்தை ஐ.நா. நெருக்கப் போகிறது

ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கை.அது தொடர்பில் சர்வதேச ஊடகங்கள் காட்டும் அக்கறை.உலக நாடுகளின் கண்காணிப்பு. இவற்றின் மத்தியில் இலங்கை அரசு ஐ.நாவுக்கு விளக்கம் கொடுக்க வேண்டிய கட்டாயம் என்ற சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

இந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து அரசு தப்பித்துக் கொள்ளவேண்டுமாயின் அதற்கான ஒரே வழி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது ஆகும்.

இச்சந்தர்ப்பத்தில் தான் இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி அனைவரும் சிந்திக்கும் முக்கியத்துவம் ஏற்படப் போகின்றது.

ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கைக்கு விளக்கம் கொடுப்பது தொடர்பில் அரசு வீறாப்புப் பேசியிருந்தாலும் இப்போது விளக்கம் கொடுத்தாக வேண்டும் என்ற நிலைப்பாட்டிற்கு வந்துள்ளது.

ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கைக்கு விளக்கம் கொடுப்பதென்பது சாதாரண விடயமல்ல. ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்கு விளக்கம் கொடுத்துவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்ற நிலைமை இருக்குமாயின், வெளியிட்ட அறிக்கை அர்த்தமற்றதாகிவிடும்.

எனவே ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை இலங்கை அரசை எங்கோ ஒரு மூலையில் வைத்து நெருக்கவே போகிறது.

அந்த மூலை எதுவென்பது இலங்கை அரசுக்கும், ஐ.நா. சபைக்கும், உலக நாடுகளுக்கும் தெரியாமல் இல்லை.

ஆக, இலங்கை அரசு வன்னிப் போரின் போது இழைத்த குற்றங்களுக்கான விசாரணை என்பதற்கு அப்பால், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு ஐ.நா. கட்டளையிட, அதனை இலங்கை அரசும் ஏற்றுக் கொண்டு அது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடும் என்பது நிறுத்திட்டமான உண்மை.

இங்குதான் சிக்கல் ஆரம்பிக்கிறது. அதாவது இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது தமிழ்த் தரப்புடன் பேசுவதன் மூலம் அடையப்பட வேண்டியதாகும்.

தமிழ்த் தரப்பு என்றவுடன் அங்கு ஏமாற்று வித்தைகளை ஆளும் தரப்பு காட்டுவது நிச்சயம் நடைபெறும்.

ஆகவே இங்குதான் தமிழ்த் தரப்புகள் விழிப்புடன் செயற்பட வேண்டும். இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிய முன்னெடுப்புகள் ஐ.நா. சபையின் கண்காணிப்பில் மேற்கொள்வதே இலங்கை அரசுக்கும் தமிழ் மக்களுக்கும் உகந்தது.

இதைவிடுத்து நாங்கள் பேசினால் அது போதும் என்று தமிழ்த் தரப்புகள் நினைத்தால் எல்லாம் நாசமாகிவிடும். கவனம் இப்படியொரு சந்தர்ப்பம் மீண்டும் வராது.

# இலங்கை விவகாரத்திலிருந்து தப்ப சீனாவும் ரஷ்யாவும் திட்டம்!

(கொழும்பு)

மேற்குலகைப் பகைத்துக் கொள்வதைத் தவிர்ப்பதற்காக ரஷ்யாவும் சீனாவும் இலங்கையை கைவிட்டு விடக் கூடும் என்று ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கையானது இலங்கையின் அனைத்துப் பகுதிகள் மீதுமே குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது.அது நாட்டின் தனியொரு பகுதி மீது குற்றச்சாட்டை முன்வைக்கவில்லை.

இந்த அறிக்கையானது ஐ.நா பொதுச் செயலரின் கையெழுத்துடன் வெளியாகியுள்ளதால் அனைத்துலக சமூகத்தின் மத்தியில் பெறுமதி வாய்ந்தது.

இது ஐ.நா. சாசனங்களுக்கு முரணானது என்றும் அனைத்துலகச் சட்டங்களுக்கு முரணானது என்றும் நாம் வாதிட்டு எதிர்ப்புத் தெரிவித்தாலும் ஐ.நா. பொதுச் செயலரின் அங்கீகாரத்துடனேயே அது வெளியிடப்பட்டுள்ளது.

அதனால் அதற்கு ஒரு பெரிய பெறுமதி உள்ளது.இதை தவறாகவும் பயன்படுத்த முடியும்.முறைகேடாக பயன்படுத்தவும் முடியும்.

2009ஆம் ஆண்டில் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது பல்வேறு நாடுகளின் ஆதரவுடன் அதை இலங்கை அரசு சமாளித்துக் கொண்டது.

மனித குலத்துக்கு எதிரான மீறல்கள் எதுவும் இடம்பெற்றதாக நம்பகமான எந்தவொரு ஆதாரமோ தகவல்களோ முன்வைக்கப்படாததால் அப்போது சமாளிக்க முடிந்தது.

ஐ.நாவின் அறிக்கை வெளியான பின்னர் அப்போது ஆதரவளித்த சில நாடுகள் இலங்கைக்கான ஆதரவை விலக்கிக் கொள்ளலாம்.

சீனாவோ ரஷ்யாவோ தொடர்ந்தும் இலங்கைக்கு ஆதரவளிக்கும் என்பதில் சந்தேகம் உள்ளது.அவை முற்றிலும் ஜனநாயக நாடுகள் அல்ல.

அவை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளை பகைத்துக் கொள்வதைத் தவிர்க்க இலங்கைக்கு எதிரான தீர்மானம் கொண்டு வரப்படும் போது சமுகமளிக்காமல் ஒதுங்கிக் கொள்ளவும் கூடும்.

ஏனென்றால் அவற்றின் 60 தொடக்கம் 70வீதம் வரையிலான சந்தை மேற்குலகிலேயே தங்கியுள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ச-5)

# இலங்கையை நீக்கக்கோரி ஐ.நாவிடம் மனு கையளிப்பு

இலங்கையை ஐ.நாவிலிருந்து நீக்கக்கோரி மலேசியாவில் உள்ள 130 அரசசார்பற்ற நிறுவனங்கள் கையெழுத்திட்ட மனுவொன்று மலேசியாவிலுள்ள ஐ.நா. பணியகத்தில் கையளிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் செம்பருத்தி இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த ஒன்றுகூடல் நிகழ்வு குறித்து அந்த அமைப்பு பிரதிநிதி நாடுகடந்த தமிழீழ அரசாங்க-தகவல் துறை அமைச்சகத்தின் நாதம் ஊடக சேவைக்கு கருத்துரைத்திருந்தார்.

அவரது கருத்துரைப்பின் போது 1949 ஜெனிவா உடன்படிக்கையை மீறி மனித உரிமைக்கு மீறலாக தமிழ் மக்களை போரில் கொன்றொழித்த இலங்கை அரசு மீது அனைத்துலக நீதிமன்றம் விசாரணை தொடர வேண்டுமென கோரப்பட்டுள்ளதோடு ஐ.நா. ஆய்வு குழு வழங்கிய தகவல்கள் அடிப்படையில் இலங்கை அரசின் மீது நடவடிக்கை எடுக்கவும் கோரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந் நிலையில் மிக மோசமான மனித உரிமை மீறல்களை நிகழ்த்தியிருக்கும் இலங்கை அரசினை ஐ.நா. அங்கத்துவத்தில் இருந்து நீக்குமாறும் மனுவில் கோரப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (ச-5)

# இன்று 29ஆவது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடும் துர்க்காபுரம் மகளிர் இல்லம்

துர்க்காபுரம் மகளிர் இல்லம் இன்று 29வது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடுகின்றது.

ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்ற உறுதிப்பாட்டுடன் 1982 ஆம் ஆண்டு தைப்பூச நன்னாளிலே இவ் இல்லம் ஆரம்பிக்கப்பெற்றது.

அநாதை என்ற சொல்லை தமது அகராதியில் இருந்து நீக்கிய சிவத்தமிழ் செல்வி அம்மா ஆதரவற்ற பெண் பிள்ளைகள் என்ற பெருமையோடும் அன்போடும் அரவணைத்து இவ் இல்லத்தை நடத்தி வந்தார்.

இப்பிள்ளைகளுக்கு கல்வியும், உணவும் உடையும் வழங்கி சீரும் சிறப்புமாக நடத்திவந்த பெருமை சிவத்தமிழ் செல்வி அம்மா அவர்களையேசாரும்.

அம்மையார் இல்லத்தின் பணிகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு 26 ஆண்டுகளும் ஆண்டு விழாக்களையும், பரிசளிப்பு விழாக்களையும் நடத்தி வெற்றிகண்டவர்.

இன்று விழாவைக் கொண்டாடும் எங்களுக்கு சிவத்தமிழ் செல்வி அம்மாவின் பணிகள் அனைத்தும் முன்னுதாரணமாகும். துர்க்கை அம்மன்கோயிலை சமூகக் கோயிலாக மாற்றிய பெருமை சிவத்தமிழ் செல்வி அம்மாவையே சாரும். இவரே இந்த இல்லத்தின் ஸ்தாபகர் என கோடிட்டு காட்டுவதில் பெருமையடைகின்றோம்.

வடக்கிலும், கிழக்கிலும் இவ்வாறான பல இல்லங்கள் இன்று காணப்படுகின்றன. இல்லங்களை நிர்வகிக்க நிதிவளம் மிகவும் முக்கியமானதொன்றாகும். சிவத்தமிழ் செல்வி அம்மாவின் பணிகளைப் பார்த்து மகிழ்ந்த உள்நாட்டு, வெளிநாட்டு அன்பர்களின் ஆதரவும் அன்பளிப்புகளும் நிறைய நிறைய கிடைத்தன. குடாநாட்டிலும், கொழும்பு மாவட்டத்திலும் வெளிவந்த பத்திரிகைகளும் பத்திரிகை ஆசிரியர்களும் சிவத்தமிழ் செல்வி அம்மையாரின் முன்னுதாரணப் பணிகளை எல்லாம் எழுதி வெளியிட்டன.அம்மையாரின் சமூக நலப் பணிகள் பத்திரிகை உலகத்தை கவர்ந்தது.

நம் நாட்டின் மிகவும் சோதனை மிகுந்த முப்பதாண்டு காலம் மிகவும் கொடூரமானது.இக்காலங்களில் இல்லப்பிள்ளைகளை பாதுகாப்பதிலும், பராமரிப்பதிலும் ஏற்பட்ட கஷ்டங்கள் குறிப்பிடமுடியாதன.

இந்த கஷ்டங்கள் ஏற்பட்டபோதும் துர்க்கை அம்பாளின் பேரருளும், பிள்ளைகளின் துர்க்கை அம்மன் திரு வீதியில் வலம்வந்து பாடிய சிவபுராணம், கோளறுபதிகம், திருசங்கமப் பதிகங்களை பாடியதன் பயனும் அமைதி கொடுத்தன.1992ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி நடைபெற்ற விமானக்குண்டு வீச்சுத் தாக்குதலிலும் துர்க்கை அம்பாளின் வழிபாடும் பிரார்த்தனையும்தான் காப்பாற்றியது.

ஒரு காலத்தில் ஏறக்குறைய 65-70 பிள்ளைகளே இடம்பெற்று கல்வியைப் பெற்றனர்.ஆனால் இன்று வன்னிப் பெருநிலப்பரப்பில் ஏற்பட்ட கொடிய யுத்தத்தினால் பாதிப்புற்று அகதிகளாக்கப்பட்ட 100க்கும் அதிகமான பிள்ளைகள் இல்லத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த வகையில் மனம்வெந்து தவிக்கும் உள்ளங்களைக் கொண்ட பிள்ளைகளுக்கு அமைதி கூறவல்ல தலைமைத்துவச் சிறப்புக்களைக் கொண்ட சிவத்தமிழ் செல்வி அம்மா இன்று இல்லையே என்ற குறை எங்களை வாட்டுகிறது. எழுச்சிப் பெருநிலையடைந்த இல்லம் கல்வியிலும் சைவ பண்பாட்டு கலாசாரத்திலும் மேலோங்க எல்லாம் வல்ல துர்க்கை அம்பாளைப் பிரார்த்திப்போமாக.

கா.சிவபாலன்

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



வாழ்க்கையில் நான் கற்றுக் கொண்ட ஒரு பாடம் எதுவெனில் குறிக்கோளில் செலுத்தும் அதே கவனத்தை நடைமுறைக்குக் கொண்டு வரும் போதும் செலுத்த வேண்டும் என்பதுதான். வெற்றியின் இரகசியமே இதில் புதைந்துள்ளது. குறிக்கோளில் காட்டப்படும் அக்கறை, செயல்படுத்துவதில் இருக்க வேண்டும்.

வலியற்றவர்கட்கு இங்கு இடமில்லை. இம்மையிலும் மறுமையிலும் இல்லை. பலவீனம் அடிமைத்தனத்தில் புகுத்தி விடும். உடலளவிலும் உள்ளத்தளவிலும் வரக்கூடிய எல்லாத் துன்பங்களுக்கும் இந்தப் பலவீனமே காரணம். பலவீனமே மரணம்.

இதுவே பேருண்மை. வலிமையே வாழ்வு! கோழைத்தனமே மரணம்! வலிமையே இன்பம்; வளமை; மரணமிலாப் பெருவாழ்வு: எனவேதான் நான் கூறுகிறேன்; அளப்பரிய ஆன்மீக ஆற்றலை, தெய்வீக ஆற்றலை நாம் பெற வேண்டும். தெய்வீகப் பேராற்றலால் ஆன்மீகத்தை அடைவதொன்றே வழி. விடுதலையுறுதற்கு அதுவே பெருவழி. எதற்கு நம்மைத் தகுதியாக்குகிறோமோ அதை நாம் பெற்று விடுகிறோம்.

# நிபுணர் குழு அறிக்கையை பொன்சேகா சாதகமாக பயன்படுத்திக் கொள்வாரோ?

## பாதுகாப்பு செயலாளர் அச்சம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை தொடர்பிலான அறிக்கையை சரத் பொன் சேகா சாதகமாக பயன்படுத்திக்கொள்வார் என்ற அச்சத்தில் பாதுகாப்பு செயலாளர் கோத் தபாயராஜபக்ஷஇருப்பதாகதெரிவிக்கப்படுகிறது.

சட்ட மா அதிபர் காரியாலயத்தின் அதி காரி ஒருவர் இதனை தெரிவித்துள்ளார். வெள்ளைக்கொடி வழக்கு குறித்த தகவல்கள் ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந் நிலையில் அவ்வாறு குறித்த அறிக் கையை தமக்கு சாதகமாக சரத் பொன்சேகா பயன்படுத்திக் கொள்வது குறித்து அவ தான மாக இருக்குமாறு பாதுகாப்பு செயலாளர் சட்ட மா அதிபரை கோரியுள்ளார்.

இதற்கிடையில் கடந்த 4ஆம் திகதி சரத் பொன்சேகா தமது வாக்கு மூலத்தை வழங்கு வதாக இருந்தது. எனினும் அவரது சட்டத்த ரணி வெளிநாடு சென்றுள்ள நிலையில் அந்த வாக்கு மூலம் ஒத்திவைக்கப்பட்டுள் ளது. (ஸ்ரீ-2)

# நீதிபதியை திட்டி அச்சுறுத்திய விசேட அதிரடிப்படையினருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

களுத்துறை உயர் நீதிமன்ற நீதிபதியை திட்டி அச்சுறுத்திய விசேட அதிரடிப்படை யினருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட் டுள்ளது.

களுத்துறை உயர்நீதிமன்ற நீதிபதி சரத் காமினி எதிரிசிங்க புத்தளம் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கொன்றிற்காக கடந்த மார்ச் மாதம் 25ஆத் திகதி புத்தளம் சென்று விட்டுத் திரும்பி வரும் சந்தர்ப்பத்திலேயே இச் சம்பவத்துக்கு முகம் கொடுத்துள்ளார்.

அச் சந்தர்ப்பத்தில் வடமத்திய மாகாண சபை முதலமைச்சர் பேர்ட்டி பிரேமலால் திசா நாயக்கவின் பாதுகாப்புக்குப் பணித்த விசேட அதிரடிப்படையினர் தங்கள் வாகனத் துக்கு நீதிபதியின் வாகனம் இடையூறு செய்ததாக கூறி கெட்ட வார்த்தைகளால் திட்டி அச் சுறுத்திவிட்டுச் சென்றுள்ளனர்.

அதனையடுத்து விசேட அதிரடிப்படை யின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் சந்திர சிறி ரணவனவுக்கும் நீதிமன்ற அழைப்பாணை விடுக்கப்பட்டு கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளதுடன் சம்பவத்துடன் தொடர்புடைய விசேட அதிரடிப்படையின ருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# ரொபேர்ட் பிளேக்குடனான சந்திப்பு சாதகமான முறையில் அமைந்தது

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு



இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ரொ பேர்ட் பிளேக்குடனான சந்திப்பு சாதகமான முறையில் நடைபெற்றதாக பாதுகாப்புச் செய லாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ரொபேர்ட் பிளேக் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கு விஜ யம் செய்த போது யுத்தத்தினால் பாதிக்கப் பட்ட பொதுமக்களுடனான சந்திப்பு குறித்த விடயங்களை பாதுகாப்புச் செயலாளரிடம் விளக்கிக் கூறியுள்ளார்.

அந்த சந்திப்புக்களின் போது போதிய ளவு தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கப் பெற வில்லை என்பன போன்ற அன்றாட வாழ்க் கையுடன் தொடர்புடைய பிரச்சினைகளே பொதுமக்கள் சார்பில் முன்வைக்கப்பட்டதாக வும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் எவரும் கருத்து வெளியிடவில்லை எனவும் ரொபேர்ட் பிளேக் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் யுத்தக் குற்றச் செயல் விசாரணைகள் நடத் தப்பட வேண்டுமென வலியுறுத்தவில்லை எனவும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆயுதக் குழுக்களின் பிரசன்னம் தொடர்பில் பிளேக் சுட்டிக்காட்டியதாகவும். அரசியல் காரணி களை கருத்திற் கொள்ளாது அவ்வாறான குழுக்களின் ஆயுதங்களை களைவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக தாம் தெளிவுபடுத்தியதாக பாதுகாப்புச் செய லாளர் தெரிவித்துள்ளார். இவ்வாறான ஆயு தக் குழுக்கள் தொடர்பில் தரவுகள் கிடைக்கப் பெற்றால் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக் கப்படும் என அவர் உறுதியளித்துள்ளார். யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் தண்டனை வழங்குவது தொடர்பில் சாதாரண பொதுமக் கள் கோரிக்கை எதனையும் முன்வைக்க வில்லை என தெரிவித்துள்ளார்.

நிலையான அரசியல் தீர்வுத் திட்டமொன் றை பெற்றுக் கொள்வதற்காக தமிழ்த் தேசி யக் கூட்டமைப்புடனும். புலம் பெயர் தமிழ் சமூகத்துடனும் இணைந்து செயற்படத் தயார் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ரொபர்ட் பிளேக்கிடம் உறுதியளித் துள்ளார். எனினும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் விடயங்களில் யதார்த்தபூர்வமான அணுகுமுறைகள் பின்பற்றப்பட வேண்டு மெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.(ஸ்ரீ-2)

# சனசமூக நிலையம் பெயர்மாற்றம்

(யாழ்ப்பாணம்)

சரவணை கிழக்கு கவியரசு சனசமூக நிலையம் கடந்த பெப்ரவரி மாதம் நடை பெற்ற வருடாந்த பொதுக்கூட்டத்தில் ஏகமன தாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கமைய பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலைய மென பெயர்மாற்றம் செய்யப்பட்டது.

அத்துடன் புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் தலைவராக கா. விவேகானந்தன், உபதலைவராக க. இராசலிங்கம், செயலா ளராக செ.ஜெயகாந்தன், உபசெயலாளராக த. அருணகிரிநாதன், பொருளாளராக கொ. சிவ யோகலிங்கம் மற்றும் செயற்குழு உறுப்பி னர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ)

# யுத்தம் காரணமாக அழிவடைந்த பொதுநோக்கு மண்டபம் மீள்நிர்மாணம்

(பூநகரி)

யுத்தம் காரணமாக முற்றாக அழிவடை ந்துள்ள மட்டு நாடு மேற்கு பொதுநோக்கு மண்டபம் மக்களின் கோரிக்கையை தொட ர்ந்து மீண்டும் புதிதாக கட்டப்படவுள்ளது.

இதற்கான நிதி ஒதுக்கீடாக 20 இலட்சம் ரூபாவை நிக்கொட் நிறுவனம் வழங்கியுள் ளது.

இதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் புதன்கிழமை பூநகரி உதவி அரசாங்க அதிபர் ஏ.எஸ். வசந்தகுமாரால் அடிக்கல் நாட்டப்பட்டு வேலைகள் ஆரம்பிக் கப்பட்டன.

தொடர்ந்து வேலைகள் நடைபெற்று வருகின்றன. (ஸ்ரீ-3-84)

# வீதியை செப்பனிட்டு தருமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

புத்தூர் மேற்கு நவக்கிரி மஸ்கன் வீதியா னது நீண்ட காலமாக வீதி அபிவிருத்தி அதி கார சபையினால் செப்பனிடப்படாது குன்று குழியுமாக காணப்படுகிறது.

இவ் வீதியால் பயணிக்கும் மக்கள் தமது அன்றாட கடமைகளைச் செய்யமுடியாமல் பெரும் துன்பங்களை எதிர்நோக்கி வரு வதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட வீதியானது கடந்த 10 வரு டங்களாக செப்பனிடப்படாதுள்ளது. இவ் வீதி யூடாக கனரக வாகனங்கள், நோயாளர் காவு வண்டி எனப் பல வாகனங்கள் பயணிக்கின்றன.

அத்துடன் மழை காலங்களில் இவ் வீதி யூடாக பயணிக்கும் மாணவர்களுக்கு வீதி களில் தேங்கி நிற்கும் நீரால் பல சிரமங் களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, சம்பந்தப்பட்டவர்களிடம் முறையிட்டும் எவ்வித நடவடிக்கையும் மேற் கொள்ளவில்லையென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் வீதி யில் கவனமெடுத்து செப்பனிட்டு மக்களின் போக்குவரத்திற்கு ஒழுங்கு செய்யுமாறு அப் பகுதி வாழ் மக்கள் கேட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

## கைத் தொலைபேசியை பயன்படுத்தியவாறு

# புகையிரத பாதைகளில் பயணிப்பதால் ஏற்படும் விபத்துக்கள் அதிகரிப்பு

கையடக்கத் தொலைபேசிகளை பயன் படுத்தியவாறு புகையிரத பாதைக்கு அண் மையில் பயணிப்பது மற்றும் வாகன போக்கு வரத்தில் ஈடுபடுவதன் காரணமாக ஏற்படும் விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள தாக புகையிரத திணைக்களம் குறிப்பிடுகின்றது.

தொலைபேசியில் உரையாடிக் கொண்டு புகையிரதப் பாதைகளில் பயணிப்பதன் காரண மாக பல உயிரிழப்புக்கள் இடம்பெறுவதாக புகையிரதத் திணைக்களத்தின் திட்டமிடல் பணிப்பாளர் விஜய் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்து வதற்கு புகையிரதப் பாதைகளுக்கு அண் மையில் கையடக்கத் தொலைபேசிகளை பாவிப்பதனை மட்டுப்படுத்துமாறு பொது மக் களிடம் புகையிரத திணைக்களம் வலியுறுத்து கின்றது.

கடந்த காலங்களில் புகையிரத குறுக்கு வீதிகளில் கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்திய வண்ணம் பயணித்த பலர் திடீர் விபத்துக்களுக்கு உள்ளானதாக விஜய சமரசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் புகையிரதப் பாதைகளுக்கு அண்மையில் வாகனத்தை செலுத்தும் சாரதி கள் கையடக்கத் தொலைபேசியை பயன் படுத்துவதாலும் விபத்துக்கள் இடம்பெறுவ தாக திட்டமிடல் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக புகையிரத பாதை களுக்கு அண்மையில் பயணிக்கும் போது கையடக்கத் தொலைபேசி பயன்படுத்து வதை தவிர்க்குமாறு விஜய சமரசிங்க பொது மக்களிடம் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)




# நிரந்தர வைத்தியரை நியமிக்க கோரிக்கை

பூநகரி அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றி வந்த வைத்திய அதிகாரி கடந்த இருவாரங்களுக்கு முன் இடமாற்றம் பெற்று சென்றுள்ளதையடுத்து இதுவரை நிரந்தர வைத்தியர் நியமிக்கப்படவில்லை. இதனால் நாளாந்தம் வைத்தியசாலைக்கு வரும் நூற்றுக்கணக்கான மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும் அவல நிலைமையைக் காணமுடிகிறது.

வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் காலைவேளையில் உருத்திரபுரம் வைத்தியசாலை வைத்தியர் வருகை தந்து சொற்ப நோயாளர்களை பார்வையிட்டுச் செல்லும் நிலை உள்ளது.

மாலை வேளையில் வரும் நோயாளி கள் ஏமாற்றத்துடன் திரும்புவதுடன் பெரும் பணச் செலவு செய்து யாழ்ப்பாணம், கிளி நொச்சி வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய அவல நிலை காணப்படுகிறது.பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு சேவை செய்ய வேண்டிய இவ் வைத்திசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை வேண்டி நிற்கின்றோம்.

பொன்.தில்லைநாதன், பூநகரி

DLF IPL ஐ.பி.எல் கொண்டாட்டம்

ஏப்பிரல் 8 முதல் மே 28 வரை

# ஹயில் அதிரடியில் சிதறியது பஞ்சாப்

# பெங்களூர் அணிக்கு இமாலய வெற்றி

(பெங்களூர்)

கிறிஸ் ஹயிலின் சகலதுறை ஆட்டம் கைகொடுக்க பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 85 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியை வீழ்த்தியது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பின் 10 அணிகள் மோதும் 4 ஆவது இருபது-20 தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இதில் பெங்களூரில் நேற்று நடைபெற்ற 47 ஆவது போட்டியில் டானியல் விக்டோரி தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியும் கில்கிறிஸ்ட் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணித்தலைவர் கில்கிறிஸ்ட் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணிக்கு ஹயில்-டில்சான் ஜோடி அதிரடி ஆரம்பத்தை வழங்கினர்.

இதில் திலகரட்ண டில்சான் 9 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 16 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.



அடுத்து களமிறங்கிய ஹோலி சிறப்பான இணைப்பை வழங்க ஹயில் அதிரடியைத் தொடர்ந்தார்.

இதில் கிறிஸ் ஹயில் 28 பந்துகளில் அரைச்சதம் பெற பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 9.2 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

அதிரடியைத் தொடர்ந்த கிறிஸ் ஹயில் 46 பந்துகளில் தொடரின் இரண்டாவது சதத்தைப் பெற்று அசத்தினார்.

பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 14.4 ஓவர்களில் 154 ஓட்டங்களை எடுத்தபோது கிறிஸ் ஹயில் 49 பந்துகளில் (10 பவுண்டரிகள், 9 சிக்ஸர்கள் உட்பட) 107 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த டிவில்லியர்ஸ் அதிரடியாக ஆட மறுமுனையில் விராட் ஹோலி 31 பந்துகளில் (4 பவுண்டரிகள்உட்பட) 27 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 205 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஏ.பி.டிவில்லியர்ஸ் 14 பந்துகளில் (2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 27 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார்.

பந்துவீச்சில் ரியான் ஹரிஸ் 3 விக்கெட்டுக்களையும் பியூஸ் சாவ்லா 2 விக்கெட்டுக்களையும் மைக்லரன் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 206 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை விரட்டிய கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியளித்தது.

ஆட்டத்தின் முதலாவது பந்தில் அணித்தலைவர் கில்கிறிஸ்ட் பூச்சியத்துடன் ரன்-அவுட் முறையில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த நாயர் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

தொடர்ந்து வல்தாரி 21, மார்ஸ் 4, சனி சிங் 4, கார்த்திக் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 8.5 ஓவர்களில் 57 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து தத்தளித்தது.

பின் வரிசையில் மைக்லரன் 28, ஹரிஸ் 17, பிரவீன் குமார் 15 ஓட்டங்கள் என தமது பங்கிற்குப் பெற கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 20 ஓவர்கள் நிறைவில்9 விக்கெட்டுக்களையிழந்து 120 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 85 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் அரவிந்த் 4 ஓவர்கள் பந்துவீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் கிறிஸ் ஹயில் 4 ஓவர்கள் பந்துவீசி 21 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் அணித் தலைவர் டானியல் விக்டோரி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் பெங்களூர் றொயல் சலஞ்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 9 ஆவது போட்டியில் 5 ஆவது வெற்றியைப் பதிவு செய்தது.

இப் போட்டியில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியின் வெற்றிக்கு சகலதுறையிலும் ஜொலித்த கிறிஸ் ஹயில் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

## இங்கிலாந்துக்கு 3 தலைவர்கள்

இங்கிலாந்து அணிக்கு 3 அணித்தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். டெஸ்ட் அணிக்கு ஸ்றொரசும் ஒருநாள் போட்டிக்கு அலிஸ்டர் ஹுக்கும் இருபது-20 போட்டிக்கு சகலதுறை வீரர் ஸ்டுவார்ட் பிரோட்டும் அணித்தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## கனேரியாவுக்கு பாக்.நெருக்கடி

பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளர் டெனிஸ் கனேரியா இங்கிலாந்தில் உள்ள எசக்ஸ் கவுண்டி அணியில் விளையாடினார். அப்போது சூதாட்ட புகார் தொடர்பாக அவரிடம் விசாரணை நடந்தது. இதில் விடுவிக்கப்பட்டாலும் பாகிஸ்தான் அணியில் அவர் இதுவரை சேர்க்கப்படவில்லை. மீண்டும் பாகிஸ்தான் அணியில் இடம்பெற எசக்ஸ் அணியில் இருந்து நற்சான்றிதழ் வாங்கி வரும்படி கனேரியாவுக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை புதிய நெருக்கடியைக் கொடுத்துள்ளது.

## ஐ.பி.எல். போட்டிகளிலிருந்து ஓய்வு பெற வோர்ன் முடிவு



தற்போது நடைபெற்றுவரும் ஐ.பி.எல். போட்டியுடன் அனைத்து விதமான தொழில்சார் கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் தான் ஓய்வு பெறப்போவதாக அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் தெரிவித்துள்ளார்.

ஆம் இது தான் நான் ஐ.பி.எல். போட்டிகளில் பங்குபற்றும் கடைசி வருடம் கடந்த 4 வருடங்களும் விநோதமானதாகத்தான் இருந்தன. நான் சிறந்த தருணத்தை அனுபவித்தேன். ஆனால் ஐ.பி.எல். போட்டிகளுக்கு பிரியாவிடை கொடுக்கும் நேரம் வந்துவிட்டது என ஷேன் வோர்ன் டுவிட்டர் இணையத்தின் மூலம் தெரிவித்துள்ளார்.

41 வயதான ஷேன் வோர்ன் டெஸ்ட் போட்டிகளில் 708 விக்கெட்டுக்களை வீழ்த்தியவர். டெஸ்ட் போட்டிகளில் 700 விக்கெட்டுக்களைக் கடந்த முதல் வீரர் ஷேன் வோர்ன் ஆவார். பின்னர் அவரின் சாதனையை முத்தையா முரளிதரன் முறியடித்தார்.

டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஷேன் வோர்ன் ஓய்வுபெற்ற பின்னர் 2008 ஆம் ஆண்டு முதலாவது ஐ.பி.எல். தொடரில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் தலைவராகவும் பயிற்றுநராகவும் ஷேன் வோர்ன் கடமையாற்றினார்.

அதிக அறிமுகமில்லாத வீரர்களைக் கொண்ட அவ்வணி சம்பியனாகியமை குறிப்பிடத்தக்கது. இவ்வருடம் 10 போட்டிகளில் பங்குபற்றியுள்ள அவ்வணி 5 போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளது.

## புள்ளிப் பட்டியல்

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| மும்பை இந்தியன்ஸ் | 9 | 7 | 2 | 0 | 0 | 14 | +0.635 |
| கொல்கத்தா | 10 | 6 | 4 | 0 | 0 | 12 | +0.440 |
| சென்னை | 9 | 6 | 3 | 0 | 0 | 12 | +0.292 |
| றோயல் சலஞ்ஜர்ஸ் | 9 | 5 | 3 | 0 | 1 | 11 | +0.495 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 10 | 5 | 4 | 0 | 1 | 11 | -0.194 |
| கொச்சி | 10 | 5 | 5 | 0 | 0 | 10 | -0.394 |
| டில்லி | 10 | 4 | 6 | 0 | 0 | 8 | -0.179 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 10 | 3 | 7 | 0 | 0 | 6 | -0.125 |
| கிங்ஸ் லெவின் பஞ்சாப் | 8 | 3 | 5 | 0 | 0 | 6 | -0.898 |
| புனே வாரியர்ஸ் | 9 | 2 | 7 | 0 | 0 | 4 | -0.199 |

## இன்றைய ஆட்டங்கள்



# தமிழ் கூட்டமைப்பு எம்.பிக்கள் இன்று வவுனியாவுக்கு விஜயம்

(வவுனியா)

வவுனியா நகரசபையில் தொடரும் குழப்ப நிலையை முடிபுக்குக் கொண்டுவருவதற்காக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று இன்று காலை வவுனியா நகரசபைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நகரசபை உறுப்பினர் ஒருவர் நகரசபைச் செயலாளரை அவதூறாகப் பேசியமை தொடர்பாக குழப்ப நிலையொன்று நகரசபை மட்டத்தில் கிளப்பப்பட்டு தற்போது அது வடக்கு மாகாணம் முழுவதும் பரப்பப்பட்டுள்ள நிலையில் கூட்டமைப்பின் உயர் மட்டம் நேற்று இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

# மனிதாபிமான சட்ட மீறல்களுக்கு சுயாதீன விசாரணை தேவை

## ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது நடந்ததாகத் தெரிவிக்கப்படும் சர்வதேச மனித உரிமை மற்றும் மனிதாபிமான சட்டமீறல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்படவேண்டும் என்று தென்னாபிரிக்காவின் ஆளும் கட்சியான ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கேட்டுக்கொண்டுள்ளது.

ஐ.நா.தலைமை செயலர் பான் கீ மூன் அவர்களால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு தனது விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள சம்பவங்கள் அனைத்தும் விசாரிக்கப்பட வேண்டும் என அக்கட்சி கேட்டுள்ளது.

இந்த நிபுணர் குழுவில் யாஸின் சூகா என்ற முன்னணி தென்னாபிரிக்க சட்ட நிபுணர் இடம் பெற்றுள்ளார்.

இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இலங்கை அரச படையினரும் சரி விடுதலைப்புலிகளும் சரி இருதரப்பாருமே சர்வதேச மனித உரிமை விதிகளையும் மனிதாபிமானச் சட்டங்களையும் மோசமான வகையில் மீறியிருந்தனர் என்று இந்த நிபுணர் குழு முடிபு தெரிவித்திருந்தது.

இந்த சட்டமீறல்களில் சில போர்க் குற்றங்களாகவும், மனித குலத்திற்கு எதிரான குற்றங்களாகவும் அமையக்கூடியவை என்றும் அந்த நிபுணர் குழு கூறியிருந்தது.

இந்த நிபுணர் குழுவின் பரிந்துரைகளுக்கு தாங்கள் முழுமையான ஆதரவு தருவதாக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கையின் தமிழ்ச் சமூகத்தின் முக்கிய குறைகள் தீர்க்கப்படவேண்டும் என்றும், அரசாங்கம் உண்மையான ஒரு சமூக நல்லிணக்க நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்றும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கேட்டுள்ளது. (ச-5)

# ஐ.நா. அறிக்கையை...

இலங்கை போர் முடிபுற்ற பின் நாட்டின் அபிவிருத்திப் பணிகளில் முழுமையாக ஈடுபட்டிருக்கிறது. பயங்கரவாதத்தை ஒழிப்பதில் அது பெற்ற வெற்றியை நாம் பாராட்ட வேண்டும் என மாலைதீவின் அமைச்சர் அகமட் நஸீம் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாடுகளினதும் வெளிநாட்டுக் கொள்கைகள் குறித்து கலந்துரையாடுவதற்காகவே தான் கொழும்புக்கு வந்திருப்பதாக தெரிவித்த அவர், தனது விஜயத்திற்கும் தருஸ்மன் அறிக்கைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கையையிட்டு தாம் கவலையடைவதாகக் குறிப்பிட்ட அவர், இது உண்மையில் ஆக்கபூர்வமானதல்ல எனவும் தெரிவித்தார்.

மாலைதீவில் அரசியல் நிலைமைகள் இன்னும் கொந்தளிப்பாகவே உள்ளன. அந் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் நாட்டில் இடம்பெற்ற கலவரங்கள் முன்னாள் மாலைதீவு ஜனாதிபதி கயூமுக்கு ஆதரவான எதிர் வரிசையிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களால் தோற்றுவிக்கப்பட்டது.

1978ஆம் ஆண்டுக்கும் 2008ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மாலைதீவின் ஜனாதிபதியாக இருந்த கயூமின் ஆட்சிக் காலத்திலேயே பாரிய ஊழல்கள், சித்திரவதைகள் மற்றும் அரசியல் கொலைகள் என்பன நடந்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது எனவும் மாலைதீவின் வெளிவிவகார அமைச்சர் அகமட் நஸீம் தெரிவித்துள்ளார். (ச-5)

# மேலும் 10...

ஐரோப்பா இலங்கையில் ஆபத்தை எதிர் நோக்கும் சமூகங்களுக்கு பாரபட்சமின்றி தொடர்ந்து சேவையாற்றும். அத்துடன் இந் நாட்டில் நிவாரண உதவிகளுக்கும் நீண்ட கால அபிவிருத்திக்குமான இடைவெளியைக் குறைப்பதற்காகவும் செயற்படும் என சர்வதேச ஒத்துழைப்பு மனிதாபிமான உதவி மற்றும் நெருக்கடி பதிலளிப்புக்கான ஐரோப்பிய ஆணையாளர் கிறிஸ்டாலினா ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார். (ச-5)

# நீதிமன்றில் ...

ராம் ஜெத்மலானி தெரிவித்துள்ளார்.

ஸ்பெக்ரம் ஊழல் வழக்கில் மத்திய புலனாய்வுக் கழகம் தாக்கல் செய்த துணை குற்றப்பத்திரிகையில் இடம்பெற்ற தமிழக முதல் அமைச்சர் கருணாநிதியின் மகளும் மாநிலங்கள் அவை உறுப்பினருமான கனிமொழி மற்றும் கலைஞர் தொலைகாட்சி நிர்வாக இயக்குநர் சரத்குமார் உள்ளிட்டவர்களை நேற்று நேரில் சமுகமளிக்குமாறு மத்திய புலனாய்வு கழகத்தின் சிறப்பு நீதிமன்றம் உத்தர விட்டிருந்தது.

இந்த உத்தரவின் படி கனிமொழி நேற்று நீதிமன்றில் சமுகமளித்திருந்ததுடன் இவரின் தரப்பில் நீதிமன்றில் சமுகமளித்த வழக்கறிஞர் ராம் ஜெத்மலானி, கனிமொழிக்கு பிணை வழங்கக் கோரி மனுத்தாக்கல் செய்தார்.

இதனைத் தொடர்ந்து இம் மனு மீது வாதிட்ட ராம் ஜெத்மலானி ஸ்பெக்ரம் அலைக்கற்றை தொடர்பான முழு சதித்திட்டத்திற்கும் அப்போதைய அமைச்சர் ராசாதான் காரணம் என்றும் கனிமொழிக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்றும் கூறியுள்ளார்.

ஸ்பெக்ரம் அலைக்கற்றை ஊழல் விவகாரத்தில் ராசா மற்றும் கனிமொழி ஆகிய இருவருமே குற்றமற்றவர்கள் என இதுவரை கூறிவந்த தி.மு.க. தற்போது தனது நிலையை மாற்றிக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனிமொழி கைது செய்யப்பட்டு சிறைக்கு செல்வதை தடுக்கவும் அவரை காப்பற்றவும் ராசாவை பலிக்கடாவாக்க கருணாநிதி தயாராகிவிட்டதாக தமிழக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

அத்துடன் இவ் வழக்கில் இதுவரை பிணை கோரமாட்டேன் என கூறிவந்த கனிமொழி நேற்று மத்திய புலனாய்வு கழகத்தின் சிறப்பு நீதிமன்றத்தில் அவரது சார்பில் வாதாடிய ராம் ஜெத்மலானி அவருக்கு பிணை வழங்குமாறு வாதாடியமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

அதேவேளை இவ்வழக்கு விசாரணை நடந்து கொண்டிருந்த போது இதய நோயாளியான தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஆதி சங்கர் திடீரென நீதிமன்றில் மயங்கி விழுந்ததால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. (ச-5)

# அரசியல் கைதிகள்...

வரலாற்றில் முதல் தடவையாக இவ்வாறான ஒரு மனு தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந் நிலையில் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று புதிய மகசின் சிறைச்சாலையில் சுமார் இரண்டரை மணித்தியாலங்களாக இடம்பெற்றுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் அரசியல் கைதிகளுடன் இந்த சந்திப்பில் பங்கேற்றனர்.

கொழும்பு புதிய மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்தனர்.

இதன்போது கைதிகளின் விபரங்கள் குறித்து கேட்டறியப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அரசாங்கத்துடனான அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது கலந்துரையாடப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமன்னிப்பு அல்லது உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் குறித்து இதன் பின்னர் தமது கட்சி தீர்மானிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த சந்திப்பு குறித்து கருத்துரைத்த அரசியல் கைதி ஒருவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற அடிப்படையில் இல்லாமல் சுமந்திரன் ஒரு சிரேஷ்ட சட்டத்தரணி என்ற அடிப்படையிலேயே இந்தப் பேச்சு நடத்தப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அரசியல் கைதிகளின் நலன்களை கவனிப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் அரசியல் கைதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் கோரியுள்ளனர் என்றும் அரசியல் கைதி தெரிவித்துள்ளார். (ச-5)

# ஐ.நாவின் அறிக்கை...

குழுவின் அறிக்கையை ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையாக ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று அரசுக்கு ஆலோசனை வழங்கியிருப்பதுடன் அதற்கு தருஸ்மன் அறிக்கை என பெயரிட்டவர் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கதான் என்பது தற்போது வெளிவந்துள்ளது.

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு வழங்கிய ஆலோசனையின் பேரிலேயே தருஸ்மன் அறிக்கை என தற்போது அரச தரப்பால் அழைக்கப்பட்டு வருகிறது.

அதன் காரணமாகவே யாரைக்கேட்டு அதனை தருஸ்மன் அறிக்கையென்று அடையாளப்படுத்தினார்கள், எங்களிடம் ஒரு வார்த்தை கேட்டிருக்கக் கூடாதா என்றெல்லாம் அமைச்சர் விமல் வீரவன்ச கடுமையாக கருத்து வெளியிட்டிருந்தார்.

அதற்கிடையே அரசாங்கத்தின் தவறுகளைப் பாதுகாக்கும் வகையில் நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க வேண்டுமென்ற ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாடு குறித்து ஐக்கிய தேசியக் கட்சிக்குள் அதிருப்தி தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

# உள்ளூராட்சி மன்றங்களை...

அதிகாரப் பிரதேசத்துக்குள் மாற்றுமளவுக்கு அவர்கள் பாதுகாப்பமைச்சு மூலமாக அதிகாரமளிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று எதிர்வரும் காலங்களில் ஒவ்வொரு பிரதேச செயலக அலுவலகங்களினதும் நிர்வாக நடவடிக்கைகளைக் கண்காணிக்க தலா ஒரு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (ஏ.எஸ்.பி) வீதம் நியமிப்பதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

விடுதலைப் புலிகளுடனான யுத்தம் முடிபுற்றதைத் தொடர்ந்து முப்படையினரையும் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப் போவதாக அரசாங்கம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# ஆசிரியர் இடமாற்றம்...

கடிதத்தின் பிரதி மற்றும் தகுந்த ஆதாரங்களைக் காட்டும் ஆவணங்கள் என்பவற்றையும் எடுத்து வருமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை மேன்முறையீட்டுப் பரிசீலனை நேர ஒழுங்குக்கு அமைய நடைபெறவுள்ளதால் யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்தோருக்கு காலை 9-10 மணிவரையும், தீவகம் 10.00-10.30, வடமராட்சி 10.30-11.00, வலிகாமம் 11.00-11.30, தென்மராட்சி 11.30-12.00, வவுனியா தெற்கு 2.00-3.00 என்ற அடிப்படையில் சமுகமளிக்குமாறும் அவர் அறிவித்துள்ளார். (ச-5)

# ஐ.நா. நிபுணர் குழுவின்...

கிழக்குப் பகுதிக்கான பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ள அவர், நேற்றுக் காலை வெலிகந்த படைத்தளத்தில் சுமார் 2 ஆயிரம் படையினர் மத்தியில் உரையாற்றினார்.

அங்கு கருத்து வெளியிட்டுள்ள இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய மேலும் கூறியதாவது, ஐ.நாவின் அறிக்கையை நான் முழுமையாக வாசித்துள்ளேன். அது முற்றிலும் பக்கச்சார்பாகவே தொகுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் நன்மதிப்பைக் குறைக்கும் வகையிலான தவறான தகவல்கள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

போரின் இறுதிக்கட்டத்தில் வன்னிக் களமுனை நடவடிக்கைகளுக்குத் தளபதியாக இருந்த எனக்கு அங்கு என்ன நடந்தது என்பது நன்றாகத் தெரியும்.

இந்த அறிக்கை நாட்டினதும், அதிபரினதும், பாதுகாப்புச் செயலரினதும் மதிப்பை குன்றச்செய்யும் வகையில் அமைந்துள்ளது.

சில குழுக்களும் தனிநபர்களும் கொடுத்துள்ள தகவல்களின் அடிப்படையிலேயே தருஸ்மன் அறிக்கை தொகுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் அவை ஆதாரமற்றவை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ச-5)


இனிமையான நினைவுகளுக்கு...
GREEDY'S
Hotel & Restaurant

இந்திய, இலங்கை, சீன உணவு வகைகள்
AC, NON AC அறைகள் வாடகைக்கு உண்டு
T.V இலவச இன்டர்நெட் சேவை
போக்குவரத்து தேவைகளுக்கான வாகன வசதி செய்து தரப்படும்
205, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ராஜா தியேட்டர் பில்டிங்)
தொ.பே: 021 2221939, 0776081701, 0778338549

K. சுதன்
வரலாறு
A/L 2013
புதிய பிரிவு
ஆரம்பம்: இன்று 07.05.2011
சனி 9-10 A.M
உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.
பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

Group Class ICT
தரம் 10, 11 மாணவர்களுக்கான ICT வகுப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் கற்பிக்கப்படும்.
தொடர்புக்கு :-
0779185724


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.